புத்தாண்டு வாழ்த்துக்கள்

இந்த · ஆண்டிலே · எங்கள்
வரவேற்பைப் · பெற்று · வெற்றிமுழக்கமிடப்
போகும் · எங்கள் · மணியான.........

மூன்று வெளியீடுகள்

கன்னியின் காதலி

ராம்நாத் · சேகர்
...தயாரிப்பு...

கிருஷ்ண விஜயம்

டைரக்ஷன்:
சுந்தர்ராவ் நட்கர்னி

விஜய குமாரி

டைரக்ஷன்:
ஏ.எஸ்.ஏ.சாமி

ஜுபிடர் பிக்சர்ஸ்

...சர்க்யூட்...



Gevaert

அது கேவர்ட்டாக இருந்தால் நல்லது



● போட்டோ தொழிலாளர்களுக்கும் சரி, அமெச்சூர்களுக்கும் சரி, அவர்களது வெற்றிக்கு சுலபமான வழி — சிறந்த பொருள்களைத் தேர்ந்தெடுத்தலைன்தான். உங்களுக்குத் தேவையான பொருள்களைத் தேர்ந்தெடுக்கும்போது, உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான ''கெவர்ட்'' என்ற பெயருள்ள பொருள்களையே பார்த்து வாங்குங்கள்.

உரிமைபெற்ற இறக்குமதியாளர்கள்:

Allied Photographics Limited பம்பாய் ● கல்கத்தா ● மதராஸ்


துப்பட்டிகள்
துப்புரவாகவும்
வெண்மையாகவும்
சலவை செய்யப்
பட்டுள்ளன...
...அது
ஸன்லைட் சோப்பினால்
தான்!
SUNLIGHT SOAP
துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகச்
சலவை செய்கிறது

S. 107-172 TM

கல்கி
பொருளடக்கம்

மலர் 8
இதழ் 38

ஏப்ரல் 17

விரோதி ௵ சித்திரை 5௳

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

பக்ஷிராஜாவின்

பவளக்கொடி

மஹாலிங்கம்... ராஜகுமாரி... வரதன்... ஸரோஜினி
கிருஷ்ணன்... மதுரம்... லலிதா... பத்மினி நடித்தது.

இப்பொழுது நடைபெறுகிறது

மதராஸ்

பிரபாத் - ஸன் - ஸரஸ்வதியில்

தினசரி 3, 6-15 & 9-30 மணிக்கு (வார விடுமுறை கிடையாது)

மதுரை	...	சிந்தாமணி
கோயமுத்தூர்	...	ராஜா, ஷண்முகா
திருச்சி	...	வெல்லிங்டன்
பெங்களூர்	...	சிவாஜி, ரூப்மஹால்
கும்பகோணம்	...	டயமண்ட்
திருநெல்வேலி	...	ராயல்
காரைக்குடி	...	சரஸ்வதி
வேலூர்	...	தாஜ்
காஞ்சீபுரம்	...	ராஜா
பாண்டிச்சேரி	...	நியோ கமர்ஷியல்
தென்காசி	...	பாக்யலக்ஷ்மி
புதுக்கோட்டை	...	வெஸ்ட்
கரூர்	...	டாக்கி டாக்
சித்தூர்	...	பிரேமனா
மங்களூர்	...	சென்ட்ரல்
கொல்லம்	...	லக்ஷ்மி
ஆலப்புழை	...	சீமாட்டி
கோட்டயம்	...	சென்ட்ரல்
கண்ணனூர்	...	ஜவஹர்
கள்ளிக்கோட்டை	...	ராதா
பாலக்காடு	...	நியூ
ஆம்பூர்	...	கணேஷ், சாமுண்டீஸ்வரி
சேலம்	...	பேலஸ்
ஈரோடு	...	ராஜாராம்
சிதம்பரம்	...	வடுகநாதன்
தஞ்சாவூர்	...	நியூடவர்
மன்னார்குடி	...	சம்பகா
திண்டுக்கல்	...	என். வி. ஜி. பி. டாக்கீஸ்
விருதுநகர்	...	சென்ட்ரல்
திருவனந்தபுரம்	...	நியூ தியேட்டர்
எர்ணாகுளம்	...	மேனகா
கொச்சி	...	செலக்ட்
திருச்சூர்	...	ஜோஸ்
நாகர்கோயில்	...	கிருஷ்ணா, ஸ்ரீராம்

மற்றும் இதர முக்கிய நகரங்களில் விரைவில் திரையிடப்படும்

கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 38

என்ன செய்தி?

யார் மேல் குற்றம்?

அன்னியர்கள் இங்கு எஜமானர்களாக இருந்ததைத் தான் இந்திய மக்கள் ஆட்சேபித்தனர். ஆனால் அவர்கள் இங்கு ஜனங்களின் ஊழியர்களாக இருப்பதை யாரும் ஆட்சேபிக்கவில்லை. அது போலவே வெளிநாட்டினரின் மூலதனம் இந்தியாவின் பொருளாதார நிலையைத் தன் இஷ்டப்படி ஆட்டிவைக்கும் எஜமான ஸ்தானம் வகிப்பதைத்தான் இந்தியா விரும்பவில்லை. அதற்கு மாறாக இந்த நாட்டின் பொருளாதார நிலைக்கு உதவியாக இருப்பதாயின் வெளியாரின் மூலதனத்தை இந்தியா வரவேற்கிறது. இந்த விஷயத்தைப் பண்டித ஜவாஹர்லால் நேரு இந்தியா பார்லிமெண்டில் தெளிவாக்கியது, இந்தியாவில் மூலதனம் போட்டிருப்பவர்களும் போட விரும்புகிறவர்களுமான அன்னியநாட்டு முதலாளிகளுக்கு மிகவும் திருப்தியைக் கொடுத்திருக்கிறது. இந்திய முதலாளிகளைப் போலவே வெளிநாட்டு முதலாளிகளையும் கருதுவோம் என்று பண்டித ஜவாஹர்லால் உறுதி கூறியிருக்கிறார்.

ஆதியில் பிரிட்டிஷார் இங்கு வர்த்தகர்களாகவே வந்தார்கள். பிறகு அரசியல் எஜமானராகவும் ஆட்சி புரிவோராகவும் மாறிவிட்டனர். அப்படியிருக்க, மீண்டும் அன்னியநாட்டு முதலாளிகளுக்கு இந்த நாட்டில் இடம் கொடுக்கலாமா என்று கேட்கலாம். பல நூறு கோடி ரூபாய் பணம் புழக்கத்தில் இராமல் எங்கேயோ தேங்கியிருப்பதால்தான் பணக் கிராக்கி அதிகமாகியிருக்கிறது என்று சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தோம். முதலாளிகள் தேக்கிவைத்துள்ள பணம் வெளியில் வரவேண்டும் என்பதற்காக இந்திய சர்க்கார் பல சலுகைகள் காட்டினர். தொழில்களைத் தற்போது தேச உடைமையாக்கும் உத்தேசம் தங்களுக்கு இல்லையென்று உறுதி கூறினர். ஆனால், பதுக்கி வைக்கப்பட்டுள்ள பணம் வெளியே வந்ததாகத் தெரியவில்லை. இந்நிலைமையில் சர்க்கார் தேசத்தின் ஆக்க வேலைகளுக்காகவும் தொழில்களின் அபிவிருத்திக்காகவும் உலக பாங்கியிலிருந்து கடனை நாடுவதிலும் அன்னியர்களின் மூலதனத்தை வரவேற்பதிலும் தவறு என்ன இருக்கிறது? தவிர, அன்னியர்களின் மூலதனத்தினால் நம் தேசத்தின் நன்மைக்குக் குந்தகம் ஏற்படாமல் பாதுகாக்கும் அதிகாரமும் ஆற்றலும் நமது தலைவர்களுக்கு இருப்பதால், அவ்விஷயமாக யாரும் கவலைப்படவேண்டிய அவசியமில்லை.

பகற் கொள்ளை!

ஜெர்மனி வெகு காலமாகத் தன்னுடைய ஆதிக்கத்தின் கீழ் வைத்துக் கொண்டிருந்த தென் மேற்கு ஆப்பிரிக்காவை முதலாவது மகாயுத்தத்தின் போது இழந்து விட்டது. அதிலிருந்து தென் மேற்கு ஆப்பிரிக்கா சர்வதேச சங்கத்தின் மேற்பார்வையில் இருந்து வந்தது. எனவே, இப்போது அந்த தேசம் சர்வதேச சங்கத்தின் ஸ்தானத்தில் இருந்து வரும் ஐக்கிய நாடுகள் சங்கத்தின் மேற்பார்வையில் இருப்பது தான் நியாயமாகும். மேற்படி தேச மக்களும் அவ்விதம் இருப்பதையே விரும்புகிறார்கள். ஆனால் அதைத் தென்னாப்பிரிக்கா கபளீகரம் செய்துவிட முனைந்திருக்கிறது. அதை ஐ. நா. சங்கத்தின் மேற்பார்வையில் விடவேண்டும் என்று தென்னாப்பிரிக்கா சர்க்காரை வற்புறுத்தி அந்த மகாசபையில் மூன்று தடவை தீர்மானம் நிறைவேறியது. தீர்மானத்தை ஆதரித்து நாற்பத்து மூன்று தேசங்களின் பிரதிநிதிகள் வோட்டுக் கொடுத்தனர்; அதற்கு விரோதமாகத் தென் ஆப்பிரிக்கா பிரதிநிதியைத் தவிர வேறு எவரும் வோட்டுக் கொடுக்கவில்லை!

உலக மகாசபையின் ஏகோபித்த அபிப்பிராயம் தங்களுக்கு விரோதமாக இருந்தும்கூட, தென்னாப்பிரிக்கா சர்க்கார் அதை லட்சியம் செய்யாமல், தென் மேற்கு ஆப்பிரிக்காவைக் கபளீகரம் செய்வதற்கான மசோதா ஒன்றை இப்போது பார்லிமெண்டில்



"என்ன ஸார்! கையிலே பை வைத்திருக்கிறீர்களே! எங்கே போய் என்னத்தை வாங்கிக்கொண்டு வருகிறீர்கள்?"

"இந்தக் காலத்தில் சாமான்கள் விக்கிற விலையிலே என்னத்தை வாங்குவது, ஸார்! பீச்சுக்குப் போய்க் காற்று வாங்கிக்கொண்டு வருகிறேன்!"

நிறைவேற்றி யிருக்கிறார்கள். ஐக்கிய நாடுகள் சங்கத்தின் தீர்ப்பை இவ்வாறு நேரடியாக அலட்சியம் செய்து நிறவெறியிலும், பகற் கொள்ளையிலும் இறங்கியுள்ள தென்னாப்பிரிக்கா மீது ஐக்கிய நாடுகள் சபை என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போகிறது?

பின்பற்ற வேண்டாம்

சென்னை மாகாணத்தை இது வரை எத்தனையோ மாகாணங்கள் பல துறைகளில் பின்பற்றி வந்திருக்கின்றன. இப்போது கிழக்கு பஞ்சாப் மாகாணமும் தன்னைப் பின்பற்றக்கூடிய பாக்கியத்தைச் சென்னை மாகாணம் அடைந்திருக்கிறது!

ஒரு வாரத்துக்கு முன்புவரை டாக்டர் கோபிசந்த் பார்க்கவா கிழக்கு பஞ்சாப் பிரதம மந்திரியாக இருந்தார். திடீரென்று ஒரு நாள் அந்த மாகாண சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக்கு டாக்டர் பார்க்கவா மீது நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது. டாக்டர் பார்க்கவா இதைக் கேள்விப்பட்டதும் "அப்படியா சேதி? ரொம்ப நல்லதாகப் போச்சு!" என்று சொல்லிவிட்டு நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்காகக் காத்துக்கொண்டிராமல் தம்முடைய பதவியையே ராஜிநாமாச் செய்துவிட்டார். பிறகு கட்சித் தலைவர் தேர்தல் நடந்தது. இரண்டு பேர் போட்டி போட்டார்கள். ஒருவருக்கு 39 ஓட்டுகளும் மற்றொருவருக்கு 33 வோட்டுகளும் கிடைத்தன. ஆறு வோட்டு அதிகம் பெற்ற ஸ்ரீ லாலா பீம்சேன் ஸாச்சார் பிரதமராக வந்துவிட்டார்.


சென்னை மாகாணத்தைக் கிழக்கு பஞ்சாப் மாகாணம் பின்பற்ற ஆரம்பித்துவிட்டது; மற்ற மாகாணங்களும் பின்பற்றாமலிருக்கக் கடவுள் கிருபை செய்ய வேண்டும்.

ஒரு சீர்திருத்தம்

நாயின் வாலை நிமிர்த்தலாம். இந்தியா விஷயத்தில் பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் கட்சியினரின் மனதை மாற்றி விடலாம். ஆனால், பிரிட்டிஷ் வானொலி நிலையத்தின் (பி. பி. ஸி.) பொய்ப் பிரசாரத்தை மாத்திரம் நிறுத்துவது அசாத்தியமான காரியம் என்று தோன்றுகிறது. இந்தியா சுதந்திரம் பெற்றது முதல் பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவின் நட்பை இழக்கக் கூடாது என்பதில் சிரத்தை கொண்டிருக்கிறார்கள். இந்தியத் தலைவர்களின் பெருமையைப் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் உணர்ந்து வருகிறார்கள். பிரிட்டிஷ் பத்திரிகைகளின் மனம் மாறி அவை இந்திய சர்க்காரின் திறமையையும் நேர்மையையும் போற்றி வருகின்றன. ஆனால் பி. பி. ஸி. மாத்திரம் அப்போதைக்கப்போது இந்தியாவுக்கு விரோதமாக துஷ்பிரசாரம் செய்வதை நிறுத்தவில்லை. ஹைதராபாத் விஷயமாக பி. பி. ஸி. பொய்ப் பிரசாரம் செய்ததை யாவரும் அறிவார்கள். அப்போது இந்தியாவில் எழுந்த கண்டனத்தின் பலனாக அதன் பொய்ப்பிரசாரம் நிற்கும் என்று நினைத்தவர்கள் உண்டு. ஆனால், காஷ்மீர் பிரச்னையை யொட்டி முட்டுக்கட்டை ஏற்பட்டிருக்கும் இச்சமயத்தில் அது மீண்டும் பித்தலாட்டப் பிரசாரத்தில் இறங்கி யிருக்கிறது. "காஷ்மீரத்தில் சர்வஜன வோட்டு எடுத்தால் முடிவு பாகிஸ்தானுக்குச் சாதகமாக இருக்கும் என்பதை இந்தியா நன்கு தெரிந்து கொண்டிருக்கிறது. எனவே சர்வ ஜன வோட்டு எடுப்பதைத் துரிதப்படுத்த இந்தியா விரும்பவில்லை" என்று சமீபத்தில் பிரசாரம் செய்தது. எனவே இது வரையில் பொறுத்துக் கொண்டிருந்த இந்திய சர்க்கார் அகில இந்திய ரேடியோவின் மூலம் அஞ்சல் செய்து வந்த பி. பி ஸி ஆங்கிலச் செய்தி அறிவிப்பை இப்போதிருந்து நிறுத்தி விட்டார்கள். அகில இந்திய ரேடியோவில் செய்ய வேண்டிய சீர்திருத்த முறைகளில் இதுவும் ஒன்றுதான் அல்லவா?

புது மந்திரிகளுக்குப் புது இலாகாக்கள்

சென்னைச் சட்ட சபையிலுள்ள கோஷ்டிகள் எல்லாவற்றையும் திருப்திப்படுத்துவதற்கு ......





......இன்னும் பல புதிய மந்திரி பதவிகளைச் சிருஷ்டிக்கலாம் என்று யோசனை சொல்லப்படுகிறது. அப்படி ஏற்படும் புதிய மந்திரிகளுக்குச் சில புது இலாகாக்களைச் சிருஷ்டித்துத் தருகிறோம்.

பிரிவினை பிழைக்காது!

பாரத நாடு சுதந்திரம் அடைந்த பின், எல்லாவற்றையும் விட தேச மக்களின் ஒற்றுமையே,—தேசத்தின் ஐக்கியமே மிகவும் முக்கியமானது என்று நமது அருமைத் தலைவர்கள் இடைவிடாது வற்புறுத்திக் கூறி வருகிறார்கள். அதற்கிணங்க, சிதறிக் கிடந்த சமஸ்தானங்களை யெல்லாம் ஐக்கியப்படுத்தி வருகிறார்கள். சமஸ்தானங்களை மாகாணங்களுடன் ஐக்கியமடையச் செய்து வருகிறார்கள்.

இவ்வாறாக இந்தியாவை ஐக்கியப் படுத்தவும், ஐக்கிய இந்தியாவைப் பலப்படுத்தவும் நமது தலைவர்கள் பெரு முயற்சி செய்து வருகையில்;—'ஐக்கியம்', 'ஐக்கியம்' என்று அவர்கள் இரவு பகலாகக் கோஷம் செய்து வருகையில், மற்றொருபுறத்தில் 'பிரிவினை', 'பிரிவினை' என்ற கூக்குரலும் ஜனங்களின் காதைத் துளைத்து வருகிறது!

முதன் முதலாக ஆந்திராவில் எழுந்த பிரிவினைக் கூக்குரல் பின்னர் தொத்து நோயைப் போல் நாடெங்கும் பரவியது.

அந்த மாகாணப் பிரிவினைக் கூக்குரல் உச்சஸ்தானத்தை அடைந்ததும் இந்திய அரசியல் நிர்ணய சபைத் தலைவர், அலகாபாத் ஹைகோர்ட் நீதிபதியாக இருந்த ஸ்ரீ எஸ். கே. தார் தலைமையில் மற்றும் இரண்டு பிரமுகர்கள் அடங்கிய பாஷாவாரி மாகாணக் கமிஷன் ஒன்றை நியமித்தார். அவர்கள் எல்லா மாகாணங்களுக்கும் சென்று ஆயிரக் கணக்கான சாட்சிகளை விசாரித்தனர்.

இறுதியில் அவர்கள் விடுத்த அறிக்கை பிரிவினை வாதிகளைத் தூக்கி வாரிப் போட்டது.

''மாகாணப் பிரிவினையைக் காட்டிலும் எவ்வளவோ அத்தியாவசியமான, அவசரமான பிரச்னைகள் தீர்ந்தபாடில்லை. தேசத்தின் ஐக்கியம் இன்னும் நிலைபெறவில்லை. அதற்குள் மாகாணப் பிரிவினை முறையைக் கைக்கொள்வது அந்த ஐக்கியத்தைச் சிதைப்பதாக முடியும். மாகாணப் பிரிவினையால் ஏற்படும் பணச் செலவைச் சமாளிப்பதும் தற்போதைய நிலைமையில் சுலபமான காரியமல்ல. பிரிவினைவாதிகள் கோரும் ஒரு மாகாணமாவது தன் செலவைத் தானே ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலைமையில் இல்லை. எனவே, இந்தியாவின் க்ஷேமத்தை முக்கியமாகக் கருதும் பட்சத்தில், மாகாணவாதிகள் தற்போது பிரிவினைக் கோரிக்கையை வற்புறுத்தக் கூடாது'' என்று மேற்படி கமிஷனர்கள் தங்களுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்கள்.

அவ்வளவுதான். அந்த அறிக்கை குறிப்பாக மாகாண வாதிகளுக்கு மிகுந்த ஏமாற்றத்தை உண்டு பண்ணியதுடன், அவர்களுடைய கூக்குரலை இன்னும் அதிகமாக்கியது. பலரும் அதைக் கடுமையாகக் கண்டித்தனர்.

* * *

அவ் விஷயத்தை மேலும் பரிசீலனை செய்வதற்காக ஜெயபுரி காங்கிரஸில் நியமிக்கப்பட்ட கமிட்டியின் அறிக்கை இப்போது வெளியாகியிருக்கிறது.

இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு, உதவி பிரதம மந்திரி சர்தார் பட்டேல், காங்கிரஸ் அக்ராசனர் டாக்டர் பட்டாபி சீதாராமய்யா இம் மூவரும் கமிட்டியில் இருப்பதால், அதன் அறிக்கை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

பாஷாவாரி மாகாணங்களின் அமைப்பைச் சில வருஷ காலத்துக்கு ஒத்தி வைக்க வேண்டும் என்பதுதான் அவர்களுடைய அறிக்கையின் சாரமாகும்.

தற்போது பாஷாவாரியாக மாகாணங்களை அமைக்க முற்படுவதாயின் எத்தனை புதிய பிரச்னைகள் எழும் என்பதையும், ஜனங்களிடையே மேற்கொண்டு எவ்வளவு குரோதம் ஏற்படும் என்பதையும் கமிட்டியிலுள்ள மாபெரும் தலைவர்கள் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

எனினும், ஆந்திர மாகாணம் ஏற்படுவதில் அதிகக் கஷ்டம் இராது என்பதையும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆந்திர மாகாணம் ஏற்படுவதாயின், ஆந்திரர்கள் சென்னை நகரில் தங்களுக்கு உரிமை

உண்டு என்ற கோரிக்கையை அடியோடு கைவிட்டுவிட வேண்டும்.

சென்னை நகரம் தமிழ் நாட்டுக்குத்தான் சொந்தம்; அதைப் பற்றி விவகாரத்துக்கே இடமில்லை.

குஜராத், மகாராஷ்டிர மாகாணங்கள் ஏற்படும்போது பம்பாய் நகரம் எந்த மாகாணத்துடனும் சம்பந்தமின்றித் தனி மாகாணமாக இருக்க வேண்டும்.

இவைதான் கமிட்டி அறிக்கையின் முக்கியமான அம்சங்கள்.

எனவே, சென்னை நகரம் ஆந்திரர்களுக்கு இல்லை என்பது இப்போது நிச்சயமாகி விட்டது.

* * *

மாகாணங்களைப் பாஷாவாரியாகப் பிரிக்க வேண்டும் என்று காங்கிரஸ் பல வருஷங்களாகக் கூறி வந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்கவில்லை.

பெரிய தொழில் துறைகளெல்லாம் தேச உடைமையாக இருக்கவேண்டும் என்பதுதான் காங்கிரசின் கொள்கை.

எனினும், அக் கொள்கையை உடனே அமுலுக்குக் கொண்டு வருவது அனுஷ்டான சாத்தியமா?

அதுபோலவே பாஷாவாரியாக மாகாணங்களை நினைத்தமாத்திரத்தில் சிருஷ்டித்து விடமுடியாது.

முதலில் அதற்கான சூழ்நிலையை உண்டு பண்ண வேண்டும். அத்தகைய மாகாணங்கள் அமைவது அன்பு, அமைதி, வாதி, ஒத்துழைப்பு இவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும்.

புதிய மாகாணங்களைப் பிரிக்கு முன் புதிய பிரச்னைகளும் புதிய குரோதங்களும் எழாமல் பாதுகாக்க வேண்டும் என்றும் தலைவர்கள் கூறியிருக்கிறார்கள்.

தார் கமிஷனின் அறிக்கையை ஆந்திரர்கள் கண்டித்தது போல் மேற்படி அறிக்கையைக் கண்டிக்க முடியாது.

ஏனெனில், உலகத்தின் நன்மதிப்பிற்குரிய தலைவர்கள் நீர்க்காலோசனையின் மீது அந்த அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள்.

அதைத் தவிர, ஆந்திரர்களின் தலைவரும் காங்கிரஸ் அக்ராசனருமான டாக்டர் பட்டாபி சீதாராமய்யாவும் கமிட்டி அங்கத்தினர்களில் ஒருவர்.

எனவே, ஆந்திரர்களின் க்ஷேமத்தில் டாக்டர் பட்டாபி சீதாராமய்யாவைக் காட்டிலும் தங்களுக்குத்தான் அதிக அக்கறை உண்டு என்று எவரும் கூறத் துணிய மாட்டார்கள்.

சென்னை நகரம் ஆந்திரர்களுக்குச் சொந்தமல்ல என்பது நிச்சயமாகி விட்டதால் இனி அவ்விஷயமாக அதிக சிக்கல் எதுவும் இருப்பதற்கில்லை.

சென்னையில் தற்போதுள்ள கட்சிப் பிணக்குகளுக்கும், குழப்படிகளுக்கும் ஆந்திர மாகாணவாதிகள்தான் முக்கிய காரணஸ்தர்கள் ஆவர்.

எனவே, ஆந்திர மாகாணம் ஏற்பட்டு விட்டால், சென்னை காங்கிரஸ்வாதிகளிடையே உள்ள தகராறு பெரிதும் குறைந்து விடும்.

ஆந்திரர்களின் நன்மைக்காகத் தனி மாகாணம் அமைய வேண்டியது அவசியம் என்று அவர்கள் கூறி வருகிறார்கள்.

ஆனால், தமிழ் மகா ஜனங்களின் நன்மையை உத்தேசித்தும் ஆந்திர மாகாணம் அமைந்து தீரவேண்டும் என்ற நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது!

* * *

கேரள, கர்னாடக மாகாணங்கள் ஏற்படவும் ஆதரவு அளிக்க வேண்டும் என்பது மூவர் கமிட்டியின் அபிப்பிராயம்.

ஆனால், அவ்வாறு ஏற்படுவதற்கு முன் அடுத்துள்ள சமஸ்தானங்களின் பிரச்னை ஒரு வழியாக முடியவேண்டும் என்று தலைவர்கள் கூறியிருக்கிறார்கள்.

"தற்போதைய மாகாணப் பிரதேசங்கள் சமஸ்தானங்களுடன் சேர்வதன் மூலம் தனி மாகாணங்கள் ஏற்படுவதற்கில்லை. ஆனால், அதற்கு மாறாக சமஸ்தானங்கள் மாகாணப் பிரதேசங்களுடன் சேர்ந்துதான் தனி மாகாணம் அமையவேண்டும்" என்று கமிட்டியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதாவது சமஸ்தானங்களின் தனி அந்தஸ்து அடியோடு மறைந்துவிட வேண்டும்.

உதாரணமாக, திருவாங்கூரும் கொச்சியும் சென்னை மாகாணத்துடன் சேர்ந்து விட்டால், பின்னர் பாஷாவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்படும்போது ஐக்கிய கேரளம் ஏற்படுவது சுலபமாக இருக்கும்.

இவை போன்ற பல விஷயங்களையும் ஜவாஹர்லால்ஜி கமிட்டி சந்தேகத்துக்கும் தர்க்கவாதத்துக்கும் இடமின்றித் தெளிவுபடுத்தியிருப்பதன் மூலம், பாஷாவாரி மாகாணப் பிரிவினைப் பிரச்னை அன்னியோன்னிய பாவத்துடனும் சுமுகமாகவும் தீருவதற்கு வழி பிறக்கும் என்று நம்புகிறோம்.

அட்டைப்பட விளக்கம்

திருவாரூர் தமிழ்த் திருவிழா



தமிழகத்தில் தமிழ்ப் புத்தாண்டு பிறந்திருக்கிறது. புதிய வருடத்தின் பெயர் பிரமாதீ. தீமைக்கும் இழிதகைமைக்கும் சிறுமைக்கும் அற்பப் பகைமைக்கும் இந்தப் புதிய தமிழ் வருஷம் பெரிய விரோதியாக இருக்குமாக.

தமிழர்கள் பழமையான நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்தவர்கள். பழந் தமிழ் நாட்டு மக்கள் அன்பைப் போற்றினார்கள்; அருளைப் போற்றினார்கள்; அறிவையும் அடக்கத்தையும் கொண்டாடினார்கள். ஆண்மைக்குக் கௌரவம் அளித்தார்கள்; பெண்மைக்குப் பெருமை தந்தார்கள்; தாயைத் தெய்வமெனப் போற்றி வணங்கினார்கள்.

பழந்தமிழர்கள் கல்வியைக் கண்ணென மதித்தார்கள்; கலையை உயிரென வளர்த்து இன்புற்றார்கள்; கவிதையில் காணும் இன்பத்தைக் கடவுளிடத்துக் காணும் ஆனந்தத்துக்கு இணையாகக் கருதி மகிழ்ந்தார்கள்.

தமிழ் தெய்வத்தன்மை பொருந்தியது; தமிழ்நாடும் தமிழரின் பண்பாடும் என்றும் அழியாத அமரத்தன்மை வாய்ந்தன. ஒவ்வொரு சமயம் மங்கியிருப்பது போலக் காணப்பட்டாலும் மீண்டும் மீண்டும் புத்துயிரும் புது ஒளியும் பெற்று விளங்குவன.

தமிழகத்தில் இந்த நாளில் தமிழரின் பழைய கலைச் செல்வங்களைப் போற்றிப் பாதுகாக்கவும் புதிய துறைகளில் தமிழை வளர்க்கவும் பல முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் ஒன்று தமிழ் வளர்ச்சிக் கழகம் நடத்தும் தமிழ்த் திருநாள் கொண்டாட்டம். சென்ற ஆண்டில் இந்த விழா மதுரைப்பதியில் நடந்தது. இவ்வாண்டில் திருவாரூரில் நடைபெறுகிறது.

திருவாரூர் பழந் தமிழ்நாட்டின் சரித்திரத்தில் புகழ் பெற்ற ஊர். திருவாரூரைத் தலைநகராகக் கொண்ட மனுநீதிச் சோழன் சரித்திரத்தை அறியாத தமிழர் யார்? பிற்காலத்தில் திருவாரூர் நகரம் தமிழும் தமிழ்க் கலைகளும் செழிப்புற உதவிய வளர்ப்புப் பண்ணையாக இருந்து வந்திருக்கிறது.

"கோவில் ஐந்து வேலி; குளம் ஐந்து வேலி; ஓடை ஐந்து வேலி" என்று சிறப்பிக்கப்பட்ட ஊர் திருவாரூர்.

திருவாரூர் தியாகராஜரின்பேரில் இணையற்ற தமிழ்ச் சுவை வாய்ந்த தேவாரப் பதிகங்கள் பல பாடப்பெற்றிருக்கின்றன.

திருவாரூர்த் தேர் தமிழ் நாட்டிலேயே பெரிய தேர் என்பது பிரசித்தமான விஷயம்.

நூறாண்டுகளுக்கு முன்பு கர்நாடக சங்கீதத்துக்குப் புத்துயிர் தந்த தியாகராஜரும் தீக்ஷிதரும் திருவாரூரில் பிறந்தவர்கள்.

இத்தகைய பல சிறப்புக்கள் வாய்ந்த திருவாரூரில் தமிழ்ப் புத்தாண்டில் தமிழ்த் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. இந்த ஆண்டு தமிழ் விழாவைப் பல துறைகளிலும் நாட்டின் முன்னேற்றத்துக்குரிய திருவிழாவாக நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பௌதிக ஆராய்ச்சித் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் இலக்கியத் துறையிலும் தனித்தனி மகாநாடு கூடிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெறுகின்றன. இசைத் தமிழும் நாடகத்தமிழும் தமிழ் விழாவில் சிறப்பாக இடம் பெற்றிருக்கின்றன.

தமிழ் அன்பிலும் கலை ஆர்வத்திலும் சிறந்த சோழநாட்டு மக்கள் தமிழ்த் திருவிழாவில் பரிபூரணமாக ஒத்துழைத்து வெற்றிகரமாக நடத்திவைப்பார்கள் என்று நம்புகிறோம்.

• • •

திருவாரூர்த் திருக்கோயிலின் கோபுரங்களையும் மணி மண்டபங்களையும் அவற்றுக்கு மேலெழுந்து காட்சிதரும் தமிழ்க் கலைத் தெய்வத்தின் புனிதமான திரு உருவத்தையும் நமது இந்த இதழ் அட்டைப் படம் தாங்கி வருகிறது.

சில்லறை விஷயங்கள்

நீதி மந்திரி ஜான் மத்தாய் கார்டு விலையை முக்காலணாவாக்கி விட்டதற்காகப் பலர் அவரைக் கண்டிக்கிறார்கள்.

ஆனால், நான் மாத்திரம் அவரை வாழ்த்தி ஒரு முக்காலணா கார்டு எழுதிப் போடலாமென்று நினைத்திருக்கிறேன்.

நான்கு வருஷத்துக்கு முன்பு நான் ஒரு கட்டுக் கார்டு வாங்கினேன்—ஏதோ எழுதுவதற்காகவென்று. ஆனால் அதை உபயோகிக்கவில்லை. அதற்குள் கார்டு விலை முக்காலணாவிலிருந்து அரையணா வாகி விட்டது. "அடாடா! நமக்குக் காலணா நஷ்டமாகி விட்டதே!" என்று நான் வருத்தப்பட்டேன்.

ஆனாலும் எனக்கு ஒரு நம்பிக்கை இருந்தது. அந்தக் கார்டுக் கட்டை எடுத்து அப்படியே பத்திரமாகப் பெட்டியில் வைத்து விட்டேன். கொஞ்ச காலைக்குப் பிறகு அந்தக் கார்டுகள் ஞாபகமே எனக்கு இல்லாமல் போய்விட்டது. நேற்று தற்செயலாகப் பெட்டியைத் திறந்து அதிலுள்ள குப்பைகளை யெல்லாம் எடுத்துக் கொட்டிக் கொண்டிருந்தபோது அந்தக் கார்டுக் கட்டு கண்ணில் பட்டது.

அடேயப்பா, எனக்கு உண்டான ஆனந்தத்துக்கு அளவே இல்லை! ஜான் மத்தாய் கார்டு விலையை முக்காலணா வாக்கியதற்காக நான் அவரைப் பாராட்டத்தானே வேண்டும்! அவரைப் பாராட்டி ஒரு முக்காலணா கார்டு எழுதிப் போடவேண்டும்!

• •
•

"ரெட்டியார் ஆட்சி போய் விட்டது!" என்று சிலர் கூறகலப்படுகிறார்கள்.

ரெட்டியார் ஆட்சி போய்விட்டது என்று எப்படிச் சொல்ல முடியும்?

புதிய சென்னை மந்திரி சபையில் எத்தனை ரெட்டியார்கள் இருக்கிறார்கள், பாருங்கள்!

1. கோபால் ரெட்டி
2. சீதாராம ரெட்டி
3. சஞ்சீவி ரெட்டி

இந்த மூன்று ரெட்டியார்களோடு இன்னொரு ரெட்டியாரும் மந்திரியாகலாம் என்று தெரிகிறது. ஆகையால், "ரெட்டியார் ஆட்சி போய் விட்டது!" என்று சொல்லுவதை விட, "ரெட்டியார்களின் ஆட்சி வந்து விட்டது!" என்று சொல்லுவதுதான் பொருத்தமாயிருக்கும்.

• •
•

ஸ்ரீ குருபாதம் முன்பு மந்திரியாக நியமிக்கப்பட்டபோது, "நான் மந்திரியாக நியமிக்கப்பட்டது எனக்கு ரொம்ப ஆச்சரிய மாக இருக்கிறது" என்று பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

இப்போது மந்திரி வேலை போனது அவருக்குக் கொஞ்சமாவது ஆச்சரியம் அளித்ததா, இல்லையா என்று தெரியவில்லை.

• •
•

நண்பரொன்று "உனக்கு மந்திரி வேலை கிடைத்தால் நீ முதல் முதலாகப் பத்திரிகை நிருபர்களிடம் என்ன சொல்லுவாய்?" என்று கேட்டார் என்னுடைய நண்பர்.

"நான் மந்திரியாக நியமிக்கப்பட்டதைப் பற்றி நான் கொஞ்சங்கூட ஆச்சரியப்படவே இல்லை என்றுதான் சொல்வேன்" என்றேன்.

உண்மையாகப் பார்க்கப்போனால் இதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது?



"ஜோசியர்வாள்! மறு பரீட்சைக் கேள்விகள் 'அவுட்' ஆகுமா என்று பார்த்துச் சொல்லுங்கள்!"

"அவுட் ஆகாது, அப்பனே!"

"அப்படியானால், என்னென்ன கேள்வி வரும் என்பதைப் பார்த்துச் சொல்லுங்கள்!"



மலரைப் போல்
மிருதுவாகவும் ...
கவர்ச்சிகரமான
நிறங்களில் ...
விதம் விதமான
அமைப்புகளுடன் ...
ஒப்புயர்வற்ற உன்னத
ஆடையாக விளங்கும் ...
மனோரம்மியமான
பட்டுப் புடவைகள்
தயாரிப்பவர்கள்: டி.வி.ஜி. ஆர்.எம்.கே. லிட்.,
பட்டு நெசவு மில்ஸ், சிதம்பரம்

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

கல்கி

5. சபர்மதி ஆசிரமம்

கும்பகோணத்தில் மாமாங்கம் என்னும் திருவிழா பன்னிரண்டு வருஷத்துக்கு ஒரு டவை நடைபெறுகிறதல்லவா? அதுபோல டக்கே இமயமலைச் சாரலில் உள்ள ஹரித்வாரம் என்னும் க்ஷேத்திரத்தில் ன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை 'கும்ப ?மளா' என்னும் உற்சவம் நடைபெறுவது ழக்கம். 1915-ம் வருஷத்தில் 'கும்ப ?மளா' உற்சவம் வந்தது. அந்த உற்சவத் துக்கு லட்சக்கணக்கான யாத்ரீகர்கள் ருவது வழக்கம். அவர்களுக்குச் சேவை செய்வதற்காக இந்திய ஊழியர் சங்கத்தி லிருந்து ஒரு சேவைப் படை அனுப்பப் ட்டது. இதையறிந்த மகாத்மா காந்தி ும் போனிக்ஸ் கூட்டத்தாருடன் ஹரித்வார உற்சவத்துக்குப் போக விரும்பி ார். உற்சவத்தைப் பார்ப்பதும் யாத்ரீகர்க ளுக்குச் சேவை செய்வதும் தவிர, ஹரித் ாரத்துக்குப் பக்கத்தில் ஸ்ரீ முன்ஷிராம் நடத்திவந்த குருகுலத்தைப் பார்க்கவேண்டும் ன்ற நோக்கமும் மகாத்மாவுக்கு இருந்தது.

சுவாமி சிரத்தானந்தர் என்ற புனிதமான பயரைக் கேள்விப்படாதவர் யார்? கிலாபத் யக்கம் நடந்த காலத்தில் டில்லியில் உள்ள ுகழ் பெற்ற ஜும்மா மசூதிக்குள் சென்று ங்கே கூடியிருந்த திரளான முஸ்லிம் ளுக்குப் பிரசங்கம் செய்தவரும் அவர்தான். ் காலத்துக்குப் பிறகு வெறி கொண்ட ஸ்லிம் ஒருவனால் குத்திக் கொல்லப்பட்ட ும் அவரேதான். அந்த சுவாமி சிரத்தா ந்தர் சந்நியாசியாவதற்கு முன்னால் ' முன்ஷிராம் என்ற பெயர் தாங்கிக் ொண்டிருந்தார். ஹரித்வாரத்துக்குப் பக் ்தில் காங்ரி என்னுமிடத்தில் ஸ்ரீ முன்ஷி ் நடத்தி வந்த குருகுலம் அந்தக் லத்தில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது.

கும்பமேளா உற்சவத்தில் போனிக்ஸ் ஆசிரமவாசிகள் மிகச் சிறந்த தொண்டு செய்தார்கள். ஆனால் மகாத்மா அந்தத் தொண்டில் அதிகமாக ஈடுபடவில்லை. ஏனெனில் மகாத்மா தென்னாப்பிரிக்காவில் நடத்திய போராட்டத்தின் வரலாறு இதற்குள்ளே பலருக்குத் தெரிந்துபோயிருந்தது. எனவே உற்சவத்துக்கு வந்த யாத்ரீகர்கள் பலர் மகாத்மா காந்தியையும் பார்க்க வந்தார்கள். அவர்களுடன் பேசுவதற்கும் மதம், சமூகம், அரசியல் முதலிய விஷயங்களைப் பற்றி விவாதிப்பதற்குமே நேரம் சரியாயிருந்தது.

கும்பமேளாவில் காந்திஜி பார்த்த பல காட்சிகள் அவருக்கு வெறுப்பை அளித்தன. 'சாதுக்கள்' என்று சொல்லப்பட்ட சந்நியாசி வேஷதாரிகளின் நடவடிக்கைகள் காந்திஜிக்குப் பிடிக்கவே இல்லை. மதத்தின் பெயரால் பல ஏமாற்றுகள் நடப்பதையும் காந்திஜி கவனித்தார். உதாரணமாக, ஐந்து கால் உள்ள பசுமாடு ஒன்று அங்கே கொண்டு வரப்பட்டிருந்தது. பசுவைப் போற்றுகிற ஹிந்துக்கள் பலர் மேற்படி ஐந்து கால் பசுவைத் தெய்வ அம்சம் உள்ளதாகக் கருதி அதை வழிபட்டு அதன் சொந்தக்காரனுக்குப் பணமும் கொடுத்துவிட்டுப் போனார்கள். ஐந்து கால் பசு முதலில் காந்திஜிக்கு வியப்பு அளித்தது. பிறகு, விசாரித்துப் பார்த்ததில், உண்மையில் அந்தப் பசுவுக்கு ஐந்து கால் இல்லை என்றும், ஒரு கன்றுக்குட்டியின் காலை வெட்டி ஒட்ட வைத்திருக்கிறது என்றும் தெரிந்து கொண்டார்! இந்தக் கொடூரமான செயல் மகாத்மாவின் கருணை நிறைந்த உள்ளத்தைப் பெரிதும் பாதித்தது.

மொத்தம் பதினேழு லட்சம் ஜனங்கள் அந்த வருஷத்துக் கும்பமேளா உற்சவத்துக்கு வந்திருந்தார்கள். அவர்களில் மிகப்

பெரும்பாலோர் உண்மையான பக்தியுடனே புண்ணியம் தேடிக் கொள்வதற்காகவே வந்திருந்தார்கள் என்பதைக் காந்திஜி அறிந்திருந்தார். ஆனால் சில மோசக்காரர்கள் அக்கிரம தந்திரங்களைக் கையாண்டு பக்தியுள்ள பாமர மக்களை ஏமாற்றி வந்தார்கள். இதற்குப் பிராயச்சித்தமாகத் தாம் ஏதாவது செய்யவேண்டும் என்று காந்திஜிக்குத் தோன்றியது. ஒரு நாளில் தாம் சாப்பிடும் உணவில் ஐந்து பொருள்களுக்கு மேல் சேர்த்துக் கொள்வதில்லையென்றும், இருட்டிய பிறகு எதுவும் சாப்பிடுவதில்லை என்றும் விரதம் எடுத்துக் கொண்டார். இந்த விரதத்தை மகாத்மா தம் அந்திய நாள் வரையில் நிறைவேற்றினார்.

கும்பமேளா உற்சவம் முடிந்த பிறகு காந்திஜி ஸ்ரீ முன்ஷிராமின் குருகுலத்துக்குச் சென்றார். காந்திஜியின் வரலாற்றைத் தெரிந்து கொண்டிருந்த ஸ்ரீ முன்ஷிராம் அங்கேயே காந்திஜியும் அவருடைய சகாக்களும் தங்கிவிடவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஆனால் காந்திஜியின் மனதில் இதற்கு முன்னாலேயே தம்முடைய இலட்சியங்களை நிறைவேற்றுவதற்குரிய தனி ஆசிரமம் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்ற எண்ணம் உதயமாகியிருந்தது. அத்தகைய ஆசிரமத்தை ஆமதாபாத்தில் ஸ்தாபிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருந்தார். ஏனெனில், தாம் பிறந்த நாடாகிய குஜராத்திலேதான் தம்முடைய தொண்டைச் சரிவரச் செய்யமுடியும் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டிருந்தது. ஆமதாபாத்தோ குஜராத்தின் தலைநகரம். கைத்தறி நெசவுக்குப் பெயர்போன இடம். எனவே, இராட்டைக்கும் கைத்தறிக்கும் புத்துயிர் தரவேண்டும் என்னும் காந்திஜியின் நோக்கம் ஆமதாபாத்தில் நிறைவேறக்கூடும். மேலும் அந்நகரில் வசித்த குஜராத்தி செல்வர்களிடமிருந்து தாம் ஆரம்பிக்கும் ஆசிரமத்துக்குப் பண உதவி பெறவும் கூடும். ஆரம்ப காலத்தில் எந்த ஆசிரமந்தான் பண உதவி இல்லாமல் நடக்க முடியும்?

எனவே, காங்கிரி குருகுலத்தைப் பார்த்ததும் மகாத்மா நேரே ஆமதாபாத்துக்குப் புறப்பட்டார். அங்கே பல நண்பர்கள் காந்திஜிக்கு ஆசிரமம் ஸ்தாபிப்பதில் உதவி செய்வதாகச் சொன்னார்கள். அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் போது தீண்டாமையைப் பற்றிப் பேச்சு வந்தது. "நான் நடத்தும் ஆசிரமத்தில் தீண்டாமையை அனுசரிப்பது நினைக்கவும் முடியாத காரியம்" என்று காந்திஜி கூறினார். "மற்ற அம்சங்களில் தகுதியுடைய தீண்டாத வகுப்பினர் ஒருவர் ஆசிரமத்தில் சேர முன் வந்தால் அவசியம் அவரைச் சேர்த்துக்கொள்வேன்" என்றும் உறுதியாகச் சொன்னார். ஆனால், அந்த நண்பர்கள், "ஆசிரமத்தில் சேரக் கூடிய தகுதியுடைய தீண்டாதவர் எங்கிருந்து வரப்போகிறார்!" என்று சொல்லித் திருப்தி அடைந்தார்கள். அப்படிப்பட்ட ஒருவர் அகப்படவே மாட்டார் என்பது அவர்களுடைய நம்பிக்கை.

ஆமதாபாத்திலேயே ஆசிரமம் ஸ்தாபிப்பது என்று முடிவாகத் தீர்மானிக்கப்பட்டது. ஆமதாபாத்துக்குப் பக்கத்தில் கோச்ராப் என்ற கிராமத்தில் ஸ்ரீ ஜீவன்லால் தேசாய் என்னும் பாரிஸ்டருக்கு ஒரு பங்களா இருந்தது. அதை வாடகைக்குக் கொடுக்க மேற்படி பாரிஸ்டர் சம்மதித்தார். அந்த பங்களாவிலேதான் முதன் முதலில் ஆசிரமம் ஸ்தாபிக்கப்பட்டது.

ஆசிரமத்துக்குப் பெயர் என்ன கொடுப்பது என்ற கேள்வி எழுந்தது. "சேவாசிரமம்" "தபோவனம்" என்னும் பெயர்களைச் சில நண்பர்கள் குறிப்பிட்டார்கள். "தபோவனம்" என்பது அதிக டாம்பீகமான பெயர் என்று காந்திஜிக்குத் தோன்றியது. "சேவாசிரமம்" பிடித்திருந்தாலும் பூரண திருப்தி அளிக்கவில்லை. கடைசியாக இந்தியாவின் விடுதலைக்கு மகாத்மா எந்த வழியைக் கையாண்டு காட்ட வேண்டுமென்று எண்ணியிருந்தாரோ, அந்த வழியைக் குறிப்பிடும் பெயராக இருக்க வேண்டும் என்று "சத்தியாக்கிரஹ ஆசிரமம் என்னும் பெயர் இடப்பட்டது.

ஆரம்பத்தில் இருபத்தைந்து ஸ்திரீ புருஷர்கள் ஆசிரமத்தில் இருந்தார்கள். இவர்களில் சிலர் போனிக்ஸ் ஆசிரமத்தில் காந்திஜியோடு இருந்தவர்கள். மற்றவர்கள் இந்தியாவில் புதிதாகச் சேர்ந்தவர்கள். அந்த ஆரம்ப ஆசிரமத் தொண்டர்கள் இருபத்தைந்து பேரில் பதின்மூன்று பேர் தமிழர்கள் என்று காந்தி மகாத்மா தமது சுயசரிதத்தில் எழுதி வைத்திருக்கிறார். தமிழர்களுக்கு இது எவ்வளவு பெருமையான விஷயம் என்று சொல்லவும் வேண்டுமோ?

ஆசிரமம் ஆரம்பித்துச் சில மாதங்களுக்குள்ளே நேர்ந்த ஒரு பெருஞ்சோதனையைப் பற்றியும் மகாத்மா எழுதியிருக்கிறார். தகுதியுள்ள தீண்டாத வகுப்பினர் எவரும் ஆசிரமத்தில் சேர்வதற்கு வரப்போவதில்லையென்

ஆமதாபாத் நண்பர்கள் கருதினார்கள் அல்லவா? அவர்களுடைய எண்ணத்துக்கு மாறாக ஒரு காரியம் நிகழ்ந்தது. இந்திய ஊழியர் சங்கத்து அங்கத்தினரில் மகாத்மாவிடம் மிகுந்த அபிமானம் கொண்டவர் ஸ்ரீ அமிருதலால் தக்கர். (இன்றைக்கும் ஹரிஜனத் தொண்டில் மனப்பூர்வமாக ஈடுபட்டுள்ள தக்கர் பாபா அவர்கள் தான்.) அவரிடமிருந்து காந்திஜிக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் தக்கர் பாபா, "தீண்டா வகுப்பைச் சேர்ந்த ஒரு குடும்பத்தார் தங்கள் ஆசிரமத்தில் சேர விரும்புகிறார்கள். ஒழுக்கமும் அடக்கமும் படைத்தவர்கள். அவர்களை ஏற்றுக் கொள்வீர்களா?" என்று கேட்டிருந்தார். இவ்வளவு சீக்கிரத்தில் இத்தகைய சோதனை ஏற்படும் என்று மகாத்மா எதிர்பார்க்கவில்லை. ஆசிரமத்துக்கு உதவி செய்து வந்த ஆமதாபாத் நண்பர்களுக்கு இது பிடிக்காது என்பது தெரிந்தே இருந்தது. ஆயினும் அதற்காக மகாத்மா தம் வாழ்க்கை தர்மத்தின் அடிப்படையான கொள்கையை மாற்றிக் கொள்வதென்பது நினைக்கக்கூடிய காரியமா?


கடிதத்தை மற்ற ஆசிரமவாசிகளுக்குக் காந்திஜி படித்துக் காட்டினார். அவர்களும் உற்சாகமாக அதை வரவேற்றார்கள். எனவே தீண்டா வகுப்புக் குடும்பத்தினரை அனுப்பும்படி மகாத்மா கடிதம் எழுதினார். சில நாளில் அவர்கள் வந்து சேர்ந்தார்கள். மூன்றே பேர் அடங்கிய குடும்பம். குடும்பத் தலைவரின் பெயர் துதா பாய்; அவர் மனைவியின் பெயர் தனி பென்; அவர்களுடைய புதல்வியின் பெயர் லக்ஷ்மி. அப்போது லக்ஷ்மி தவழும் பிராயத்துக் குழந்தை. துதாபாய் பம்பாயில் ஆரம்பப் பாடசாலையில் உபாத்தியாயரா யிருந்தவர். சத்தியாக்கிரஹ ஆசிரமத்தின் விதிகளையெல்லாம் நன்கு தெரிந்துகொண்டு அந்த விதிகளின்படி நடப்பதாக ஸ்ரீ துதா பாய் ஒப்புக் கொண்டார். அதன் பேரில் அக்குடும்பத்தார் ஆசிரமத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பிறகு நடந்தவற்றைக் குறித்து மகாத்மா எழுதியுள்ள வரலாறு பின்வருமாறு:—

"ஆசிரமத்துக்கு உதவி புரிந்து கொண்டிருந்த நண்பர்களிடையே இது பெருங் கிளர்ச்சியை உண்டு பண்ணிற்று. முதலில் கிணறு விஷயமாகக் கஷ்டம் ஏற்பட்டது. கிணற்றைப் பங்களாவின் சொந்தக்காரரும் உபயோகித்து வந்தார். ஏற்றம் இறைத்து வந்த மனிதன் எங்களுடைய தொட்டியிலிருந்து தண்ணீர்த் துளிகள் சிந்துவதால் தனக்குத் தீட்டு ஏற்பட்டுவிடுமென்று கூறி ஆட்சேபித்தான். ஆதலின் எங்களைத் திட்டவும், துதாபாயைத் தொந்தரவு செய்யவும் தொடங்கினான். வசவுகளைப் பொறுத்துக் கொண்டு தண்ணீர் இழுத்துவரும்படி நான் அனைவருக்கும் சொன்னேன். நாங்கள் திரும்பத் திட்டாததை அந்த மனிதன் கண்டபோது வெட்கமடைந்து எங்களைத் தொந்தரவு செய்வதை நிறுத்தி விட்டான்.

பண உதவியெல்லாம் நிறுத்தப்பட்டது. ஆசிரம விதிகளை அனுசரிக்கக் கூடிய தீண்டாதார் எங்கே கிடைப்பர் என்று கேள்வி கேட்ட நண்பர், அத்தகைய ஒருவர் வருவார் என எதிர் பார்க்கவேயில்லை.

சமூக பகிஷ்காரத்தைப் பற்றிய வதந்திகளும் ஏற்பட்டன. இவற்றிற்கெல்லாம் நாங்கள் ஆயத்தமாயிருந்தோம். எங்களைப் பகிஷ்காரம் செய்து சாதாரண வசதிகள் அளிக்கவும் மறுத்தபோதிலும் ஆமதாபாத்தை விட்டுப் போகக்கூடாதென்றும், அதைக் காட்டிலும் தீண்டா வகுப்பினர் வசிக்குமிடஞ் சென்று அங்கே உடலுழைப்பினால் கிடைக்கும் பொருளைக் கொண்டு காலட்சேபம் செய்தல் நலமென்றும் என் நண்பர்களிடம் சொல்லி யிருந்தேன்.

நிலைமை கடைசியில் நெருக்கடியாயிற்று. ஒருநாள் மகன்லால் காந்தி வந்து, "கையில்



"இன்றைக்கு ஒரு பேஷான ஹாஸ்யக் கதை எழுதிக் கொண்டு வந்திருக்கிறேன். அதை நீங்கள் அவசியம் கேட்டுத்தான் ஆகவேண்டும்!"

"சரி, கேட்கிறேன்; சொல்லி அழுங்கோ!"

இருந்த பணமெல்லாம் ஆகிவிட்டது. அடுத்த மாதச் செலவுக்குப் பணமே கிடையாது!" என்று தெரிவித்தார்.

"அப்படியானால் நாம் தீண்டா வகுப்பாரின் இருப்பிடம் செல்வோம்" என்று அமைதியாகப் பதிலளித்தேன்.

இத்தகைய சோதனை எனக்கு நேர்ந்தது இது முதல் முறையன்று. சோதனை நேர்ந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் ஆண்டவன் கடைசி நிமிஷத்தில் எனக்கு உதவி அனுப்பியே வந்தார். ஆசிரமத்தின் பொருளாதார நிலைமையைப் பற்றி மகன்லால் எச்சரிக்கை செய்து அதிக காலம் ஆவதற்குள் ஒரு நாள் காலை ஆசிரமக் குழந்தைகளில் ஒரு குழந்தை ஓடிவந்து, ஸேத் ஒருவர் வாசலில் மோட்டார் வண்டியில் காத்திருப்பதாகவும் என்னைப் பார்க்க விரும்புவதாகவும் கூறியது. அவரைப் பார்க்கச் சென்றேன். "ஆசிரமத்துக்குக் கொஞ்சம் பொருளுதவி செய்ய விரும்புகிறேன்; ஏற்றுக் கொள்வீர்களா?" என்று அவர் கேட்டார்.

"நிச்சயமாக ஏற்றுக் கொள்வேன். தற்போது எங்கள் பணமெல்லாம் செலவழிந்து வெறுங் கையுடன் இருக்கிறோம்" என்றேன்.

"நாளை இந்த நேரத்திற்கு இங்கே வருகிறேன். தாங்கள் இருப்பீர்களா?" என்று அவர் கேட்டார்.

"ஓ, இருக்கிறேன்" என்றேன். அத்துடன் அவர் புறப்பட்டுச் சென்றார்.


மறுநாள் குறிப்பிட்ட நேரத்திற்குச் சரியாக வண்டி வாசலில் வந்து நின்றது. குழல் ஊதிற்று. குழந்தைகள் செய்தி கொண்டு வந்தார்கள். ஸேத் உள்ளே வரவில்லை. அவரைப் பார்க்க நான் வெளியே வந்தேன். அவர் என் கையில் 13,000 ரூபாய் நோட்டுகளைக் கொடுத்து விட்டு வண்டியை விட்டுக்கொண்டு சென்றார்.

இந்த உதவியை நான் எதிர்பார்க்கவே யில்லை. அதிலும் எவ்வளவு புதிய முறையில் உதவி! அந்தக் கனவான் அதற்கு முன் ஆசிரமத்துக்கு வந்ததே யில்லை. அவரை அதற்கு முன் ஒரே ஒரு முறைதான் பார்த்திருப்பதாக எனக்கு ஞாபகம். அவர் ஒருவித விசாரணையும் செய்யவில்லை. ஆசிரமத்தைப் பார்வையிடவும் இல்லை. வந்து பணங் கொடுத்துவிட்டு உடனே போய் விட்டார்! இந்த உதவியின் காரணமாக, தீண்டாதார் இருப்பிடத்துக்கு நாங்கள் குடி போக வேண்டிய அவசியம் இல்லாமற் போயிற்று. இன்னும் ஓராண்டுக்குப் பணத்தைப் பற்றிய கவலையில்லையென்று தைரியமடைந்தோம்.

துதா பாய் குடும்பத்தைச் சேர்த்துக் கொண்டது ஆசிரமத்துக்கே ஒரு நல்ல படிப்பினையாயிற்று. ஆரம்பத்திலேயே ஆசிரமத்தில் தீண்டாமை பாராட்ட மாட்டோமென்று உலகுக்குப் பகிரங்கமாய் அறிவித்து விட்டோம். ஆசிரமத்துக்கு உதவி செய்ய விரும்பியவர்களை எச்சரித்தவர்களானோம். இத்துறையில் ஆசிரமத்தின் வேலையும் பெரிதும் எளிதாயிற்று. இவையெல்லாம் நன்கு தெரிந்தும், நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருந்த ஆசிரமச் செலவுகளை வைதிக ஹிந்துக்களே பெரும்பாலும் கொடுத்து வந்தார்கள். தீண்டாமையின் அடிப்படை ஆட்டங் கொடுத்துப் போய்விட்டது என்பதற்கு இது அறிகுறியல்லவா?......"

பின்னரும் சில காலம் கோச்ராப்பில் ஆசிரமம் நடந்து வந்தது. பிறருடைய வாடகைக் கட்டிடத்தில் நெடுங்காலம் ஆசிரமம் நடத்த முடியாது என்றும் சொந்த இடம் சம்பாதித்து ஆசிரமத்தை நிலைப்படுத்த வேண்டும் என்றும் மகாத்மா கருதினார். இந்தச் சமயத்தில் கோச்ராப் கிராமத்தில் பிளேக் நோய் பரவியது. கிராமத்து ஜனங்களைச் சுகாதார விதிகளை அனுஷ்டிக்கும்படி செய்வதற்கான சக்தியும் செல்வாக்கும் ஆசிரமவாசிகள் அப்போது பெற்றிருக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீ புஞ்சாபாய் ஹீராசந்த் என்னும் வியாபாரி ஆசிரமம் ஸ்தாபிக்கத் தகுந்த நிலம் சம்பாதித்துக் கொடுப்பதற்கு முன் வந்தார். அவரும் காந்திஜியும் ஆமதாபாத்தைச் சுற்றித் தக்க நிலம் தேடி அலைந்தார்கள். ஆமதாபாத்துக்கு நாலு மைல் தூரத்தில் சபர்மதி நதிக் கரையில் அத்தகைய இடத்தைக் கண்டு பிடித்தார்கள். ஒரு வாரத்திற்குள் அந் நிலம் வாங்கப்பட்டது. நிலத்தில் கட்டடமோ, மரமோ ஒன்றும் இல்லை. ஆயினும் ஆசிரமத்தை உடனே அவ்விடத்துக்கு மாற்றிவிட வேண்டும் என்று மகாத்மா தீர்மானித்தார். ஆசிரமவாசிகள் வசிப்பதற்குக் கித்தான் கூடாரங்கள் போடப்பட்டன. அப்போது ஆசிரமவாசிகள் ஆடவரும் பெண்டிரும் குழந்தைகளுமாக நாற்பது பேர் இருந்தார்கள். எல்லாரும் கித்தான் கூடாரங்களுக்கு வந்து சேர்ந்தார்கள்.

இவ்விதமாக, மகாத்மாவின் வாழ்க்கை சரிதத்தில் மிகப் பிரசித்திபெற்ற சபர்மதி சத்தியாக்கிரஹ ஆசிரமம் ஆரம்பமாயிற்று.



து டில்லியிலுள்ள மதராஸி பள்ளிக்கூடத்தின் உதவிக்காக ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி
வர்கள் அளித்த சங்கீதக் கச்சேரிக்கு இந்தியாவின் கவர்னர் ஜெனரல் ராஜாஜி, பிரதம மந்திரி
வாஹர்லால் நேரு உள்ளிட்ட ஆயிரக்கணக்கான ரசிகர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

★ ● ★

வர்னர் ஜெனரல் மாளிகையில் சகல தேசத் தூதர்களும் பிரபல விருந்தினரும் அரசாங்க உத்தி
யாகஸ்தர்களும் அடங்கிய மகாசபையில் குமாரி ராதாவின் பரதநாட்டியக் கச்சேரி நடைபெற்றது.



அலை ஓசை

கல்கி

ஒன்பதாம் அத்தியாயம்

பட்டாபியின் புனர்ஜன்மம்

ரயில் தேவபட்டணம் ஸ்டேஷனை நெருங்கியபோது இரவு எட்டு மணி இருக்கும். ரயில்பாதையின் இரு பக்கமும் தேங்கியிருந்த மழைத் தண்ணீரில் ரயில் வண்டியின் விளக்குகள் வரிசையாகப் பிரதிபலித்தன. அவ்வாறே தேவபட்டணத்தை அடுத்துள்ள சாலைகளில் போட்டிருந்த விளக்குகளும் பக்கத்தில் கடல் போலத் தேங்கியிருந்த தண்ணீரில் வரிசையாகப் பிரதிபலித்து மினு மினுத்தன. வானை மூடியிருந்த மேகங்களினாலும் பூமியில் சூழ்ந்திருந்த அந்தகாரத்தினாலும் கருமை உருக்கொண்டிருந்த அந்த இரவு நேரத்தில் வரிசை வரிசையான மின்சார தீபங்களும் தண்ணீரில் அவற்றின் பிரதிபிம்பங்களும் சேர்ந்து ஏதோ ஒரு மாயாபுரி வானத்திலிருந்து பூமியில் இறங்கி யிருக்கிறது போன்ற பிரமையை உண்டாக்கின.

ரயில் ஸ்டேஷனுக்குள் சென்று நின்றதும் பட்டாபிராமன் முதலியவர்கள் ரயில் கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கினார்கள். கதவைத் திறந்தவுடனேயே ஊதல் காற்று சுளீர் என்று அடித்தது. கீழே அவர்கள் இறங்கி நின்ற இடத்தில் பிளாட்பாரத்தின் மேற் கூரை இருந்த போதிலும் திறந்திருந்த இரு பக்கங்களிலிருந்தும் மழைச்சாரல் வந்து தாக்கியது. போர்ட்டர்கள் குளிரில் நடுங்கிக் கொண்டே வந்து சாமான்களைத் தூக்கிக்கொண்டார்கள்.

அந்த சமயத்தில் ஸ்டேஷனுக்கு ஒரு பக்கத்திலேயிருந்து ஏராளமான ஜனங்கள் சொட்ட நனைந்த துணிகளுடன் கூச்சலிட்டுக் கொண்டு ஓடி வந்தார்கள். சிறிது நேரத்தில் நூற்றுக்கணக்கான ஸ்திரீகளும் புருஷர்களும் குழந்தைகளும் ரயில் பிளாட்பாரத்திலும் பிளாட்பாரத்துக்கு வெளியிலும் வந்து நிறைந்து விட்டார்கள். அவர்களுடைய துணியிலிருந்தும் உடம்பிலிருந்தும் சொட்டிய ஜலம் ரயில்வே ஸ்டேஷனை வெள்ளக் காடு ஆக்கியது.

முதலில் இவ்வளவு பேரும் ரயில் ஏற வருகிறார்களா என்ன என்று எண்ணிப் பட்டாபிராமன் ஆச்சரியப் பட்டான். ஆனால் ஈரத்துணிகளுடன் வந்தவர்கள் யாரும் அந்த ரயிலுக்குள் ஏறவில்லை. ரயிலும் போய் விட்டது.

அந்தக் கூட்டத்துக்குள் புகுந்து இடிபட்டுக் கொண்டு பட்டாபிராமனும் அவனுடைய குடும்பத்தாரும் வெளியேற வேண்டி நேர்ந்தது. "இது என்ன கூட்டம்? இவ்வளவு பேரும் எந்த ரயிலில் ஏறுவதற்காக வந்திருக்கிறார்கள்?" என்று பட்டாபிராமன் போர்ட்டரைக் கேட்டான்.

"இவர்கள் ரயில் ஏற வரவில்லை ஸார்! இன்று சாயங்காலம் அடித்த புயலிலும் மழையிலும் இவர்களுடைய கூரைக் குச்சுகள் எல்லாம் பிய்த்துக் கொண்டு போய் விட்டன. மழைக்குத் தங்க இடம் இல்லாமல் இங்கே வந்து குவிந்திருக்கிறார்கள். சனியன் பிடித்தவர்கள்!" என்றான் போர்ட்டர்.

"ஏன், அப்பா, வீணாக வைகிறாய்? ஏழை ஜனங்கள் வேறு எங்கே போவார்கள்?" என்றாள் சீதா.

"எங்கேயாவது சத்திரம் சாவடி பார்த்துப் போய்த் தொலைகிறது தானே? தங்க இடமில்லா விட்டால் ரயில்வே ஸ்டேஷன்தானா அகப்பட்டது? இன்றைக்குச் சாயங்காலத்தி லிருந்து இவர்களைத் துரத்தித் துரத்தி எனக்குக் கையும் அலுத்துவிட்டது; சத்தம் போட்டுப் போட்டு வாயும் வலிக்கிறது!" என்றான் போர்ட்டர்.

கஷ்டப்பட்டு வாடகை வண்டிகள் பிடித்து ஏறிக்கொண்டு பட்டாபிராமன் முதலியவர்கள் வீடு போய்ச் சேர்ந்தார்கள். வீடு சேர்ந்ததும் லலிதா சரசர வென்று வீட்டுக் காரியங்களைப் பார்க்கத் தொடங்கினாள். பட்டாபிராமன் ஆபீஸ் அறைக்குள் சென்று வந்திருந்த கடிதங்களைப் பார்த்துவிட்டுப் பத்திரிகை படிக்கத் தொடங்கினான். குழந்தைகள் வேறு உலர்ந்த துணி உடுத்திக்கொண்டு சீக்கிரமாகச் சாப்பிட்டுவிட்டுத் தூங்குவதற்குச் சென்றார்கள்.

சீதா மட்டும் சோகமே உருக் கொண்டவளாக ஈரமான துணியைக் கூட மாற்றிக் கொள்ளாமல் ஒரு பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள்.

இலை போட்டானதும் லலிதா சாப்பிடக் கூப்பிடுவதற்காகக் கூடத்தில் வந்து பார்த்தாள்.

"இது என்ன, சீதா! ஈரத் துணியைக்கூட மாற்றிக் கொள்ளாமல் இருக்கிறாயே?" என்று கேட்டாள்.

அதே சமயத்தில் பட்டாபிராமன் தன்னுடைய ஆபீஸ் அறைக்குள்ளேயிருந்து வெளியே வந்தான்.

"எனக்கென்னமோ அந்த ஏழை ஜனங்களின் நினைவாகவே இருக்கிறது. அவர்கள் எல்லாரும்,—சின்னக் குழந்தைகள் உள்பட,—ராத்திரி யெல்லாம் ஈரத் துணியோடுதானே கழிக்கப் போகிறார்கள்? அவர்களை நினைத்தால் வேறு உலர்ந்த துணி உடுத்திக் கொள்ளவே மனம் வரவில்லை! இந்த மச்சு வீட்டில் கொஞ்சம்கூட நனையாமல் சௌகரியமாக நாம் உட்கார்ந்திருப்பதே எனக்கு வேதனையா யிருக்கிறது!" என்றாள் சீதா.

"அது பரிதாபமான விஷயந்தான். அதற்காக நாம் என்ன செய்வது? பத்துப் பேரா? இருபது பேரா? ஆயிரம் பேருக்கு மேலே இருக்கும் போலத் தோன்றுகிறது. பொழுது விடிந்த பிறகு அவர்களுக்கு ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கலாம்" என்றான் பட்டாபிராமன்.

"சாப்பிட்டுக்கொண்டே பேசலாம்; வாருங்கள்!" என்றாள் லலிதா.

"இன்று ராத்திரி அத்தனை ஜனங்களும் பட்டினி கிடக்கப் போகிறார்கள். பச்சைக் குழந்தைகள் பசி தாங்காமல் அழுவார்கள். அதை நினைத்துக் கொண்டால் நமக்கு எப்படிச் சாப்பிடுவதற்கு மனம் வரும்?" என்றாள் சீதா.

"ஆகையால் அதை நினைத்துப் பார்க்கவே கூடாது. உலகத்திலுள்ள கஷ்டங்களை யெல்லாம் நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தால் நமக்கு மன நிம்மதி இராதுதான்!" என்றான் பட்டாபிராமன்.

"நம்முடைய கவலையை நாம் பட்டால் போதாதா? ஊர்க் கவலையை யெல்லாம் எதற்காக விலைக்கு வாங்க வேண்டும்?" என்றாள் லலிதா.

"சிலபேரால் அப்படி சொந்தக் காரியத்தைக் கவனிப்பதோடு இருக்க முடிகிறது. என்னால் அப்படி இருக்க முடியவில்லையே!" என்றாள் சீதா.

"நீ சொல்வது வாஸ்தவந்தான், அம்மா! எனக்குப் பட்டுவும் பாலுவும் சாரலில் நனைந்ததைப் பற்றியே நினைவா யிருக்கிறது. ஜலதோஷம் பிடித்துக் கொள்ளாமலிருக்க வேண்டுமே என்று கவலையா யிருக்கிறது!" என்று லலிதா சொன்னாள்.

"ரயில்வே ஸ்டேஷனில் இந்தக் குழந்தைகள் மாதிரி எத்தனை குழந்தைகளைப் பார்த்தோம்? அவ்வளவு பேரும் இன்று இராத்திரி யெல்லாம் மழையிலும் சாரலிலும் கிடக்கப் போகிறார்கள். அவர்களுக் கெல்லாம் நாளைக்கு உடம்புக்கு வந்தால் யார் கவனிப்பார்கள்?" என்றாள் சீதா.

"நானும் அதைப்பற்றி யோசித்துக் கொண்டுதான் இருக்கிறேன். பொழுது விடியட்டும்; என்னுடைய சிநேகிதர்களுடன் கலந்து யோசித்து ஏதாவது ஏற்பாடு செய்யலாம். இப்போது உலர்ந்த துணி உடுத்திக் கொண்டு சாப்பிடலாம், வாருங்கள்! நம்முடைய உடம்பைப் பாதுகாத்துக் கொண்டால்தானே மற்றவர்களுக்கு

நம்மால் உதவி செய்ய முடியும்?" என்றான் பட்டாபிராமன்.

இதைக் கேட்ட சீதா எழுந்து சாப்பிடச் சென்றாள். சாப்பிட்ட பிறகு கொஞ்சநேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் படுக்கச் சென்றார்கள்.

லலிதா படுத்துக் கொண்ட உடனே கம்பளியை இழுத்துப் போர்த்திக் கொண்டு நிம்மதியாகத் தூங்கத் தொடங்கினாள்.

ஆனால் சீதாவுக்கு ரயில்வே ஸ்டேஷனில் பார்த்த ஏழை ஜனங்களை நினைத்து நினைத்து இரவெல்லாம் தூக்கம் வரவில்லை.

பட்டாபிராமனுக்கோ சீதாவின் தயாள குணத்தை எண்ணி எண்ணித் தூக்கம் வரவில்லை.

மறு நாள் பொழுது விடிந்ததும் பட்டாபிராமன் சீதாவிடம் சொன்ன வார்த்தையை நிறைவேற்ற எண்ணி வெளியே சென்றான். எத்தனை ஏழைக் குடும்பங்களின் குடிசைகள் விழுந்து விட்டன, எத்தனைபேர் தங்க இடமின்றியும் உண்ண உணவின்றியும் தவிக்கிறார்கள் என்பதை யெல்லாம் விசாரித்துத் தெரிந்து கொண்டான். சில சிநேகிதர்களோடு கலந்து பேசி வெள்ளக் கஷ்ட நிவாரண வேலை தொடங்குவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தான். மத்தியானம் வீட்டுக்குத் திரும்பி வந்து சீதாவிடம் எல்லா விவரங்களையும் கூறினான்.

"கல்கத்தாவில் இந்தமாதிரி கஷ்ட நிவாரண வேலையில் எனக்குக் கொஞ்சம் அநுபவம் உண்டு. நானும் உங்களுடன் வந்து ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் என்னால் இயன்ற உதவி செய்கிறேனே! வீட்டில் வெறுமனே உட்கார்ந்திருக்கப் பிடிக்கவே இல்லை!" என்று சொன்னாள் சீதா.

பட்டாபிராமன் மிக்க சந்தோஷத்துடன் அதை ஒப்புக் கொண்டான். "இந்த ஊரில் அம்மாதிரி சேவை செய்யக்கூடிய இன்னும் சில சகோதரிகளும் இருக்கிறார்கள்! அவர்களுடன் உங்களைச் சேர்த்து விடுகிறேன்" என்று சொன்னான்.

அன்று மத்தியானமே பட்டாபிராமன் ஒரு பக்கத்திலும் சீதா இன்னொரு பக்கத்திலும் வெள்ளக் கஷ்ட நிவாரண வேலையில் ஈடுபட்டார்கள்.

முதலில் சிலநாள் வரையில் குடிசைகளை இழந்த ஏழை ஜனங்களுக்குப் பள்ளிக்கூடங்களில் தங்க இடம் கொடுக்கப்பட்டது. அவ்வளவு பேருக்கும் சமையல் செய்து சாப்பாடு போட வேண்டியிருந்தது. நோய்ப் பட்டவர்களுக்கு மருந்து கொடுத்துச் சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. குழந்தைகளுக்கு நோய் நொடி வராமல் சர்வ ஜாக்கிரதையுடன் பார்த்துக் கொள்ள வேண்டியிருந்தது.

மழை நின்று தரை காய்ந்த பிறகு அவர்களுக்கெல்லாம் புதிதாகக் குடிசைகள் கட்டிக்கொள்ள வசதி செய்து கொடுக்கவேண்டி வந்தது.

நிவாரண வேலை முடிவடைவதற்கு மூன்று மாதம் பிடித்தது. இந்த மூன்று மாத காலமும் பட்டாபிராமனுக்கும் சீதாவுக்கும் ஓயாத ஒழியாத வேலை இருந்து வந்தது. அவர்களுடன் அந்த ஊர்க்காரர்கள் இன்னும் பலர் ஒத்துழைத்தார்கள். சீதாவின் ஊக்கமும் உழைப்பும் இனிய சுபாவமும் மதுரமான மொழிகளும் அனைவருக்கும் உற்சாகத்தை ஊட்டிவந்தன. தேவபட்டணமெங்கும் சீதாவின் புகழ் பரவி வந்தது.

பட்டாபிராமன் சிறையிலிருந்து வந்ததுமுதல் உற்சாகம் குன்றியிருந்தான். தேசத்துக்குச் சுதந்திரமோ வந்தபாடில்லை. நாட்டில் தேசிய ஊக்கம் என்பதே கிடையாது. பழைய படி கோர்ட்டுக்குப் போய் வக்கீல் தொழில் செய்யப் பிடிக்கவில்லை. செய்வதற்கு வேறு வேலையும் இல்லை.

இதனாலெல்லாம் மனச்சோர்வு அடைந்திருந்தவன் இப்போது புனர் ஜன்மம் எடுத்தவன்போல் ஆனான். வெள்ளக் கஷ்ட நிவாரணத்தில் அவனுக்கு வேலை நிறைய இருந்தது. அந்த வேலை அவனுக்கு மிகவும் பிடித்தமாகவும் இருந்தது. மாலையில் வீடு திரும்பியதும் அன்றன்று நடந்த வேலைகளைப் பற்றிப் பட்டாபியும் சீதாவும் உற்சாகமாகப் பேசிக்கொள்வார்கள். வீட்டில் பொதுவாகக் கல கலப்பு அதிகமாயிற்று. இது லலிதாவுக்கும் மிகவும் சந்தோஷமா யிருந்தது.

"இந்த வீடு இம்மாதிரி முன்னெப் போதும் கல கலப்பா யிருந்ததில்லை, சீதா! இவரும் இவ்வளவு குதூகலமா

யிருந்ததில்லை. உன்னை இவருக்கு ரொம்பவும் பிடித்துப் போயிருக்கிறது. யாருக்குத்தான் உன்னைப் பிடிக்காமலிருக்கும்? நீ இங்கேயே எப்போதும் இருந்துவிடு, சீதா!" என்று லலிதா அடிக்கடி சொல்லுவாள்.

"கடவுளுடைய சித்தமும் அப்படித்தான் இருக்கும் போலிருக்கிறது. எனக்கு வேறு போக்கிடம் எங்கே?" என்று சொல்வாள் சீதா.

"உன் குழந்தை வஸந்தியை நீ மதராஸில் விட்டு வைத்திருப்பது மட்டும் எனக்குப் பிடிக்கவில்லை. நாலு பேர் நாலு சொல்வதற்கு ஏன் இடம் வைத்துக் கொள்ள வேண்டும்? குழந்தையையும் இவ்விடத்துக்கு அழைத்துக் கொண்டு வந்துவிடு! இரண்டு குழந்தையோடு மூன்றாவது குழந்தையாக இருந்துவிட்டுப் போகிறன்!" என்று லலிதா கூறுவாள்.

"இந்தக் கோடைக்குப் பள்ளிக்கூடம் சாத்தியதும் வஸந்தியை அழைத்து வந்து விடலாம் என்றுதான் எண்ணிக்கொண்டிருக்கிறேன்" என்று சீதா பதில் கூறுவாள்.

நாள் செல்லச் செல்ல, அந்த வீட்டில் லலிதாவின் செல்வாக்குக் குன்றி சீதாவின் செல்வாக்கு அதிகமாகிக் கொண்டு வந்தது.

பட்டுவும் பாலுவும் அம்மாவின் வார்த்தையைக் காட்டிலும் அத்தையின் வார்த்தைக்கு அதிக மதிப்புக் கொடுக்கத் தொடங்கினார்கள். அரை நாழிகை நேரம் அம்மா சாப்பிடக் கூப்பிட்டாலும் அவர்கள் வரமாட்டார்கள்; அத்தை ஒரு தடவை கூப்பிட்டால் ஓடி வந்து விடுவார்கள்.

வேலைக்காரர்கள் வீட்டு அம்மாளைக் காட்டிலும் டில்லி அம்மாளுக்கு அதிக மரியாதை காட்டத் தொடங்கினார்கள். லலிதா ஏதாவது ஒரு காரியத்தை இந்தமாதிரி செய்ய வேண்டும் என்று சொன்னால், "டில்லி அம்மா அப்படிச் செய்யச் சொல்லி யிருக்கிறார்களே!" என்று வேலைக்காரர்கள் கூசாமல் பதில் சொல்லுவார்கள்.

சுண்டு லலிதா சொல்லுகிற காரியத்தை எந்த நாளும் செய்ததில்லை; இப்போதும் அவள் பேச்சை ஒரு பொருட்டாக மதிக்க மாட்டான். ஆனால் சீதா அவனிடம் ஏதாவது செய்யும்படி சொல்லிவிட வேண்டியதுதான்; அடுத்த நிமிஷமே விழுந்தடித்து ஓடிச் சென்று அந்தக் காரியத்தைச் செய்துவிட்டு வருவான். 'என்ன' என்று சொன்னால், 'என்னை' கொண்டு வந்துவிடுவான்!

இதெல்லாம் லலிதாவுக்குத் திருப்தியாகவே இருந்து வந்தது. தன்னுடைய அத்தியந்த அன்புக்குரிய தோழிக்கு இப்படி எல்லாரும் மரியாதை செய்வது அவளுக்கு மகிழ்ச்சி தந்தது. "அத்தங்கா! உன்னிடம் என்னதான் சொக்குப்பொடி இருக்கிறதோ? இப்படி எல்லாரும் மயங்கிப் போய்விடுகிறார்களே!" என்று லலிதா சீதாவிடம் அடிக்கடி சொல்லி வந்தாள்.

பத்தாம் அத்தியாயம்

எலெக்ஷன் சனியன்!

வெள்ளக்கஷ்டத்தில் அகப்பட்ட ஏழைகளுக்கு முடிவில் அதனால் நன்மை ஏற்பட்டது. வயோதிகர்கள், குழந்தைகள், ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் இரண்டு இரண்டு புதுத் துணிகள் உடுத்திக் கொள்ளக் கிடைத்தன. சுத்தமான இடத்தில் சுத்தமான முறையில் கட்டிய புதிய குடிசைகள் கிடைத்தன. ஊருக்கு நடுவே ஒரு சிறு பிள்ளையார் கோவிலும் கட்டிக் கொடுக்கப்பட்டது. பிள்ளையார் கோவிலுக்கு முன்னால் பிரதி சனிக்கிழமைதோறும் பஜனை நடந்தது.

இவ்வாறு வெள்ளக் கஷ்டத்துக்கு ஆளானவர்களின்பாடு கொண்டாட்டமாயிற்று. ஆனால் கஷ்ட நிவாரண வேலை செய்தவர்களின் பாடு திண்டாட்டமாயிற்று. செய்வதற்கு வேலை ஒன்றும் இல்லாமற் போகவே பட்டாபிராமன் மறுபடியும் மனச்சோர்வு அடைந்தான். சீதா சீமைக்குச் சென்ற கணவனைப் பற்றியும் மதராசில்

உள்ள தன் குழந்தையைப் பற்றியும் எண்ணி எண்ணி உருகினுள். வீட்டில் கலகலப்புக் குறைந்தது; எல்லாருடைய முகமும் களை இழந்தது.

ஒரு நாள் மாலை சில நண்பர்கள் பட்டாபிராமனைத் தேடிக் கொண்டு வந்தார்கள். அந்த ஊரில் நகரசபைத் தேர்தல் வருகிறதென்றும் அதற்குப் பட்டாபிராமன் நிற்கவேண்டும் என்றும் அவர்கள் சொன்னுர்கள். தேர்தலில் நின்று ஜயித்தால் சேர்மன் பதவி கிடைப்பதற்கும் 'சான்ஸ்' இருக்கிறது என்று ஆசை காட்டினுர்கள்.

பட்டாபிராமனுக்கு இந்த யோசனை அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஏற்கெனவே ஒரு தடவை தன் தந்தை இன்னெருவருக்காகத் தேர்தலில் தலையிட்டதினுல் நேர்ந்த விளைவுகள் அவனுக்கு எச்சரிக்கையாக இருந்தன. ஆனுலும் அடியோடு அவன் மறுத்துச் சொல்லவில்லை. சிறை சென்று வந்த தியாகியாகிய அவனை யாரும் எதிர்த்து நிற்க மாட்டார்கள் என்று நண்பர்கள் கூறினுர்கள். அது மட்டுமல்லாமல், சமீபத்தில் ஏற்பட்ட வெள்ள விபத்தின் போது அவன் ஏழை ஜனங்களுக்குச் செய்த சேவையைத் தேவபட்டணமே பார்த்துப் பிரமித்துப் போயிருப்பதாகவும், யாராவது அவனை எதிர்த்து நிற்கத் துணிந்தால் அத்தகைய எதிரிக்குத் தேவபட்டணம் நல்ல பாடம் கற்பிக்கும் என்றும், பட்டாபிராமன் வெற்றி அடைவது சர்வ நிச்சயம் என்றும் அந்த நண்பர்கள் சொன்னுர்கள். எல்லாவற்றையும் கேட்ட பட்டாபிராமன் "யோசித்துச் சொல்லுகிறேன்" என்று பதில் அளித்தான்.

அன்றிரவு சாப்பிடும்போது லலிதா, "யாராரோ வந்து என்னென்னமோ சொல்லிக் கொண்டிருந்தார்களே? என்ன சொல்லிக் கொண்டிருந்தார்கள்?" என்று கேட்டாள்.

"முனிசிபல் எலெக்ஷனுக்கு நிற்கும்படி சொன்னுர்கள்! உன் அபிப்பிராயம் என்ன?" என்று பட்டாபிராமன் லலிதாவைக் கேட்டு விட்டுச் சீதாவின் முகத்தைப் பார்த்தான்.

லலிதா "எலெக்ஷனும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். ஊரில் இருப்பவர்களுக்கு வேறு வேலை இல்லையாக்கும்? ஏமாந்தவர் யார் என்று தேடி வந்தார்களாக்கும்?" என்றுள் லலிதா.

"சட்டென்று அப்படி ஏன் சொல்கிருய், லலிதா! வந்தவர்கள் எல்லாரும் உன் அகத்துக்காரரின் சிநேகிதர்கள் தானே? அவர்கள் வேண்டுமென்று கெடுதலான காரியத்தைச் சொல்லுவார்களா?" என்று சீதா கேட்டாள்.

"உனக்கு இந்த ஊர் சமாசாரம் தெரியாது, அத்தங்கா! முன்னே ஒரு தடவை இவருடைய அப்பா யாரோ ஒருவருக்காக எலெக்ஷனில் வேலை செய்தார். அதனுல் எங்களுக்கும் எதிர் வீட்டுக்காரர்களுக்கும் பேச்சு வார்த்தையே இல்லாமற் போயிற்று. பல வருஷங் கழித்துச் சூரியா வந்து சண்டையைத் தீர்த்து வைத்தான்! உனக்குக்கூட நான் எழுதியிருந்தேனே?" என்றுள் லலிதா.

"அப்போது நடந்ததற்கும் இப்போது நடப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம்! இவருடைய அப்பா தேசத்துக்காக எதுவும் செய்யவில்லை. இவர் இரண்டரை வருஷம் சிறையில் இருந்து விட்டு வந்திருக்கிறுர். இவர் எலெக்ஷனுக்கு நின்றுல் யார் எதிர்த்து நிற்க முடியும்? எதிர்த்து நிற்கிறவர்கள் அதோகதி அடைய வேண்டியது தான்!" என்றுள் சீதா.

"நீங்கள் நினைப்பதுபோல் அவ்வளவு சுலபமான காரியமில்லை. கள்ளமார்க்கெட்டில் ஏராளமான பணம் பண்ணிய ஆசாமி ஒருவர் இந்த வார்டில் நிற்கப்போவதாகக் கேள்விப்படுகிறேன். போட்டி பலமாக இருக்கும்!" என்றுன் பட்டாபிராமன்.

"எவ்வளவு பலமாக இருந்தாலும் சரிதான்! அதற்காகப் பயந்து விடுவதா என்ன? நீங்கள் மட்டும் தேர்தலுக்கு நிற்கும் பட்சத்தில் நான் வீடு வீடாகப் போய் வோட்டுக் கேட்கத் தயார்!" என்றுள் சீதா.

"நீங்கள் அவ்வளவு ஊக்கமாக வேலை செய்வதாயிருந்தால் நானும் நிற்கத் தயார்!" என்று சொன்னுன் பட்டாபிராமன்.

"அப்படி உற்சாகமாகச் சொல்லுங்கள்! நாளைக்கே வேலை ஆரம்பித்து விடலாம்!" என்றுள் சீதா.

"எல்லாவற்றுக்கும் கொஞ்சம் யோசித்துச் செய்யலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. எதிர்த்த வீட்டுக்காரரிடம் யோசனை கேளுங்களேன்.

நமக்கு வேண்டியவர்களில் வயதான வர், சரியான யோசனை சொல்லக் கூடியவர், தாமோதரம் பிள்ளை தானே?" என்று லலிதா சொன்னாள்.

"எதிர்த்த வீட்டுக்காரரைப்போய்க் கேட்பது என்ன? அவர்தான் ஜஸ்டிஸ் கட்சிக்காரர் என்பது தெரியுமே? எலெக்ஷனுக்கு நீங்கள் நிற்க வேண் டாம் என்றுதான் அவர் சொல்லு வார்!" என்றான் சீதா.

"எலெக்ஷனுக்கு நின்றால் ரொம்பப் பணச் செலவு ஆகும். நமக்கு அப்படி ஒன்றும் இப்போது வருமானமும் இல்லையே?" என்றாள் லலிதா.

"பணம், பணம் என்று அடித்துக் கொள்வது எனக்குப் பிடிப்பதே இல்லை. பணத்தைத் தலையில் கட்டிக் கொண்டா போகப் போகிறோம்? அப்படியொன்றும் பணச் செலவும் அதிகமாக ஆகிவிடாது. ஆகிற செல வுக்கு நான் என் கழுத்துச் சங்கிலியை விற்றுக் கொடுக்கிறேன்!" என்று சீதா ஆவேசமாகக் கூறினாள்.

"நீ ஒன்றும் கழுத்துச் சங்கிலியை விற்றுக் கொடுக்கவேண்டாம். அப்படி யொன்றும் நாங்கள் கதியற்றுப் போய் விடவில்லை!" என்றாள் லலிதா.

"போதும் போதும்; நிறுத்து இந்த உதவாக்கரைப் பேச்சை!" என்று பட்டாபிராமன் கடுகடுப்புடன் லலிதா வைப் பார்த்துச் சொன்னான்.

"யார் என்ன சொன்னாலும் சரி தான்; நீங்கள் எலெக்ஷனுக்கு நிற் கிறது எனக்குக் கொஞ்சம் கூடப் பிடித்தமில்லை!" என்றாள் லலிதா.

"உனக்கு நான் செய்கிற காரியம் எதுதான் பிடித்தமாயிருந்தது? நான் 1942-ல் சட்டமறுப்புச் செய்தபோதும் நீ 'வேண்டாம்' என்றுதான் சொன் னாய். உன்னுடைய யோசனையைக் கேட்டால் உருப்பட்டாற் போலத் தான்!" என்றான் பட்டாபிராமன்.

லலிதாவின் கண்களில் கண்ணீர் ததும்பிற்று. அதைக் காட்டிக்கொள்ள அவளுக்கு வெட்கமாயிருந்தது. வேறு பக்கம் திரும்பிக் கண்ணீரைத் துடைத் துக் கொண்டாள்.

சமையற்காரியோ அல்லது வேறு வேலைக்காரர்களோ இருக்கும்போது தன் கணவருடன் எந்த விஷயத்தைப் பற்றியும் வாக்குவாதம் தொடங்கக் கூடாது என்று அவள் மனம் சங்கல் பம் செய்து கொண்டது. வேலைக் காரர்கள் முன்னால் மட்டும் என்ன? சீதா இருக்கும்போது கூட எந்த விஷ யத்தைப் பற்றியும் இனிமேல் விவா தம் செய்யக் கூடாதுதான்! என்ன அவமானம்! என்ன மானக்கேடு!

மறுநாள் பட்டாபிராமன் எதிர் வீட்டுக்குப் போய்த் தாமோதரம் பிள்ளையிடம் தான் எலெக்ஷனுக்கு நிற்கத் தீர்மானித்திருப்பதாகவும் அவ ருடைய ஆசீர்வாதம் வேண்டும் என் றும் தெரியப்படுத்தினான்.

"என்னுடைய ஆசீர்வாதம் வேண் டியமட்டும் தருகிறேன், தம்பி! ஆனால் இந்த அருமையான யோசனை உனக்கு யார் சொன்னது?" என்று தாமோ தரம் பிள்ளை கேட்டார்.

"எல்லா சிநேகிதர்களும் ஒருமிக்க வந்து சொன்னார்கள்; எனக்கும் அது சரி என்று தோன்றித்தான் நிற்கி றேன்" என்றான் பட்டாபி.

"அதிலுள்ள லாப நஷ்டங்களைப் பற்றி யோசித்தாயா? பணச்செலவு ரொம்ப ஆகுமே! அதோடு, வீண் விரோதங்கள் எல்லாம் ஏற்படும். இப்போது உனக்கு ஊரில் ரொம்ப நல்ல பெயர் இருக்கிறது. அதை ஏன் கெடுத்துக் கொள்ளுகிறாய்?" என் றார் தாமோதரம் பிள்ளை.

"நல்ல பெயர் எதற்காகக் கெடு கிறது? தேசத்தொண்டில் இறங்கிய பிறகு அதையெல்லாம் பார்த்தால் சரிப்படுமா? நான் சிறைக்குப் போவ தற்கே பயப்படவில்லையே? மற்ற தற்கெல்லாம் பயப்பட்டு விடுவேனா?" என்றான் பட்டாபிராமன்.

"சிறைக்குப் போவது வேறு விஷ யம், தம்பி! அதனால் யாருக்கும் கஷ் டமோ நஷ்டமோ இல்லை. ஆனால் எலெக்ஷன் விஷயம் அப்படி யல்ல. பல பேருடைய துவேஷத்துக்கு ஆளாகும்படி நேரிடும்."

"எது எப்படியானாலும் நான் தேர்தலுக்கு நிற்பது என்று தீர்மா னித்துச் சிநேகிதர்களிடம் சொல்லியும் விட்டேன். இனிப் பின்வாங்குவதற் கில்லை!" என்றான் பட்டாபிராமன்.

"அப்படியானால் சரி! உனக்கு வெற்றி கிடைக்கக்கூடும். அதற்கு



என்னுலான உதவியும் செய்கிறேன். உன் தகப்பனுரையும் சூரியாவையும் உத்தேசித்து உனக்கு நான் உதவி செய்யத்தான் வேண்டும். ஆனால் ஒரு விஷயம், தம்பி! அந்தப் புது டில்லிப் பெண் சீதா எப்போது ஊருக்குப் போகப் போகிருள்? சீக்கிரத்தில் அவளை அனுப்பி விடுவது நல்லது!'' என்ருர் தாமோதரம் பிள்ளை.

"அதென்ன திடீரென்று இப்படிச் சொல்கிறீர்கள்? சீதாவைப் பற்றி நீங்கள் அடிக்கடி புகழ்ந்து பாராட்டு வது வழக்கம் ஆயிற்றே?''

"நல்ல காரியம் செய்து கொண் டிருந்தவரையில் புகழ்ந்து பாராட்டி னேன். இந்தக் காரியத்தில் உன்னைத் தூண்டிவிட்டிருப்பது நல்ல காரியம் என்று எனக்குத் தோன்றவில்லை!''

"பின்னைவான்! சீதாவுக்கும் என் னுடைய தீர்மானத்துக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை! அவள் என் னைத் தூண்டி விடவும் இல்லை! எனக் குச் சுயபுத்தி இல்லையா, என்ன?'' என்ருன் பட்டாபிராமன்.

• • •

நகரசபைத் தேர்தலுக்கு நிற்ப தாகப் பட்டாபிராமன் தெரிவித்த நாளிலிருந்து அந்த வீட்டில் வருவோர் போவோரின் கூட்டமும் கூச்சலும்



அதிகமாயின. பகல் என்றும் இரவென்றும் இல்லாமல் தேர்தலுக்கு வேலை செய்யும் சிநேகிதர்களும் தொண்டர்களும் எந்த நேரத்திலும் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் பலர் பட்டாபியின் வீட்டிலேயே காப்பி, சிற்றுண்டி, சாப்பாடு முதலியவை வைத்துக் கொண்டார்கள். வெற்றிலை கவுளி கவுளியாகவும் புகையிலை கத்தை கத்தையாகவும் செலவாயிற்று. பணம் நோட்டு நோட்டாகச் செலவாகி வந்தது. சீட்டுக்கட்டு தினம் ஒன்று வாங்கப்பட்டது. வீட்டில் ஒரு வருஷத்துக்குச் சேகரித்து வைத்திருந்த உணவுப் பண்டங்கள் எல்லாம் ஒரு மாதத்தில் தீர்ந்து போய்விட்டன.

லலிதாவுக்கு இது ஒன்றும் பிடிக்கவில்லை. அவளுடைய வருத்தத்தை அதிகப் படுத்துவதற்கு இன்னும் சில நிகழ்ச்சிகளும் சேர்ந்து கொண்டன. சீதாவின் ஆடம்பரமும் அதிகார தோரணையும் நாளுக்கு நாள் அதிகமாகி வளர்ந்தன. பெண்மைக்குரிய அடக்கம் வரவரக் குறைந்து வந்தது. தேர்தல் வேலைக்கு என்று வருகிற புருஷர்களோடு சரிசமமாக உட்கார்ந்து கொண்டு இரைந்து பேசுவதும் வாதாடுவதும் 'ஹா ஹா ஹா' என்று கைதட்டிச் சிரிப்பதும் வழக்கமாகிக் கொண்டு வந்தன. சீதாவின் நல்ல குணங்களைப் பற்றி ஏற்கெனவே ரொம்பவும் புகழ்ந்து பேசிய அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் இப்போது அவளைப் பற்றிக் குறைவாகப் பேசத் தொடங்கினார்கள். பட்டாபிராமனைப் பற்றியும் ஒரு மாதிரி ஏகத்தாளமாகப் பேச ஆரம்பித்திருந்தார்கள். இந்தப் பேச்சு லலிதாவின் காதுக்கு எட்டி அவளுக்கு மிக்க மன வேதனையை உண்டு பண்ணி வந்தது.

ஒரு நாள் வாசல் பக்கத்துக் காமிரா உள்ளில் பட்டாபிராமனும் அவனுடைய எலெக்ஷன் தோழர்களும் சீதாவும் உட்கார்ந்து அட்டகாசமாகப் பேசிச் சத்தம் போட்டுச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த லலிதாவின் மனதில் ஆத்திரம் பொங்கிக் கொண்டிருந்தது. வந்திருந்தவர்கள் எப்போது போய்த் தொலைவார்கள் என்று காத்திருந்தாள். அவர்கள் போனதும் சீதாவும் உள்ளே வந்து மச்சுப்படி ஏறித் தன் அறைக்குச் சென்றாள். பிறகு பட்டாபிராமன் உள்ளே வந்தான். லலிதாவைப் பார்த்து, "சமையல் ஆகிவிட்டதா? சீக்கிரம் கிளம்ப வேணும்!" என்றான்.

"நன்றாகச் சீக்கிரம் கிளம்பினீர்கள்! சீக்கிரம் கிளம்பி என்ன கோட்டை கட்டப் போகிறீர்களோ, தெரியவில்லை. இந்த எலெக்ஷன் சனியன் உங்களை நன்றாகப் பிடித்துக்கொண்டு ஆட்டுகிறது!" என்றாள் லலிதா.

"என்ன உளறுகிறாய்? வாயை மூடு! ஷட் அப்!" என்று பட்டாபிராமன் உரத்துக் கத்தினான்.

"நான் ஒன்றும் உளற வில்லை. உள்ளதைத்தான் சொல்லுகிறேன். எலெக்ஷன் சனியன் மட்டுமா? சீதா என்கிற சனியனும் உங்களைப் பிடித்துக் கொண்டிருக்கிறது!" என்று லலிதா ஆத்திரமாகச் சொன்னாள்.

பட்டாபிராமன் ரௌத்ராகாரம் அடைந்தான். அவனுடைய முகம் விகாரப்பட்டது. அவனுடைய உதடுகள் துடித்தன. பற்கள் நறநற வென்று கடித்துக் கொண்டான்.

"என்ன சொன்னாய்? ஜாக்கிரதை! வாயைத் திறந்தாயோ, கொன்று விடுவேன்!" என்று பட்டாபிராமன் பதறிக் கொண்டே சொன்னான்.

"ஆமாம்; அப்படியே கொன்று விடுங்கள்! உங்கள் மகாத்மா காந்தி இதைத்தானே சொல்லிக் கொடுத்திருக்கிறார்?" என்றாள் லலிதா.

பட்டாபியின் பதட்டம் கொஞ்சம் அடங்கியது. தக்க பதில் சொல்வதற்குச் சிறிது யோசித்தான்.

அதற்குள் லலிதா, "இந்த மிரட்டல் எல்லாம் வேண்டாம். நான் சொல்கிறதைக் கொஞ்சம் கேளுங்கள். இப்போதாவது இந்த எலெக்ஷன் சங்கடத்தை விட்டுத் தொலையுங்கள். அதை விட்டுத் தொலைக்க முடியாவிட்டால் சீதாவையாவது இந்த வேலைக்குக் கூப்பிட வேண்டாம். அவளைப் பற்றி ஊர் சிரிக்கிறது. என் மானம் போகிறது!" என்றாள்.

"மானம் போகட்டும்; தாராளமாகப் போகட்டும். நான் எலெக்ஷனை விடுவதாகவும் உத்தேசமில்லை; சீதாவுக்குத் தடை உத்தரவு போடப் போவதுமில்லை. இதிலெல்லாம் நீ தலையிட வேண்டாம். உன் வேலையைப் பார்!" என்றான் பட்டாபிராமன்.

"நான் தலையிடாமல் வேறு யார் தலையிடுவது? நீங்கள் இவ்விதம் சொன்னால் சீதாவை நான் ஊருக்குப் போகச் சொல்லி விடுகிறேன்!" என்றாள் லலிதா.

"சீதாவை ஊருக்குப் போகச் சொல்ல நீ யார்? உனக்கு என்ன அதிகாரம்!" என்று பட்டாபி ராமன் கர்ஜித்தான்.

"பின்னே யாருக்கு அதிகாரம்? என்னுடைய அத்தங்கா சீதாவை நான் அழைத்துக் கொண்டு வந்தேன்; நான் போகச் சொல்கிறேன். அதற்கு வேறு யார் கேட்பது!"

"சீதா இந்த வீட்டிலிருந்து போக மாட்டாள். அப்படி யாராவது போகிறதாயிருந்தால் நீதான் போக வேண்டும்!" என்றான் பட்டாபி.

"என்னுடைய வீட்டிலிருந்து நான் ஏன் போகிறேன்? எங்கிருந்தோ வந்த நாயை வீட்டிலே வைத்து விட்டு?" என்று லலிதா கொக்கரித்தாள்.

பட்டாபி ராமனுக்கு மறுபடியும் ரௌத்ராகாரம் வந்து விட்டது. "என்னடி சொன்னாய்? யாரடி நாய்?" என்று கேட்டுக்கொண்டே அவன் லலிதாவின் அருகில் வந்தான். "இதோ இந்த நிமிஷமே உன்னை இந்த வீட்டை விட்டுத் துரத்திவிட்டு மறு காரியம் பார்க்கிறேன்! திமிர் பிடித்த கழுதை!" என்று சொல்லிக் கொண்டே லலிதாவின் கழுத்தில் கையைப் போட்டு வெளி வாசற்படியை நோக்கித் தள்ளத் தொடங்கினான்.

லலிதா "ஐயோ! ஐயோ!" என்று அலறினாள்.

அதைக் கேட்டுவிட்டு வந்ததைப் போல் சூரியா உள்ளே நுழைந்தான்.

சூரியா வந்ததைப் பார்த்துவிட்டுப் பட்டாபி ராமனும் லலிதாவும் பிரமித்துப் போய் நின்றார்கள்.

மேல் மச்சுப்படியில் நின்றுகொண்டு சீதா இந்த நாடகத்தை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய உள்ளம் கொந்தளித்தது.




மிகவும் ருசிகரமானது மாத்திரமல்ல- இது நல்லது !
Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURYS SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS
முக்கியமாக குழந்தைகளுக்கு
போர்ன்-விடாவிலுள்ள கால்ஷியமும் விடமின்களும், வளரும் குழந்தைகளுக்கு வலுவான எலும்புகளும், கெட்டியான சதையும் வளர உதவுகின்றன. பெரியவர்களுக்கு நிம்மதியான ஆழ்ந்த உறக்க மளித்து ஜீவசக்தி ததும்பச் செய்கின்றன.
காட்பரீஸ்
போர்ன்-வீடா
கால்ஷியம், விடமின்கள் நிறைந்தது.
காட்பரி என்பது சிறந்த ரகத்துக்கு அறிகுறி



மாதக் கடைசி; தேதி இருபத்து மூன்று; வெள்ளிக்கிழமை; மாலை நேரம்.

மாதவன் காரியாலயத்திலிருந்து மனச் சோர்வுடன் வீட்டுக்குத் திரும்பியிருந்தான். அவனுடைய மனச் சோர்வுக்குக் காரணம் வேறொன்றுமில்லை; இந்தியாவின் பொருளாதார நிலை திருப்திகரமாயிருப்பதுபோல் அவனுடைய பொருளாதார நிலை திருப்திகரமாயில்லாமற் போனதுதான்!

அவனுடைய மனைவி மரகதம் அப்பொழுதுதான் கோயிலுக்குப் போவதற்காக வெற்றிலைப் பாக்கு, பூ, பழம், தேங்காய் முதலியவற்றையெல்லாம் எடுத்துப் பூக்கூடையில் வைத்துக் கொண்டிருந்தாள். கடைசியாக எதையோ எடுத்து வைக்கப் போனவள், அது இல்லாமற்போகவே மாதவனிடம் ஓடோடியும் வந்து, "கற்பூரம் வீட்டில் இருக்கிறதாக்கும்னு நினைத்தேன் — இல்லை; ஒரு காலணா இருந்தால் கொடுக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

மாதவன் தன்னுடைய 'மணிபர்'ஸை எடுத்துத் திறந்து பார்த்தான். அதில் ஒரே ஒரு ஓட்டைக் காலணா இருந்தது. அந்தக் காலணாவுக்கும் அன்று வரை செலவு இல்லாமற் போகவில்லை; 'மணிபர்ஸ் காலியாக இருக்கக் கூடாதே!' என்ற அசட்டு நம்பிக்கையின் காரணமாக அவன் அதைப் பத்திரப்படுத்தி வைத்திருந்தான்.

அந்தக் காலணாவைப் பெற்றுக் கொண்டதும், "ஒரே ஒரு காலணாதான் வைத்திருந்தீர்கள் போலிருக்கிறது; அதற்கும் பகவான் பங்குக்கு வந்துவிட்டார்!" என்று மரகதம் சிரித்துக்கொண்டே சொன்னாள்.

"பங்குக்கு வந்துவிட்டாரா! முழுக் காலணாவையும் அவரேயல்லவா அடித்துக் கொண்டு போகிறார்!" என்றான் மாதவன்.

அதற்குள் குழந்தை பானு கையில் பூக்கூடையுடன் அங்கே வந்து, "அம்மா! வா, அம்மா!" என்று மரகதத்தை அழைத்தாள்.

"அத்தை வரவில்லையா?" என்று கேட்டாள் மரகதம்.

"இதோ, வந்து விட்டேன்!" என்றாள் அறைக்குள் தன் குழந்தைக்குப் பால் புகட்டிக் கொண்டிருந்த அத்தை. அவள் மாதவனின் தங்கை; ஊரிலிருந்து வந்திருந்தாள்.

எல்லோரும் கோயிலுக்குக் கிளம்பினார்கள். குழந்தை முரளி மட்டும் போகவில்லை; அவன் ஏதோ பாடம் எழுதுவதில் முனைந்திருந்தான்.

"என்ன, மரகதம்! பேசாமற் போகிறாயே! நிஜ மனைவியைவிட கதையில் வரும் மனைவியே எவ்வளவோ தேவலைபோலிருக்கிறதே!" என்றான் மாதவன்.

மரகதம் சற்று நின்று அவனைத் திரும்பிப் பார்த்து, "ஏன், நிஜ மனைவிக்கு என்ன குறைச்சலாம்?" என்று கேட்டாள்.

"கணவன் வேலை முடிந்து வீட்டுக்கு வந்ததும் கதையில் வரும் மனைவி காப்பி கொடுக்கத் தவற மாட்டேன் என்கிறாள்; நீ என்னடா வென்றால் ......"

"கதையில் வரும் மனைவியா கொடுக்கிறாள்? கதாசிரியர் கொடுக்கிறார்! — அவருக் கென்ன, காப்பி போடவேண்டுமானால் சர்க்கரை தேவையில்லை, பால் தேவையில்லை, காப்பிப் பொடி தேவையில்லை; கையில் பேனாவும் மேஜையின்மேல் காகிதமும் இருந்தால் எத்தனை 'கப்' காப்பி வேண்டுமானாலும் போட்டுவிடுவார்! என்னால் அப்படிப் போட முடியுமா? நான்தான் காலையிலேயே படித்துப் படித்துச் சொல்லியனுப்பினேனே, சாயங்காலம் வரும்போது மறக்காமல் காப்பிப் பொடி வாங்கிவாருங்கள் என்று!—வாங்கி வந்தீர்களா?"

"பால்காரன் கடனுக்குப் பால் ஊற்றுவதுபோலக் காப்பிப் பொடியும் யாராவது கடன் கொடுத்தால் தேவலை! இருபத்து மூன்றாம் தேதியன்று ஒரு சம்பளமா வருகிறது? முதல் தேதி யன்றுதான் வாங்கிக் கொண்டு வரவேண்டும்."

"அப்படியானால் முதல் தேதி வரை காப்பி சாப்பிடாமல் இருங்கள்!"

"சரி, கொஞ்சம் வெந்நீராவது கொடுத்து விட்டுப் போயேன்!"

"கொஞ்சம் என்ன, எவ்வளவு வேண்டுமானாலும் தருகிறேன்!" என்று சொல்லிக் கொண்டே அடுக்களைக்குச் சென்று, ஒரு செம்பு நிறைய வெந்நீரைக் கொண்டு வந்து அவனுக்கு எதிரே 'நக்' என்று வைத்தாள் மரகதம்.

இந்தச் சமயத்தில், "அண்ணா! இன்று கூட அவரிடமிருந்து கடிதம் வந்தது ......" என்று ஆரம்பித்தாள் தங்கை காவேரி.

"உடனே புறப்பட்டு வரச் சொல்லித் தானே ......?"

"ஆமாம்."

"இப்பொழுது எங்கே புறப்படுவது? முதல் தேதியன்றுதான் புறப்படவேண்டும்."

இடையில் பாலு குறுக்கிட்டு, "ஏன், அப்பா! என்னை எப்போ அப்பா சர்க்கஸுக்குக் கூட்டிக் கொண்டு போவே?" என்று தினசரி கேட்கும் கேள்வியைக் கேட்டு வைத்தான்.

"முதல் தேதியன்று கட்டாயம் கூட்டிக் கொண்டு போவேன்!" என்று தினசரி சொல்லும் பதிலைச் சொல்லி வைத்தான் மாதவன்.

"சாக்லேட் ......?"

"முதல் தேதிக்கு!"

"அப்பா! ஹிஸ்டரிக்கு ஒரு கோட், ஜாக்ரபிக்கு ஒரு கோட், மேதமெடிக்ஸுக்கு ஒரு கோட்......" என்று சந்தர்ப்பத்தைக் கைவிடாமல் ஆரம்பித்தான் முரளி.

"சரிதாண்டா! ஆறு கோட்டுப் புத்தகங்கள் வேண்டுமென்று சொன்னாயே, அதைத்தானே கேட்கிறாய்?" என்று இடைமறித்துக் கேட்டான் மாதவன்.

"ஆமாம், அப்பா!"

"முதல் தேதியன்று வாங்கிக் கொண்டு வருகிறேன்."

"பேபி ஸைக்கிள் .....?"

"முதல் தேதிக்கு!"

"எதிர்வீட்டில் இன்று எல்லோரும் 'எக்ஸிபி'ஷனுக்குப் போய் வந்தார்கள். இதுவரை அவர்கள் நாலுதரம் போய் வந்து விட்டார்கள். நீங்கள் என்னடா வென்றால் ஒரு தரம்கூட அழைத்துக் கொண்டு போக மாட்டேன் என்கிறீர்கள்!" என்றாள் அதற்குள் காப்பி விஷயத்தை மறந்த மரகதம்.

"அதுதான் முதல் தேதியன்று ஆகட்டும் என்று சொன்னேனே!" என்றான் முதல் தேதியை மறக்காத மாதவன்.

"எல்லாவற்றுக்கும் முதல் தேதிதான்!" என்று அலுத்துக் கொண்டு மரகதம் கடையைக் கட்டினாள். பாலுவும் காவேரியும் அவளைப் பின் தொடர்ந்து சென்றனர்.



‘அப்பாடா!’ என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே மாதவன் சாய்வு நாற்காலியில் சாய்ந்தான்.

“ஸார்!” என்று குரல் கொடுத்துக் கொண்டே வீட்டுக்காரர் வந்தார்.

“வாங்க, ஸார்! என்ன விசேஷம்?” என்று யாரை என்ன கேட்கிறோம் என்று தெரியாமலே கேட்டு வைத்தான் மாதவன்.

“வீட்டுக்காரருக்கும் குடியிருப்பவருக்கும் மத்தியில் வேறு என்ன ஸார் விசேஷம் இருக்கும்? தேதி இருபத்து மூன்று ஆகி விட்டதே......!”

“ஓ, அதுவா! முதல் தேதியன்று ஆகட்டும், ஸார்! இரண்டு மாத வாடகையையும் சேர்த்துக் கொடுத்து விடுகிறேன். இந்த மாதம் காவேரி ஊரிலிருந்து வந்திருந்தாளோ, இல்லையோ — அதனால் கொஞ்சம் தாமதம்......”

“சரி; மறந்து விடாதீர்கள், ஸார்!” என்று சொல்லிவிட்டு, வீட்டுக்காரர் நல்லவேளையாக அத்துடன் நழுவினார்.

மாதவன் தலையைத் தடவி விட்டுக் கொண்டான்.

அந்தச் சமயம் பார்த்து வண்ணாத்தி வந்து அவனுக்கு எதிரே நின்று, “மத்தியானம் சலவை கொண்டுவந்து கொடுத்தேனுங்க; இதோடு நாலு சலவை ஆச்சுங்க; அம்மா,



‘உனக்கு ஐயா வந்ததும் வா’ன்னு சொன்னாங்க; அதுதான் வந்தேனுங்க!” என்றாள்.

“காசுக்கு வேளை நாழி, நாள் கிழமை ஒன்றும் கிடையாதா? நினைத்தபோதெல்லாம் வந்துவிட வேண்டியதுதானா? போ, போ! முதல் தேதியன்று வா!” என்று அவளை விரட்டிவிட்டு, சற்று விச்ராந்தியாக இருந்துவிட்டு வரலாமென்று மாதவன் மாடிக்குச் சென்றான்.

அடுத்த வீட்டு மொட்டை மாடியில் சாப்பிட்டுவிட்டு உலாவிக் கொண்டிருந்த சதாவதானம் மாதவனைக் கண்டதும், “ஸார்! ஒரு சின்ன விஷயம் — நீங்கள் என்னிடம் ஒரு சமயம் ஐந்து ரூபாய் வாங்கினீர்கள்; மறந்தே போய்விட்டீர்கள்!” என்று தலையைச் சொறிந்துகொண்டே சொன்னார்.

“மறக்கவில்லை, ஸார்! வரப்போகிற முதல் தேதியன்று கட்டாயம் கொடுத்து விடுகிறேன்!” என்று சொல்லிவிட்டு, மாதவன் உடனே கீழே இறங்கி வந்துவிட்டான்.

★

மாதவனுக்கு மாதா மாதம் நூற்றைம்பது ரூபாய் சம்பளம் வந்து கொண்டிருந்தது. அந்தச் சம்பளத்தைக் கொண்டு அவன் எவ்வளவோ சௌகரியமாக வாழலாம் என்றுதான் ஆரம்பத்தில் நினைத்தான். ஆனால் நடைமுறையில் அது அசாத்தியம் என்று தோன்றிற்று. அதற்காக அவன் தன்னுடைய வாழ்க்கைச் செலவை எப்படி எப்படியெல்லாமோ கட்டுப்படுத்திப் பார்த்தான். அவ்வாறு கட்டுப்படுத்திக் கொள்ளும்போது அவன் அடுத்த வீட்டுக்காரரையும், அவரையும் மிஞ்சிய அந்த ‘நாலுபேரை’யும் கொஞ்சம் அனுசரித்தே போகவேண்டியிருந்தது.

‘உண்டுண் டுறங்குவதுதான் வாழ்க்கை’ என்னும் கூற்றை மாதவன் ஒப்புக் கொள்வதில்லை. அழகு எதிலிருந்தாலும், எங்கிருந்தாலும் அதை அனுபவிக்கும் திராணி அவனுக்கு இயற்கையிலேயே இருந்தது. அடுத்த வீட்டுக்காரி நல்ல புடவையோ, நகையோ அணிந்திருந்தால் அதே மாதிரி தன் மனைவியும் அணிய வேண்டும் என்று அவன் விரும்புவான். பக்கத்து வீட்டுக் குழந்தை ‘சாக்லேட்’ தின்றால், தன் வீட்டுக் குழந்தை அதனிடம் கையேந்தி நிற்கக் கூடாது என்பது அவன் எண்ணம். எதிர் வீட்டுச் சிறுவன் ஸைக்கிள் விட்டால், தன் வீட்டுச் சிறுவன் அந்த ஸைக்கிளுக்காக ஏங்கி நிற்கக் கூடாது என்பது அவன் ஆசை. இவை

யெல்லாவற்றையும்விட, பார்தசாட்டின் பழம் பெருமையை விளக்கும் சின்னங்கள் எதுவாயிருந்தாலும் அவற்றைப் பார்க்க அவன் துடிதுடிப்பான்; அருங் கலைகளில் அவனுக்கிருந்த ஆர்வத்தையோ சொல்லி முடியாது.

இத்தகைய மனோபாவத்தின் காரணமாக அவன் தன் வாழ்க்கையில் இருந்த கொஞ்ச நஞ்சம் இன்பத்தையும் அனுபவிக்க முடியாமற் போயிற்று; துன்பம், துன்பம், துன்பம் என்று அவன் ஓரே துன்பத்தில் உழல வேண்டியதாயிற்று. அந்தத் துன்பம் ஒவ்வொரு முதல் தேதியும் உச்ச நிலையை அடையும்; முதல் தேதி வருவதற்கு ஒரு வாரம் இருக்கும்போதே துன்பத்தின் சாயை அவனைத் தொடரும்.

அன்றிரவாவது அவன் நிம்மதியாகத் தூங்க முடிந்ததா?—இல்லை. "பத்துப் பதினைந்து' ரூபாயில் மில் புடவைகளிலாவது இரண்டு எடுத்துக் கொடுக்கிறேன் என்றீர்களே, எடுத்துக் கொடுத்தீர்களா?" என்று கேட்டுக் கொண்டே அவன் அறைக்குள் வந்தாள் மரகதம்.

"எங்கே எடுத்துக் கொடுப்பது, மரகதம்? மாதம் பிறந்தால்தான் ஏதாவது ஒரு புதிய தொல்லை வந்து சேருகிறதே!"

"சொன்னால் கோபித்துக் கொள்வீர்கள்—நீங்கள் போகிற தொல்லையையாவது போக விட்டால்தானே......?"

"காவேரியைப் பற்றித்தானே சொல்கிறாய்? அவளை அனுப்பி வைப்பதற்குக் குறைந்த பட்சம் முப்பது ரூபாயாவது வேண்டுமே, அதற்கு என்ன செய்வது?"

"முப்பது ரூபாய் இல்லை என்று சொல்லிக்கொண்டு, இதுவரை நீங்கள் அவர்களுக்காக அறுபது ரூபாய் செலவழித்திருப்பீர்கள் போலிருக்கிறதே!"

"ஒரு பெரிய உண்மையை எடுத்துச் சொல்கிறாய், மரகதம்! நம்மைப் போன்றவர்களுடைய கஷ்டம் எப்படி வளருகிறது, தெரியுமா?—இப்படித்தான் வளருகிறது!"

"செலவைக் கூடியவரை கட்டுப்படுத்திக் கொண்டு சிக்கனமாக வாழ முயன்றால் கஷ்டம் என் வளருகிறது?"

"ஏது, உன்னிடமும் ஒரு அனுபவசாலி சொல்லியிருப்பதுபோல அந்த 'மலிவான சரக்கு' இருக்கிறது போலிருக்கிறதே!"

"எந்த மலிவான சரக்கு?"

"அது தெரியாதா, உனக்கு? அது தான் புத்திமதி!"

மரகதத்துக்குச் சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது.

"இதைக் கேள், மரகதம்! உன்னைப் போல்தான் என்னுடைய நண்பர்களெல்லாம்கூடச் சொல்கிறார்கள். அவர்களுடைய புத்திமதியின்படி நாம் சிக்கனமாக வாழ வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும், தெரியுமா? முதலில் இந்த வீட்டைக் காலி செய்துவிட்டுக் குடியிருக்க ஒரு 'ஒளிக் கூண்டு' வாங்கிக்கொள்ள வேண்டும்; நீயும் நானும் பழைய மலையாளத்து ஸ்திரீ-புருஷர்களைப்போல ஆளுக்கொரு முண்டு வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டும்; காலையில் வெறும் காப்பி குடிக்கிறோமல்லவா? அதை நிறுத்திவிட்டுக் கொட்டாவி விட்டுக் கொண்டே வேலைக்குக் கிளம்ப வேண்டும். அப்புறம் இரண்டு வேளைச் சாப்பாட்டை ஒரு வேளையாகக் குறைத்துக் கொள்ள வேண்டும்......"


"வேடிக்கைதான்! சிக்கனம் என்றால் இதுவா சிக்கனம்......?"

"பின் என்ன செய்வது? கூரை வீட்டை இடித்துவிட்டு மாடி வீடு கட்டலாம் என்று இருந்தோமே, அதை நிறுத்தி விடுவதா? 'ஆஸ்டின்' காரை விற்றுவிட்டு 'போர்டு' கார் வாங்கலாம் என்று இருந்தோமே, அந்த யோசனையைக் கைவிட்டு விடுவதா? உச்சி வேளையில் பழ ரசம் அருந்திக் கொண்டிருந்தோமே, அதை மறந்துவிட்டுப் பச்சைத் தண்ணீர் குடிப்பதா......?"

"எட்டாதவற்றுக்கெல்லாம் கொட்டாவி விட்டு என்ன பிரயோஜனம்......?"

"இல்லையே! எட்டுடவைக்கே அல்லவா நாம் கொட்டாவி விடவேண்டியிருக்கிறது......!"

"அதைச் சொல்லவில்லை, நான்! வாழ்க்கைச் செலவுகளை வரவுக்குத் தகுந்தபடி ஒரு



"அடாடா, ஒரு காலணாவைக் கூடக் காணோமே! 'இன்கம்டாக்ஸ்' காரன் நமக்கு முன்னே வந்து போய்விட்டான்போல் இருக்கிறது!"

ஒழுங்கு படுத்திக் கொள்ள வேண்டும் என்கிறேன்; அதாவது, மேற்கொண்டு கடனே வாங்கக் கூடாது என்கிறேன்!"

"அதற்கு வாழ்க்கைப் பாதை பட்டணத்து ரஸ்தா மாதிரி தார் போட்டு 'ஜம்' மென்று இருக்கவேண்டும். அப்படியில்லையே! அது மேடும் பள்ளமும் நிறைந்த பட்டிக் காட்டு ரஸ்தா மாதிரியல்லவா இருக்கிறது? அதை ஒரு ஒழுங்குக்குக் கொண்டுவருவது எப்படி?"

"போதுமென்ற மனம் இருந்து, உள்ளவரை திருப்தியும் அடைவதாயிருந்தால் ..."

"இன்று சாயந்திரம் நீ காப்பி இல்லை என்றாய்; நான் திருப்தி யடைந்துவிட்டேன். அதேமாதிரி நான் புடவை இல்லை என்கிறேன்; நீயும் திருப்தியடைந்து விடுகிறாயா?"

"ரொம்ப அழகுதான்!"

"பார்க்கப்போனால் நம்மைக் காட்டிலும் வாழ்க்கையில் குறைந்த அளவுத் தேவையுடன் திருப்தி யடைபவர்கள் வேறு யாருமே இருக்க மாட்டார்கள், மரகதம்!"

"ஏன் இல்லை? எத்தனையோ பேர் இருக்கிறார்கள்! முனியன், மூக்கன், தொப்பை, சப்பை என்று இல்லையா?"

"அவர்கள் எங்கே வாழ்கிறார்கள்? பிறர் வாழ்வதற்காக நிமிஷத்துக்கு நிமிஷம் செத்துக்கொண் டிருக்கிறார்கள்! அவர்களுக்கும் நமக்கும் வித்தியாசம் இருக்கிறது, மரகதம்! பிரெஞ்சு அறிஞன் ஒருவன் ஜனங்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்திருக்கிறான். அதாவது மேல் வகுப்பு, மத்திய வகுப்பு, கீழ் வகுப்பு என்று அவன் வகுத்திருக்கிறான். 'மேல் வகுப்பார் சுதந்திரத்தை விலைக்கு வாங்குகிறார்கள்; கீழ் வகுப்பார் சுதந்திரத்தை விலைக்கு விற்கிறார்கள்' என்று அவன் சொல்கிறான். இந்த இரண்டு வகுப்பார்களுக்கும் மத்தியில் இரண்டுங் கெட்டானாக இருந்துகொண்டு அவதிப்படுபவர்கள் தான், நம்மைப் போன்றவர்கள். நம்முடைய சூழ்நிலை வேறு; அவர்களுடைய சூழ்நிலை வேறு. நம்முடைய சுற்றுப்புறம் வேறு; அவர்களுடைய சுற்றுப்புறம் வேறு. நம்முடைய ஆசாபாசங்கள் வேறு; அவர்களுடைய ஆசாபாசங்கள் வேறு. இவையனைத்தையும் கூட்டிக் குழப்பி ஒன்று சேர்க்கத்தான் அரசியல் தலைவர்கள் எத்தனையோ ஆயிரமாயிரம் வருஷங்களாக முயற்சி செய்து வருகிறார்கள். அவர்களுடைய முயற்சி இன்றுவரை வெற்றி யடையவில்லை......"

"இது என்ன, பெரிய பிரசங்கம் செய்ய ஆரம்பித்து விட்டீர்களே! — போதும், தூங்குங்கள்!" என்று சொல்லிவிட்டு,



வாங்குபவர்:—ஐயா, கடைக்காரரே! எனக்கு நாழிகை யாகிறது; இந்தப் பாட்டுப் புஸ்தகத்தைச் சொல்லிக் கொடுங்கோ!

கடைக்காரர்:— புஸ்தகம் வேணுமென்றால் எடுத்துக்குங்க! சொல்லிக் கொடுக்க வேணுமென்றால் பாட்டு வாத்தியாரிடந்தான் போகணும்!

மரகதம் வெளியே வந்து தன் ராத்தனுடன் படுத்துக் கொண்டாள்.

"தேவைக்கு மேல் வரும்படி உள்ளவர்களுக்கல்லவா சிக்கன உபதேசம் செய்ய வேண்டும்? தேவைக்குக் குறைவான வரும்படி உள்ளவர்களுக்குச் சிக்கன உபதேசம் செய்து என்ன பிரயோஜனம்?" என்று தனக்குள் முனகிக் கொண்டே அப்படியும் இப்படியுமாகப் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தான் மாதவன்.

★

மறுநாள் காலை. "மரகதம்! குளிப்பதற்கு வெந்நீர் போட்டுவிட்டாயா?" என்று கேட்டுக் கொண்டே மாதவன் எழுந்து வந்தான்.

"கரி இல்லை; கட்டையும் இன்னும் இரண்டு நாட்களுக்குத்தான் காணும் போலிருக்கிறது. நீங்கள் செம்பை எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குப் போங்கள்!" என்றாள் மரகதம்.

"சரி, அப்படியே செய்தால் போச்சு!" என்று அழுத்தலாகச் சொல்லிவிட்டு மாதவன் கிணற்றடியை நோக்கி நடந்தான்.

அதன் பயனாக அன்று மாலை அவன் ஜல தோஷத்துடன் வீடு திரும்ப வேண்டியதாயிற்று; அன்றிரவே அவனுக்கு ஜுரம் வேறு வந்துவிட்டது. பொழுது விடிந்ததும்

மரகதம், "டாக்டரிடம் போய் வாருங்களேன்!" என்று சொன்னாள்.

"எடுக்கும்போதே டாக்டரிடம் போவானேன்? உன்னுடைய சிக்கன உபதேசத்தை உத்தேசித்து இரண்டு நாட்கள் ஆஸ்பத்திரிக்குத்தான் போய் வருவோமே என்று பார்க்கிறேன்!" என்றான் மாதவன்.

"உங்கள் இஷ்டம்!" என்று சொல்லி, முகவாய்க்கட்டையைத் தோளில் இடித்துக் கொண்டாள் மரகதம்.

இரண்டு நாட்கள் ஆஸ்பத்திரியில் மருந்து சாப்பிட்டதினால்தானோ என்னவோ, மாதவன் படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியாதவனானான். இப்பொழுது அவன் டாக்டர் வீட்டுக்குப் போவதாயிருந்தால் ஏதாவது ஒரு வாகனத்தில் தான் போகவேண்டும். அதற்குக் காசு வேண்டாமா? என்ன செய்வது? மரகதம் நல்ல வேளையாகக் கடுகு டப்பியில் எட்டணா சேர்த்து வைத்திருந்தாள். அதை வாங்கிக் கொண்டு மாதவன் டாக்டர் வீட்டுக்குப் போனான். டாக்டர் தெரிந்தவராகையால் மருந்துக்கு உடனே பணம் கேட்கவில்லை; முதல் தேதியன்று பில் அனுப்பி வைக்கலாம் என்று பேசாமல் இருந்துவிட்டார்.

மரகதம் தனக்குத் தெரிந்த சிநேகிதி ஒருத்தியிடம் இருபத்தைந்து ரூபாய் கடன் வாங்கி அந்த வாரம் முழுவதும் காலக்ஷேபம் செய்து வந்தாள். ஒரு வாரத்தில் மாதவனின் உடம்பும் தேறிற்று.

அன்று முதல் தேதி; அதே வெள்ளிக்கிழமைதான்; ஆனால் காலை நேரம்.

அதற்கு முதல் நாளே மாதவனுக்குச் சம்பளம் வந்துவிட்டது. தங்கையின் பிரசவத்துக்காக வாங்கிய ஆறு ரூபாய்க் கடனுக்கு இருபது ரூபாய் கொடுத்துவிட்டுப் பாக்கியை வீட்டுக்குக் கொண்டு வந்திருந்தான். அவன் முகத்தை அன்று ஏனோ பார்க்கச் சகிக்கவில்லை; அவ்வளவு வேதனை அவனுடைய முகத்தில் குடிகொண்டிருந்தது. வீட்டில் இருந்தவர்கள் அவனை நெருங்கவே பயந்தனர். குழந்தைகள் அவனைப் பீதியுடன் பார்த்தன.

"காவேரி!" என்று ஒரு காரணமும் இல்லாமல் இரைந்தான் மாதவன்.

அவள் கைக்குழந்தையுடன் வந்து அவனுக்கு எதிரே நின்றாள். அவளிடம் முப்பது ரூபாயை எடுத்துக் கொடுத்து, "இன்றே மன்னியுடன் சென்று இருபது ரூபாயில் உனக்கு ஒரு புடவையும், குழந்தைக்கு ஒரு சட்டையும் வாங்கிக்கொள். பாக்கி பத்து ரூபாய் இருக்கிறதல்லவா? அதைச் செலவுக்கு வைத்துக்கொள். நாளைக்கே நீ ஊருக்குக் கிளம்பிவிடலாம், போ!" என்றான்.

அவள் போய்விட்டாள்.

வீட்டுக்காரர் வந்தார்; அவரிடம் இரண்டு மாத வாடகைக்கு நாற்பது ரூபாயை எடுத்துக் கொடுத்தான்.

மரகதத்தினிடம் இருபத்தைந்து ரூபாய் கொடுத்து, அதை உடனே அவள் சிநேகிதியிடம் கொடுத்துவிட்டு வரச் சொன்னான்.

மறக்காமல் மாடிக்கு ஓடோடியும் சென்று, சதாவதானத்தினிடம் ஐந்து ரூபாய் கொடுத்துவிட்டு வந்த பிறகு, ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

பால்காரனுக்குப் பன்னிரண்டு ரூபாய்; வண்ணாத்திக்கு ஏழு ரூபாய்; டாக்டருக்குப் பத்து ரூபாய் — தனித்தனியே எடுத்து வைத்தான்.

மொத்தம் 149 ரூபாய் ஆயிற்று!

பாக்கி ஒரே ஒரு ரூபாய் இருந்தது. கொஞ்சங்கூட யோசிக்காமல் அதை வீட்டுச் செலவுக்காகத் தன் மனைவியிடம் அப்படியே, அப்பொழுதே கொடுத்துவிட்டான்!

"ஒரு மாதச் செலவுக்கு இவ்வளவுதானா?" என்று அவள் திடுக்கிட்டுக் கேட்டாள்.

"வாழ்க்கைச் செலவை ஒரு ஒழுங்குக்குக் கொண்டுவர வேண்டுமென்றாயே, கொண்டு வா! மேற்கொண்டு கடன் வாங்குவதுதான் உன்னுடைய புத்திமதிப்படி ஒழுங்கீனமாச்சே!" என்றான் மாதவன் சிரித்துக் கொண்டே.

அவன் சிரித்ததும் குழந்தைகள் இரண்டும் கொஞ்சம் தைரியமடைந்து அவனை நெருங்கின.

"அப்பா! என்னை எப்போ அப்பா சர்க்கஸுக்குக் கூட்டிக்கொண்டு போவே?" என்று கேட்டாள் பானு.

"முதல் தேதி!"

"சாக்லேட்.......?"

"முதல் தேதிக்குத்தான்!"

"எனக்கு கோட்டுப் புத்தகம் எப்போ அப்பா வாங்கி வருவே?" என்று கேட்டான் முரளி.

"முதல் தேதி!"

"சைக்கிள்...?"

"முதல் தேதிக்குத்தான்!"

"இந்த முதல் தேதிக்கு ஒரு முடிவே கிடையாதோ?" என்றாள் மரகதம்.

"நம் வாழ்வு முடியும் வரை அதற்கு ஒரு முடிவே கிடையாது!" என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னான் மாதவன்.



No. 0009. 12 அங்குலம் முழு விட்டம் அளவுள்ளது. பளுவில்லாமல் உலோகத்தினால் செய்யப்பட்ட கேஸ். கருப்பு நிற எண்கள். மணி அடிக்காது. 18 நாளுக்கு ஒரு முறை சாவி கொடுக்கக் கூடியது.
ரூ. 300/-

ஜெனித்

சுவரொட்டி கடிகாரங்கள்



No. 0010. 10½ அங்குல முழு விட்டம் அளவுள்ளது. அரை மெருகு கொடுத்த வால்நட் கேஸ். பளபளப்பான உயரமாக பொருத்தப்பட்ட பித்தளை எண்கள் பொருத்தப்பட்டது. 18 நாளுக்கு ஒரு முறை சாவி கொடுக்கக் கூடியது. மணி அடிக்காது.
ரூ. 216/-

FAVRE - LEUBA

★ இரு கடிகாரங்களும் இரண்டு வருஷ உத்தரவாதமுள்ளவை

பேவர் - லூபா & கம்பெனி லிமிடெட் • பம்பாய் • கல்கத்தா

ஜெயஸ்ரீ



இப்பொழுதெல்லாம் ஜெயகுமாருக்குத் தூக்கமே வருவதில்லை. அதற்காக அவன் என்ன வெல்லாமோ செய்வான். மனதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அவளுடைய நினைவு இல்லாமல் தூங்கப் பார்ப்பான்; சில சமயம் அறையை விட்டு வெளியே வந்து ஆகாயத்தை உற்றுப் பார்ப்பான்; நக்ஷத்திரங்களை எண்ணிப் பார்ப்பான்; மீண்டும் உள்ளே சென்று படுத்துக் கண்களை அழுத்தி மூடிப் பார்ப்பான்; அப்பொழுதும் அவனுக்குத் தூக்கம் வருவதே கிடையாது.

அவளுடைய நினைவு வந்து அவனை வாட்டி வதக்கிவிடும். அந்த வேதனையைச் சகிக்க முடியாமல் கத்தியால் குத்திக் கொள்ள முயல்வான். அப்பொழுதெல்லாம் அவளுடைய கருணை பொழியும் சௌந்தரிய உருவம் வந்து அவனுக்கு எதிரே நின்று, "நான் சொன்னதை மறந்து விட்டீர்களா! நாம் பிரியும்போது உங்களை எவ்வளவு மன்றாடிக் கேட்டுக்கொண்டேன் — எனக்காக நீங்கள் தற்கொலை கிற்கொலை செய்து கொள்ள வேண்டாமென்று! உங்களை நம்பி அல்லவா ஏதோ என் வாழ்க்கையைச் சிறிது ஆறுதலுடன் நடத்திச் செல்லுகிறேன்? அப்படியிருக்க, நீங்களும் போய்விட்டால் எனக்கு ஆறுதல் அளிப்பவர் யார்?" என்று கண்களில் நீர் வழியக் கேட்டு ஏங்கி நிற்கும்.

உடனே ஜெயகுமார், "இல்லை நிர்மலா, இல்லை! நான் தற்கொலை செய்து கொள்ள வில்லை; எப்பொழுதும் உன் தேவ வாக்கை மீறப் போவதில்லை!" என்று சொல்லி விட்டுக் கத்தியைத் தூர எறிந்து விடுவான்.

ஆம், நிர்மலாவுக்குக் கலியாணமாகி நாலைந்து வருடங்கள் உருண்டு ஓடி விட்டன. எத்தனையோ மைல்களுக்கப்பாலிருந்த ஒரு பட்டினத்தில் அவள் தனக்குத் தாலி கட்டிய கணவனோடு சேர்ந்து வாழ்க்கைச் சக்கரத்தை உருட்டிக் கொண்டிருந்தாள். ஜெயகுமார் தன் வறண்ட வாழ்க்கையில் தனியாக முட்டிக் கொண்டும், மோதிக் கொண்டும், தலைகீழாக நின்று கொண்டும், உருண்டு புரண்டுகொண்டும் இருந்தான். எப்பொழுதாவது ஓரிரண்டு கடிதங்கள் அவளிடத்திலிருந்து வந்து அவனுக்குக் கொஞ்சம் ஆறுதல் அளிப்பது போல் அளித்து, ஏக்கத்தையும் துக்கத்தையும் கிளறி விட்டுவிட்டுப் போய்விடும்.

அன்றோ அவனால் தலையைக்கூடத் தூக்க முடியவில்லை; அவ்வளவு கடுமையான ஜுரம். என்னவெல்லாமோ பிதற்றியபடி இப்படியும் அப்படியும் நெளிந்து நெளிந்து படுத்தான். அந்தச் சமயத்தில் யாரோ தன் தலையை வருடுவதுபோலிருக்கவே, அவன் கண்களைத் திறந்து பார்த்தான். எதிரே நின்ற நிர்மலா தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள்.

"நிர்மலா! வந்துவிட்டாயா? சாகும் போதாவது நீ என் பக்கத்தில் இருக்க வேண்டுமென்று நான் விரும்பினேன்; என்னுடைய விருப்பம் நிறைவேறிவிட்டது."

"ஐயோ! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்! இனி நான் உங்கள் பக்கத்திலேயே இருந்து உங்களுக்குச் சேவை செய்வேன். கூடிய சீக்கிரமே உங்களை இந்த ஜுரத்திலிருந்து தப்புவிப்பேன்!" என்று சொல்லிக்கொண்டே அவன் தலையை மீண்டும் வருடினாள் நிர்மலா.

ஜெயகுமார் ஆச்சரியத்தால் கண்கள் விரிய, "இது நிஜந்தானா, நிர்மலா? இனிமேல் நீ என் பக்கத்திலா இருப்பாய்? உண்மையாகவா சொல்கிறாய்?" என்று கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டுக்



காண்டே அவனுடைய தளிர்க் கரங்களைப் ற்றினான்.

தன்னுடைய கைக்குள் ஒன்றும் பிடிபடா ற் போகவே அவன் ஏமாற்றத்துடன் சுற்று ற்றும் பார்த்தான். அந்தச் சமயத்தில், ஸார், தபால்!" என்று கூவிக்கொண்டே ந்து ஒரு கடிதத்தை உள்ளே போட்டு ட்டுப் போனான் தபால்காரன். கடிதத்தில் ர்மலா எப்படியாவது இம்முறை தன்னை ந்து பார்த்துவிட்டுப் போகும்படி மிகவும் ருக்கமாக வேண்டிக் கொண்டிருந்தாள்.

2

நிர்மலா தன் கைக்குழந்தையுடன் பங்களாவின் முன் வாசலில் நின்றுகொண்டு ஜெயகுமார் வரும் வழிமேல் விழி வைத்துக் கொண்டிருந்தாள். ஏதோ ஒரு இன்பகரமான உணர்ச்சி அவள் மேனி முழுவதும் 'குபீர், குபீர்' என்று பாய்ந்து கொண்டிருந்தது; ஏதோ ஒரு சொல்லொணு ஆவல் அவள் கண்களில் குழைந்து, குழைந்து மிதந்துகொண்டிருந்தது.

அதோ, அவனும் வந்துவிட்டான்! அவன் தூரத்தில் வரும்பொழுதே அவள் உள்ளம் விரிந்து மலர்ந்து நடனமாடத் தொடங்கி விட்டது. இன்னும் கொஞ்சம் முன்னே சென்றாள். அவன் நெருங்க, நெருங்க அந்தப் பாழும் வெட்கம் எங்கிருந்தோ 'குபுக்' கென்று வந்து அவள் முகமெல்லாம் பரவித் தலையைக் கீழே கவிழ்த்துவிட்டது. அதை ஒருவாறு சமாளித்துக் கொண்டு அவள் தலையை உயர்த்தினாள்; அடுத்த க்ஷணம் நான்கு கண்களும் மருண்டு உருண்டு சந்தித்தன; உடனே இருவரும் சிரித்து விட்டனர்.

ஆவலுடன் தன் கைகளை நீட்டிக் குழந்தையை வாங்கிக் கொண்டே, "இவளுக்கு என்ன பெயர்?" என்று கேட்டான் ஜெயகுமார்.

"ஜெயஸ்ரீ" என்று கனிவு ததும்பச் சொன்னாள் நிர்மலா.

"ஆண் குழந்தையாயிருந்திருந்தால் 'ஜெயகுமார்' என்று பெயர் வைத்திருப்பாய் போலிருக்கிறது!" என்று சொல்லிச் சிரித்தான் ஜெயகுமார். நிர்மலாவும் அவனுடைய சிரிப்பில் கலந்து கொண்டாள்.

உள்ளே சென்றதும் ஜெயகுமாரின் பார்வை அங்கே அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த மேஜைமீது சென்றது. ஒரு பக்கத்தில் ஜெயகுமாரால் எழுதப்பட்ட கவிதைப் புத்தகங்களும் கதைப் புத்தகங்களும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மற்றொரு பக்கத்தில் அவள் கணவரின் போட்டோவும், நிர்மலா சிறு பெண்ணாயிருந்த போது ஜெயகுமாரால் எடுக்கப்பட்ட போட்டோவும் அழகாக வைக்கப்பட்டிருந்தன. இவற்றைப் பார்த்ததும் ஜெயகுமார் ஆழ்ந்த யோசனையில் மூழ்கி விட்டான்.

"இன்றுகூட நீங்கள் வரமாட்டீர்கள் என்றுதான் நினைத்தேன்!" என்றாள் நிர்மலா.





பத்திரிகாசிரியரைப் பார்க்க வந்தவர் :— என்னுங்க! பச்சைக் கிளி, செம்மறி ஆடு, கன்றுக் குட்டி, ஆலமரம், — இந்தப் படமெல்லாம் உங்கள் பத்திரிகை மேலட்டையிலே போடுறீங்களே! என்னுடைய படத்தை ஒரு தடவை போடக் கூடாதுங்களா?

அவன் தன் மௌனத்தைக் கைவிட்டு, "அப்படி யொன்றும் எண்ணமில்லை ...!" என்று ஆரம்பித்தான்.

"ஏனென்றால் நான் எத்தனையோ முறை உங்களை வரச் சொல்லிக் கடிதம் எழுதியிருக்கிறேன். ஒரு முறையாவது வந்திருக்கிறீர்களா, நீங்கள்?"

"வரலாம் என்ற எண்ணம்தான் எனக்கு. ஆனால் ..." என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தவன், சட்டென்று எதையோ நினைத்துக் கொண்டவன் போல, "ஆமாம், சத்தியநாதன் எங்கே போயிருக்கிறார்?" என்று இப்படியும் அப்படியும் பார்த்துக் கொண்டே கேட்டான்.

"அவர் ஆபீஸுக்குப் போயிருக்கிறார்!" என்று சொல்லிக் கொண்டே, நிர்மலா எதிரே யிருந்த நிலைக் கண்ணாடியைப் பார்த்தாள்; அதே சமயத்தில் ஜெயகுமாரும் பார்த்ததினால் நான்கு உருவங்களும் பரஸ்பரம் பார்த்துச் சிரித்துக்கொண்டன.

"உங்களுக்கு எப்பொழுதாவது என்னுடைய நினைவு வருகிறதா?"

"உனக்கு?"

"எனக்கா! இதென்ன கேள்வி? உங்கள் நினைவு வராத நாளே கிடையாதே!—அது சரி; நீங்கள் ஏன் என்னுடைய கல்யாணத்துக்கு வரவில்லை?"

"வருவதற்குத்தான் இருந்தேன், நிர்மலா! ஆனால் என்னுள் இருந்த ஏதோ ஒன்று வரமுடியாமல் தடுத்துவிட்டது."

நிர்மலா ஏதோ யோசனையில் ஆழ்ந்தாள். இந்தச் சமயத்தில் வேலைக்காரி வந்து "அம்மா! இன்றைக்கு என்ன சமையல் பண்ணனும்?" என்று கேட்டாள்.

அவ்வளவுதான்; "சமையலா! ஒன்றும் பண்ணவேண்டாம்; இன்றைக்கு நானே நான் எல்லாம் பண்ணப்போகிறேன்!" என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே சமையற்கட்டுக்குள் ஓடிவிட்டாள் நிர்மலா. ஜெயகுமார் குளிக்கும் அறைக்குச் சென்றுவிட்டான்.

அவன் குளித்துவிட்டு வருவதற்கும் நிர்மலா சிற்றுண்டியுடன் வருவதற்கும் சரியா யிருந்தது.

"ஆமாம், எல்லாவற்றையும் நானே சாப்பிட வேண்டுமா? அதெல்லாம் முடியாது; நீயும் கொஞ்சம் பங்கு எடுத்துக் கொண்டால்தான் சாப்பிடுவேன்!"

"அந்தப் பழைய பிடிவாதம் உங்களை விட்டுப் போகுமா, என்ன?" என்று சொல்லிக்கொண்டே நிர்மலாவும் அவனுக்கு எதிரே உட்கார்ந்தாள்.

"நீ இப்பொழுது திருப்தியா யிருக்கிறாயா?" என்று கேட்டான் ஜெயகுமார்.

அவள் ஒன்றும் பதில் சொல்லவில்லை. எழுந்து போய் ஜன்னல் கம்பியைப் பிடித்துக்கொண்டு வெளியே பார்த்தாள்; எங்கும் ஒரே சூன்யமாயிருந்தது.

ஜெயகுமார் அவள் பின்னாலேயே சென்று, "என்ன நிர்மலா! நான் கேட்டது தவறு? அப்படியென்றால் இனிமேல் நான் ஒன்றும் கேட்கவில்லை" என்றான்.

நிர்மலா கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நாற்காலியின்மேல் உட்கார்ந்தாள். ஜெயகுமார் அவளுடைய மனதை மாற்ற எண்ணி, "என்னுடைய பெட்டியில் 'கேமரா' இருக்கிறது. அதைக் கொஞ்சம் எடுத்துக் கொடேன்!" என்றான்.

"ஏன்?"

"இந்தப் பட்டினத்தை ஒரு முறை சுற்றி வந்து சில காட்சிகளைப் படம் பிடிக்கலாம் என்று பார்க்கிறேன்."

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்!"

"இல்லை நிர்மலா, போனதும் வந்து விடுகிறேன்."

"அப்படியானால் ஒரேயடியாகச் சாப்பிட்டுவிட்டுப் போங்கள்!"

"இல்லை, இப்பொழுதே திரும்பி வந்து விடுகிறேன்."

"சரி, சீக்கிரமாக வந்துவிட வேண்டும், தெரியுமா? உங்களுக்காக நானும் சாப்பிடாமல் காத்துக் கொண்டிருப்பேன்" என்று

சொல்லி, 'கேமரா'வை எடுத்துக்கொண்டு வந்து ஜெயகுமாரிடம் கொடுத்தாள் நிர்மலா.

3

அந்தப் பட்டினத்துக் காட்சிகள் மனோ ரம்மியமாக விருந்தன. அவற்றைப் பார்த்துக்கொண்டே ஜெயகுமார் காலேந்து மைல் தூரம் போய்விட்டான். ஒரு மரத்தடியில் உட்கார்ந்து அதன் நிழலை அனுபவிக்க எண்ணிப் படுத்தான். அவ்வளவுதான்; களைப்பினாலோ அல்லது நிழலின் அருமையினாலோ தூக்கம் 'ஜம்'மென்று வந்துவிட்டது. அவன் மீண்டும் கண் விழித்தபோது பொழுது சாய்ந்துவிட்டது. அவசர அவசரமாக எழுந்து ஆடைகளைச் சரிப்படுத்திக் கொண்டு ஓட்டமும் நடையுமாக வந்தான்.

பங்களாவின் முன்னே 'ஸ்டுடிபேக்கர்' கார் கம்பீரமாக முன்னும் பின்னும் நீண்டு நின்றுகொண்டிருந்தது. அதிலே ஏற வந்த சத்தியநாதனும் அவனுடைய நண்பனும் ஜெயகுமாரைப் பார்த்ததும் அப்படியே நின்று விட்டனர். "ஹல்லோ! மிஸ்டர் ஜெயகுமார்! என்ன, கண்ணில் படுவதே தூர்லபமாயிருக்கிறதே! அதுவும் காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாமல் இப்படிச் சுற்றி வருகிறீர்களாமே! உங்களுக்குப் பசிக்கவே பசிக்காதோ? விநோதமான மனிதர் ஐயா, நீர்!" என்று சொல்லிக்கொண்டே ஜெயகுமாரின் கையைப் பிடித்துக் குலுக்கினான் சத்தியநாதன்.

"அப்படி யொன்றுமில்லை; உங்கள் ஊரைத்தான் சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறேன்!" என்று சிரித்துக்கொண்டே சொன்னான் ஜெயகுமார்.

"சரி, சரி; சீக்கிரம் போய்ச் சாப்பிட்டு விட்டு வாருங்கள்; ஏதாவது ஒரு சினிமாவுக்குப் போய்வருவோம்!—உம், சீக்கிரம் போங்கள்! நம்முடைய ஸ்ரீமதி அவர்கள் உங்கள்மீது ரொம்பவும் கோபமாயிருக்கிறார்கள்!" என்று துரிதப்படுத்தினான் சத்தியநாதன்.

அதற்குள் நிர்மலாவே அங்கு வந்து, "இவரை இப்பொழுது எங்கேயும் அழைத்துச் செல்லாதீர்கள்! காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாமல் எங்கேயோ தூங்கிக் கொண்டிருந்துவிட்டு இப்படி வந்திருக்கிறார்! ஒருவேளை களைப்பாகவும் இருக்கலாம்!" என்று சொல்லிவிட்டுக் கோபத்துடன் 'விர்' என்று உள்ளே போய்விட்டாள்.

"ஓ, கே!" என்று சொல்லிவிட்டு, சத்தியநாதன் தன்னுடைய நண்பனுடன் காரில் ஏறிக்கொண்டு போய்விட்டான்.

கொஞ்ச நேரம் வரை ஏதோ தனிமையில் யோசித்துக் கொண்டிருந்துவிட்டு, குற்றவாளிபோல் மெல்ல அடிமேல் அடி வைத்து உள்ளே சென்றான் ஜெயகுமார்.

"நீங்கள் எவ்வளவோ நாட்களுக்கப்புறம் வந்திருக்கிறீர்கள்! வந்ததும் பழைய மாதிரி என்னை ஆட்டி அலக்கழிக்கத் தொடங்கி விட்டீர்களே! என்றான் நீங்கள் என் வாழ்க்கையில் வந்து குறுக்கிட்டீர்களோ!" என்றாள் நிர்மலா.

ஜெயகுமார் பேசாமலிருந்தான்.

"சரி, வாருங்கள்!" என்று அழைத்துக் கொண்டுபோய் நிர்மலா அவனுக்குச் சாதம் பரிமாறினாள். இருவரும் சாப்பிட்டானதும் ஹாலுக்கு வந்தனர். நிர்மலா வீணையை எடுத்து வந்து வாசிக்கத் தொடங்கினாள். ஜெயகுமார் பேசும் தந்திகளை உற்றுப் பார்த்தான்; மேலும் விரல்களைக் கூர்ந்து பார்த்தான்; நாதத்தின் இனிமையைப் பருகி நெஞ்சு நெக்குருகினான்; கண்களை அகல விரித்து அவளுடைய அல்லி விழிகளையும், முல்லைச் சிரிப்பையும் பார்த்துப் பரவசமடைந்தான். கடைசியில் அவளுடைய நீக்



"பிரபு வந்திருந்தார்; இரண்டு லக்ஷம் கொடுத்தார். கோடீசுவரன் வந்திருந்தார்; மூன்று லக்ஷம் கொடுத்தார். ஒருமாதிரி தேவலை!"

"பரவாயில்லை; உங்களுக்குப் பிரபுக்களும் கோடீசுவரர்களுமாகவே கொடுத்துக்கொண்டிருக்கிறாப்போலிருக்கிறதே!"

"இல்லை, ஸார்! அவர்கள் இரண்டு பேரும் டாக்டர்கள். பெனிசிலின் இஞ்செக்ஷன் கொடுத்தார்கள்!"

காரத்வனியில் லயித்துக் கண்களை மூடிக் கொண்டு அப்படியே சோபாவின் மீது சாய்ந்து விட்டான். எங்கே போனானோ, எந்த உலகத்தில் சஞ்சரித்தானோ, என் னவோ! மறுபடியும் அவசர அவசரமாகக் கண்களைத் திறந்து இங்குமங்கும் சுற்றிச் சுற்றிப் பார்த்துவிட்டு, மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க, நாத் தழுதழுக்க, மெல்லிய குரலில், "நிர்மலா! கொஞ்சம் நிறுத்து!" என்றான்.

நிர்மலா பதறிப்போய் வீணையைக் கீழே வைத்துவிட்டு, "என்ன? என்ன?" என்று பதட்டத்துடன் கேட்டாள்.

"நீ என்ன பண்ணிக் கொண்டிருக் கிறாய்? பாட்டா பாடுகிறாய்?—ஆமாம், நீ பாட்டுத்தான் பாடுகிறாய்!" என்று அவன் தனக்குத்தானே கேள்வியைப் போட்டுக் கொண்டு, தனக்குத் தானே பதிலும் சொல் லிக் கொண்டான்.

நிர்மலா பீதியுடன் அவனைப் பார்த்தாள்.

அவன் மீண்டும், "நிர்மலா! நீ...நீ... நிர்மலாதானே! — ஆமாம், நான் இப் பொழுது எங்கே இருக்கிறேன் என்று உன்னால் சொல்லமுடியுமா? சொல்லா விட்டால் பரவாயில்லை; நீ யார் என்றாவது சொல்ல முடியுமா?" என்று கேட்டுக் கொண்டே விழிகள் பிதுங்க ஒரு மூலையை உற்றுப் பார்த்தான்.

அவனுடைய செய்கை அவளை நிலைகுலை யச் செய்துவிட்டது; உள்ளம் உறைந்து ஒடுங்கிவிட்டது. என்ன செய்வதென்று தெரியாமல் அவனைப் பிடித்துக் குலுக்கி, "என்ன உங்களுக்கு?" என்று கடுக்கத் துடன் கேட்டாள்.

அப்பொழுதுதான் அவன் எங்கேயோ இருந்து விடுபட்டு வந்தவன்போல, "எனக் கென்ன நிர்மலா! நீ ஏன் இப்படி நடுங்கிக் கொண்டிருக்கிறாய்?" என்று சாவதான மாகக் கேட்டான்.

அவளுக்கு என்ன சொல்வதென்றே விளங்கவில்லை. இருந்தாலும் நிலைமையை ஒருவாறு சமாளித்துக் கொண்டு, "ஒன்று மில்லை" என்று சொல்லி மழுப்பினாள். அவளுடைய அடிவயிற்றிலிருந்து வந்த பெருமூச்சு, "அடி, பைத்தியக்காரி! அவன் தன் வாழ்நாள் முழுவதும் இப்படித்தான் கவிந்து மெலிந்து சித்தப் பிரமையுடன் அலையப் போகிறான்!" என்று காதோடு காதாகச் சொல்லிவிட்டு மறைந்தது.

"என்ன, நிர்மலா! உனக்கென்ன பைத் தியமா பிடித்திருக்கிறது? போனவர்கள் ஏன் இன்னும் திரும்பி வரவில்லை?"

"அவர்கள் சினிமாவுக்குப் போயிரு கிறார்கள், வர இன்னும் நேரமாகும்."

"மணி என்ன இப்பொழுது?"

"பத்து அடிக்கப் போகிறது."

"பத்து அடிக்கப் போகிறதா! அடடே ரொம்ப நேரமாகிவிட்டதே! போய்த் தூங் வேண்டாமா?"

"ஆமாம், நீங்கள் நேரத்தோடு தூங் நேரத்தோடு எழுந்து, நேரத்தோடு சாப்பி டுத்தான் இவ்வளவு அழகாக உடம்பை வைத்திருக்கிறீர்களாக்கும்!"

"அதற்கு நான் என்ன செய்வேன் என் உள்ளம் ஒரு நிலையில் இல்லாம தவியாய்த் தவித்துக் கொண்டிருக்கிறதே எத்தனையோ நாட்களாக அதில் குடிகொ டிருந்த ஓர் உருவம் இப்போது எங்கே ஒதுக்கப்பட்டுவிட்டதே!" என்று ஜெ குமார் ஏக்கத்துடன் சொன்னான்.

"என்ன, உருவமா! உங்கள் உள்ளத் விருந்து ஒதுக்கப்பட்டுவிட்டதா!"

"ஆமாம்!"

"யார் அந்த உருவம்?"

"நீயேதான்!"

"நானா ஒதுக்கப்பட்டுவிட்டேன் இல்லையே! உங்களுக்குப் பக்கத்திலே தானே உட்கார்ந்துகொண் டிருக்கிறேன்?

"இதெல்லாம் வீண் பேச்சு, நிர்மலா!

"அப்படியானால் வேறு என்ன தா செய்யவேண்டும்?"

"என்னுடன் நீ ஓடி வந்துவிடவேண்டும்.

இதைக் கேட்டதும் நிர்மலாவின் த 'கிர்' என்று சுழல ஆரம்பித்துவிட்டது; அத பாதாளத்தில் தலை கீழாக விழுந்து கொ டிருப்பது போல் அவளுக்குத் தோன்றிற் மெல்லத் திரும்பி ஒரு முறை தொட்டிலி உறங்கிக் கொண்டிருந்த குழந்தையை பார்த்தாள்; மறுமுறை மேஜையின்மேல் பு சிரிப்போடு காட்சி யளித்துக் கொண்டிருந் தன் கணவனின் போட்டோவைப் பார் தாள்; கடைசியாக ஜெயகுமாரைப் பார்த் விட்டுத் தலையைக் கீழே கவிழ்த்து கொண்டாள்.

"என்ன நிர்மலா, சும்மா இருக்கிறாய்?

"நீங்கள் சொல்வதுபோல் செய்வ பாவமல்லவா?"

"அப்படியானால் புண்ணியந்தான் என் நிர்மலா? இதெல்லாம் வெறும் மனமயக்க இப்படிச் சொல்வதெல்லாம் உன்னுடை பலவீனத்தைத்தான் காட்டுகிறது. அப்ப அது பலவீனம் இல்லை யென்றால் நீ இ

வரை என்னைக் காதலித்ததாகச் சொல்லி வந்ததெல்லாம் பொய்; வஞ்சனை!"

"நீங்கள் நினைப்பதுபோல் நான் உங்களை வஞ்சிக்கவில்லை. கொஞ்சம் யோசித்து என் கடமையைக் கவனியுங்கள். உலகம் உங்களையும் என்னையும்......"

"ஹும்......உலகம்! நிர்மலா, உலகத்துக்குப் பயந்தவன் நானல்ல. இந்த உலகம் எப்பொழுதுதான் உண்மைக்குப் பாடுபட்டிருக்கிறது? அப்படிப் பாடுபடுவதாயிருந்தால் நம்முடைய காதலைச் சின்னபின்னமாக்கி என் நம்மை வாழ்நாள் முழுவதும் அது வேதனை அடையச் செய்கிறது? இதற்கு உங்கள் கடவுள், உங்கள் சமூகம், உங்கள் பாவம், உங்கள் புண்ணியம், உங்கள் கடமை ஒன்றும் சொல்லவில்லையா?"

அவன் வாயைத் திறக்கவில்லை. என்ன செய்வதென்று விளங்காமல், அவனை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று தெரியாமல், கண்களில் நீர் வழியத் தரையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளுடைய நிலை ஜெயகுமாரைத் தடுமாறச் செய்துவிட்டது. "நிர்மலா, கண்களில் என்ன, நீரா? என்ன, உன்னையா நான் அழச் செய்து விட்டேன்? ஐயோ! இவ்வளவு நாள் எந்த உருவம் மனம் கலங்காமல் இருக்க வேண்டுமென்று நான் விரும்பினேனோ, அந்த உருவத்தை மனங் கலங்கச் செய்துவிட்டேனே! — பாவி! ஒருவேளை ஏதாவது திட்டி இருப்பேனோ? — ஆமாம், ஏதாவது திட்டித்தான் இருப்பேன்! நிர்மலா! தயவு செய்து என்னை மன்னித்து விடு! நீ எங்கே இருந்தாலும் பரவாயில்லை; நீ சுகமாயிருந்தால் அதுவே எனக்குப் போதும். உன் சுகமேதான் என் காதல், வாழ்வு எல்லாம். நான் போய் வருகிறேன்! என் உயிர் இந்த உடம்பில் இருந்து, சந்தர்ப்பமும் வாய்க்குமானால் அவசியம் உன்னை வந்து மீண்டும் சந்திக்கிறேன்!" என்று கண்களில் நீர் தளும்பச் சொல்லிவிட்டு 'விர்' என்று வெளியே போய்விட்டான்.

நிர்மலாவுக்கு என்ன நடந்தது, நடக்கிறது என்றே தெரியவில்லை. அவள் தட்டுத் தடுமாறிக்கொண்டே வெளியே வந்து பார்த்தாள். அவனோ அவளைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் வேகமாக நடந்து சென்று இருளோடு இருளாய் மறைந்துவிட்டான்.

அன்று போனவன்தான்; அப்புறம் அந்தப் பக்கம் திரும்பவேயில்லை; செத்தானோ, பிழைத்தானோ என்பதுகூட ஒருவருக்கும் தெரியாது.



வயோதிகர்:—என் சொத்து இன்னாருக்குச் சேரவேண்டும் என்பதற்கு உயில் எழுதி வைக்க வேண்டும். அதை எப்படி எழுதலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

வக்கீல்:—நீங்கள் அதற்காகக் கவலைப்பட வேண்டாம்; அதை என்னிடம் விட்டு விடுங்கள்.

வயோதிகர்:—வாஸ்தவந்தான்; கொஞ்சம் கொஞ்சமாகப் பிற்காலத்தில் சொத்து முழுவதும் உங்களிடம்தானே வந்து சேரப் போகிறது!

★

"உங்கள் வீட்டில் இருக்கிற குடித்தனக்காரர் ஒரு சங்கீத வித்வானுமே! அவர் சங்கீதத்தைக் கேட்டுக் கேட்டுக் காது செவிடாகியிருக்குமே!"

"நான் ரொம்பவும் அதிர்ஷ்டசாலி, ஸார்! என் காது இன்னும் செவிடாகவில்லை!"

★

லக்ஷாதிபதி:—நீ எப்பொழுதும் ஏழைகளிடம் அன்பாயிருக்க வேண்டும்!

மகன்:—ஏன் அப்பா?

லக்ஷாதிபதி:—யார் கண்டது? அவர்களும் ஒருநாள் பணக்காரர்களாகலாம் அல்லவா?

★

பெரிய மனிதர்:—உம்மை இப்போது என்னால் பார்க்க முடியாது; போய்வாரும்!

வந்தவர்:—அதை நிவர்த்திக்கத்தான் நான் வந்திருக்கிறேன். நான் ஒரு மூக்குக் கண்ணாடிக் கடைக்கு ஏஜெண்டு!

★

பில் கலெக்டர்:—ஸார், எத்தனை தடவை உங்கள் வீட்டுக்கு வந்து நான் அலைகிறது? வரிப் பணத்தை எப்பொழுது கொடுக்கப் போகிறீர்கள்? நான் எப்பொழுது வந்தால் உங்களுக்குச் சரிப்படும்?

வீட்டுக்காரர் (எரிச்சலுடன்):—நான் வீட்டில் இல்லாதபோது வந்து பாரும்!

நமது இலங்கைக் கடிதம்

அருமையான யோசனைகள்

ரஜனி

கொழும்பு ஏப்ரல் 3—

இலங்கை ரப்பர்த் தோட்டங்களில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைச் சமாளிக்க இலங்கை இந்திய காங்கிரஸின் மாத்தளை ஜில்லாக் கமிட்டி அதன் வருடாந்தர மகாநாட்டில் இரண்டு அருமையான யோசனைகளைச் சொல்லியிருக்கிறது. அவற்றைச் சேனநாயகா மந்திரிசபை ஏற்றுக் கொள்ளுமானால் நாட்டின் பொருளாதார நிலை சீர்குலைந்து போகாமலிருக்கும்; அதே சமயம் பல்லாயிரக்கணக்கான இந்தியத் தொழிலாளர் திடீர் திடீரென்று வேலையிலிருந்து தள்ளப்பட்டுத் தவிக்கும்படி நேராது.

ரப்பர் உற்பத்தி நாடுகளான இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பர்மா, மலாயா, ஆகிய நாடுகளுக்கிடையே ஒற்றுமையும் கட்டுப்பாடுமில்லாதபடியால்தான் ரப்பரை இஷ்டப்பட்ட விலைக்கு அமெரிக்கா குறைத்துக் கேட்கிறது. ஒவ்வொரு தேச ரப்பருக்கும் ஒவ்வொரு மாதிரி விலை கொடுத்து மித்திரபேதமும் செய்கிறது. இந்த ஐந்து நாடுகளும் கூட்டாகச் சேர்ந்து ஒரு உடன்படிக்கை செய்து கொண்டு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் தேவைப்பட்டது போக, பாக்கி ரப்பரைக் கூட்டாக விற்பதென்று முடிவு செய்தால், அமெரிக்காவாகட்டும் அல்லது வேறு எந்த ஐரோப்பிய தேசமாகட்டும், குறைந்த விலைக்கு ரப்பரைக் கேட்டுக் கீழ்த்திசை நாடுகளை வஞ்சிக்க முடியாது.

கைத் தொழில் துறையில் முன்னேறி வரும் இந்தியாவுக்கு ரப்பர் முன்னைக் காட்டிலும் இப்பொழுது அதிகம் தேவையாயிருக்கும். ஐந்து நாடுகளின் கூட்டுப் பலமும் சேர்ந்தால் பிரம்மாண்டமான டயர், ட்யூப் தொழிற்சாலைகளைக் கீழ்த்திசையிலேயே ஸ்தாபிக்கலாம். மூலப் பொருளாகக் குறைந்த விலைக்கு ரப்பரை ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக டயர், ட்யூப்களாகவே ஏற்றுமதி செய்யலாம். இது புதிதாக மற்றும் பல ஆயிரம் தொழிலாளருக்கு ஜீவனோபாயமளிப்பதாயும் கீழ்த்திசையின் பொருளாதார நிலைமையைப் பலப்படுத்துவதாயுமிருக்கும்.

இதைத் தவிர இலங்கை இந்திய காங்கிரஸ் கமிட்டி இன்னொரு சிறந்த யோசனையையும் சொல்லியிருக்கிறது. ரப்பர் உற்பத்தியை ஆதரிப்பதில்லையென்று அரசாங்கம் தீர்மானிக்குமானால் வேலை இழக்கும் இந்தியத் தொழிலாளரைக் கொண்டு அதே தோட்டங்களில் அரசாங்கச் செலவில் கொக்கோவைப் பயிரிடலாம். உலக மார்க்கெட்டில் கொக்கோவுக்கு அதிக கிராக்கியிருப்பதால் அரசாங்கத்துக்கும் இது நல்ல லாபத்தைக் கொடுக்கும். இல்லாவிடில் தரிசு நிலங்களிலே இந்தத் தொழிலாளரைக் குடியேற்றி நெல் சாகுபடியையேனும் அதிகரிக்கலாம். தென்னிந்தியத் தொழிலாளர் விவசாயத்தில் கைதேர்ந்தவர்கள். அரிசிக்காகப் பிரதி வருஷமும் பல கோடி ரூபாய்களை வெளி நாடுகளுக்கு அனுப்பும் இலங்கை, மனம் வைக்குமானால் இலங்கையை முன்போல மறுபடியும் கீழ்த்திசையின் தானியக் களஞ்சியமாக்கிவிடலாம்.

அநீதியான கட்டுப்பாடு

கடைகளிலும் இதர வர்த்தக ஸ்தாபனங்களிலும் இந்தியச் சிப்பந்திகளை வேலைக்கு அமர்த்துவதைக் கட்டுப்படுத்தும் சட்டம் கூடிய சீக்கிரம் வரப்போகிறதென்பதை இலங்கை வர்த்தக மந்திரி ஸ்ரீ அமரசூரியா, சிங்கள வியாபாரிகள் சங்க வருடாந்திரக் கூட்டத்தில் மறைமுகமாக அறிவித்தார். ஒவ்வொரு தொழில் ஸ்தாபனத்திலும் குறைந்தபட்சம் 100-க்கு 75 பேர்களாவது இலங்கையர்களாயிருக்கவேண்டுமென்று சட்டமியற்றும் உத்தேசம் அரசாங்கத்துக்குப் பல மாதங்களாகவே இருந்துவருகிறது.

இதுமாதிரிச் சட்டம் இயற்றும்பொழுது பிரதம மந்திரி சேனநாயகா பண்டித நேருவுக்கு அளித்த ஒரு வாக்குறுதியை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அந்த வாக்குறுதி இந்தியர்களுக்குப் பிரஜா உரிமையளித்தாலும் அளிக்காவிட்டாலும் ஏற்கெனவே அவர்கள் செய்துவரும் வேலையில் மண்ணைப் போடுவதில்லை என்பதுதான்! நூற்றுக்கு எழுபத்தைந்து பேர் இலங்கையர்களாய் இருக்கவேண்டுமென்பதற்காக ஏற்கெனவே வேலையிலிருக்கும் ஏழை இந்தியரின் வயிற்றில் அடிப்பது அநீதியாகும்.

வெற்றி கொண்ட வீரர்!

அக்ஷயம்

தாண்டவராயனுக்குத் தூங்கு மூஞ்சித் தாண்டவராயன் என்ற பெயர் வந்ததற்கு அவனுடைய சோம்பேறித் தனம்தான் காரணம். அவன் ஒரு வேலையும் செய்வதில்லை. சாப்பிட வேண்டியது, தூங்க வேண்டியது — இவைதான் அவனுடைய வேலைகள். ஆகவே அவனுடைய அப்பா வைத்து விட்டுப்போன அத்தனை சொத்தும் கரைந்து விட்டது. கடைசியில் அரை வயிற்றுச் சோற்றுக்கு அன்னியன் கையை எதிர்பார்க்கும் நிலைமை ஏற்பட்டு விட்டது. ஆகவே, அவன் வேலையின் பொருட்டு ஊர் ஊராகச் சுற்றலானான்.

கடைசியில் ஒரு நாள் மங்களபுரி மன்னனான மானவன்மனின் தர்பாரை அடைந்து, "மகாராஜா, எனக்கு ஏதாவது ஒரு வேலை கொடுத்து ரட்சிக்க வேண்டும்" என்று அவன் வேண்டிக் கொண்டான்.

மன்னன் அவனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தான். அவனுக்கு 'இந்தச் சோம்பேறி எங்கே வேலை செய்யப் போகிறான்?' என்று தோன்றிற்று. இருந்தாலும் "உனக்கு என்ன வேலை தெரியும்?" என்று கேட்டான்.

"மற்ற எவராலும் செய்ய முடியாத காரியங்களை நான் ஒருவனாகவே செய்து விடுவேன்!" என்று ரொம்ப அலட்சியத்துடன் தூங்கு மூஞ்சித் தாண்டவராயன் சொன்னான்.

"அப்படியானால் நான் உன்னை வேலைக்கு எடுத்துக் கொள்கிறேன். தற்சமயம் உனக்கு ஒரு வேலையும் கிடையாது. ஆனால் தினந்தோறும் ஒரு தடவையாவது நம் தர்பாருக்கு வந்து போக வேண்டும்" என்று சொல்லி, மன்னன் அன்று முதலே அவனை வேலைக்கு அமர்த்திக் கொண்டான்.

திடீரென்று ஒரு நாள் எதிரி அரசன் ஒருவன் மானவன்மனின் நாட்டின் மீது படையெடுத்து வந்தான். அரசன் யுத்தத்துக்கான முஸ்தீபுகளைச் செய்வதற்காகத் தன் தர்பாரைக் கூட்டினான்.

"அரசே! இதற்காக நாம் இவ்வளவு முயற்சி எடுத்துக் கொள்வானேன்? நம் தர்பாரில் உள்ள தாண்டவராயன் ஒருவனே போதுமே, எதிரியைச் சமாளிப்பதற்கு? அவரை ஏவினால் போதாதா?" என்று பரிகாசமாகக் கேட்டான் ஒரு மந்திரி.

அரசன் தாண்டவராயனை அழைத்து யுத்தத்தைச் சமாளிக்குமாறு உத்தரவிட்டான். அந்த உத்தரவைக் கேட்ட தாண்டவராயனின் உடல் நடுங்க ஆரம்பித்து விட்டது. என்ன செய்வது என்று புரியவில்லை. இருந்தாலும் அதற்கான ஏற்பாட்டைச் செய்வதாகச் சொல்லிவிட்டு வீட்டை அடைந்தான். 'இந்த இக்கட்டிலிருந்து தப்பிப் பிழைத்தாக வேண்டுமே?' என்ற கவலை அவனை வாட்டத் தொடங்கியது. ஒரு நாள் யோசித்தான்; இரண்டு நாள் யோசித்தான்; மூன்று நாள் யோசித்தான். கடைசியில் அந்த நாட்டை விட்டே ஓடிவிடுவது என்ற முடிவுக்கு வந்தான்.

அன்று காலை ஆகாரம் செய்தபின் மிகுந்திருந்த மூன்று தோசைகளைக் கட்டி யெடுத்துக்கொண்டு, யாருக்கும் தெரியாமல் புறப்பட்டுவிட்டான்.

அவன் ஓடிவிட்ட செய்தியை அறிந்த அரசன், எதிரிகளை மடக்கிப் போர் புரிவதற்காகத் தன் சேனையை அனுப்பி வைத்தான்.

தாண்டவராயன் கால்நடையாகவே வெகு தூரம் வந்துவிட்டான். ஒரு கிணற்றங்கரையில் உட்கார்ந்து சாப்பிடுவதற்காகத் தோசை மூட்டையை அவிழ்த்தான். எத்தனை தோசைகளைச் சாப்பிடலாம் என்று

சிந்தனை எழுந்தது. "ஒன்றைச் சாப்பிடுவோமா, இரண்டைச் சாப்பிடுவோமா? அல்லது மூன்றையுமே சாப்பிட்டு விடுவோமா?" என்று அவன் மனம் விட்டுக் கூறிக் கொண்டான்.

அந்தக் கிணறே ஒரு பாழுங்கிணறு. அதற்குள் மூன்று தேவதைகள் குடியிருந்தன. அவ்வாறு அவன் சொல்லிக் கொண்டிருப்பதைக் கேட்ட அவற்றுக்கு உள்ளூறத் திகில் பற்றியது. 'அடே! நாம் உயிர் தப்ப முடியாது போலிருக்கிறதே!' என்று பயந்து போன அந்தத் தேவதைகள் மெல்லக் கிணற்றுக்கு வெளியே தலை தூக்கி, "சுவாமி, எங்களைச் சாப்பிட்டு விடாதீர்கள்! எங்களுக்கு உயிர்ப்பிச்சையளித்தால் உங்களுக்குக் கோடிப் புண்ணியமுண்டு. உங்கள் காரியத்தை நாங்கள் நிறைவேற்றி வைக்கிறோம்" என்று காலில் விழாத குறையாகக் கெஞ்சின.

தாண்டவராயனுக்கு முதலில் அவற்றைப் பார்த்ததும் தூக்கி வாரிப் போட்டது. பிறகு அவன் மெதுவாகத் துணிவை வரவழைத்துக் கொண்டு, "உங்களை இலேசில் விடமுடியாது. என்னை யார் என்று நினைத்தீர்கள்? ஒரு காரியம் செய்தால் போனால் போகிறதென்று விடுவேன். இல்லாவிட்டால் உங்களைச் சாப்பிட்டு விடுவேன்! யுத்தத்தைத் தன்னந் தனியாக நான் சமாளிக்க வேண்டும். அதற்கு உதவி செய்வீர்களா?" என்று கண்டிப்பாகக் கேட்டான்.

அதற்குச் சம்மதித்து அந்தத் தேவதைகள் அவனுக்கு ஒரு போர்வையும் ஒரு கத்தியும் கொடுத்தன. "இந்தப் போர்வையைப் போர்த்திக் கொண்டால், நீங்கள் எதிரிகளின் கண்ணில் படமாட்டீர்கள். இந்தக் கத்தி எதிரிகளின் கழுத்தைத் தானாகவே சீவிவிடும். உங்களுக்கு ஒரு வித ஆபத்தும் வராது. வெற்றி கிட்டும்!" என்று அவனுக்கு உபாயம் சொல்லிக் கொடுத்தன.


தாண்டவராயன் தான் கொண்டு வந்திருந்த தோசைகளைத் தின்றுவிட்டுத் தேவதைகள் கொடுத்த கத்தியையும் போர்வையையும் எடுத்துக் கொண்டு யுத்தகளத்துக்குப் போனான்.

இரு தரப்புச் சேனைகளுக்கும் பெரும் போர் நிகழ்ந்து கொண்டிருந்தது. தாண்டவராயன் போர்வையைப் போர்த்திக்கொண்டு, கையில் கத்தியுடன் எதிரிகளின் சேனைக்குள் நுழைந்தான். கத்தி தன் வேலையைக் காட்ட ஆரம்பித்தது. எதிரிகளின் தலைகள் தரையில் உருளத் தொடங்கின.

விஷயம் புரியாத எதிரிகள், "அணுகுண்டைவிட இது பிரமாதமான ஆயுதம்போலிருக்கிறது! நாம் இவர்களுடன் எதிர்த்துப் போராட முடியாது!" என்று எண்ணிப் பின் வாங்கி ஓட்டம் பிடித்தனர். தாண்டவராயன் கண்காணாத தூரம் வரை அவர்களை விரட்டியபின் அரண்மனைக்குத் திரும்பி வந்தான்.

தாண்டவராயனின் தீரச் செயலை நேரில் கண்ட அரசன் அக மகிழ்ந்து அவனை ஆலிங்கனம் செய்துகொண்டான். அன்று முதல் அவனுக்குச் சம்பளத்தை உயர்த்தியதோடு மட்டுமல்லாமல், சேனைத் தலைவனாகவும் ஆக்கிவிட்டான். தூங்கு மூஞ்சித் தாண்டவராயன் என்ற பெயர் போய், அவனுக்கு 'வெற்றி கொண்ட வீரர்!' என்ற பட்டம் கிடைத்தது.





வளரும் தமிழ்

சரபேந்திரர் வைத்திய முறைகள் (குன்மரோக சிகிச்சை)

வெள்ளைக்காரர்களும் மேல்நாட்டு வைத்தியமும் நம் நாட்டுக்கு வருவதற்கு முன் தமிழ் நாட்டில் சித்த வைத்தியமும் வட நாட்டில் ஆயுர்வேத வைத்தியமும் வெகு பிரபலமாக விளங்கி வந்தன. தீராத நோய்களையும் ஆறாத புண்களையும் நம் நாட்டு வைத்தியர்கள் வெகு திறமையாகக் குணப்படுத்தி வந்தார்கள். தேசம் அந்நிய நாட்டாருக்கு அடிமையானவுடன், நாம் மற்றத் துறைகளில் அந்நிய நாட்டாருக்கு அடிமையாகிவிட்டதைப் போல அந்நிய வைத்திய முறைக்கும் அடிமையாகி விட்டோம். இந்தியா சுதந்திரமடைந்த பிறகு, நம்முடைய சுதேச வைத்தியத்துக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது. இந்தச் சமயத்தில் தஞ்சை சரஸ்வதி மகால் புத்தக நிலையத்தார் சரபேந்திரர் வைத்திய முறைகள் (குன்மரோக சிகிச்சை) என்ற நூலை வெளியிட்டிருப்பது ஒரு சுப சூசகமாகும்.

தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னர் கல்வி கேள்விகளில் அபார சிரத்தை கொண்டவராக இருந்தது போல, வைத்திய சாஸ்திரத்திலும் பெரிய வல்லுநராக விளங்கி வந்திருக்கிறார். அவர் பல வைத்தியர்களை வரவழைத்து அவர்களுடைய அனுபவங்களையெல்லாம் ஒருங்கு திரட்டி, அவர்கள் எல்லோராலும் அநுபவ சித்தம் என்று ஒப்புக் கொள்ளப்பட்ட முறைகளைத் தமிழில் பாட்டாகத் தொகுக்கச் செய்து, பதினெட்டுச் சுவடிகளில் எழுதிவைத்துள்ளார்.

இப்படி வெகு சிரமத்துடனும் பணச் செலவுடனும் தொகுத்து எழுதப்பட்ட அபூர்வ வைத்திய நூல்கள் இதுவரை யாரும் கவனிப்பாரற்றுத் தஞ்சை சரஸ்வதி மகாலில் தூங்கிக் கொண்டிருந்தன. பதினெட்டுச் சுவடிகளில் ஒரு சுவடி இப்போது முதல் முதலாக அச்சாகும் பாக்கியத்தை அடைந்திருக்கிறது. இது குன்ம ரோகம்—அதாவது வயிறு சம்பந்தமான எல்லா நோய்களையும் குணப்படுத்துவதைப் பற்றியதாகும். பாக்கிப் பதினேழு சுவடிகளும் புத்தகங்களாக வெளிவந்துவிட்டால், அவை தமிழ் நாட்டுச் சித்த வைத்தியத்துக்கு அபூர்வ பொக்கிஷங்களாக விளங்கும். விலை ரூ. 4. விலாசம்: சரஸ்வதி மஹால், தஞ்சை.

ஆதாரக் கல்வி என்றால் என்ன?

கல்வி முறை விஷயமாக மகாத்மாஜி தமது அபிப்பிராயத்தைப் பல வருஷங்களாகக் கூறி வந்தார். பிறகு மிகுந்த ஆலோசனையின் பேரில் 'ஆதாரக் கல்வித் திட்டம்' என்று ஒரு திட்டத்தை வகுத்தார்.

'ஆதாரக் கல்வித் திட்டம் என்றால் என்ன?' என்று சாதாரணமாக யாரும் கேட்கக்கூடிய கேள்வியையே தலைப்பாகக் கொண்டு ஸ்ரீ மு. அருணாசலம் மேற்படி திட்டத்தை இந்தப் புத்தகத்தில் விளக்கியிருக்கிறார். பிள்ளைகளுக்குச் சுறுசுறுப்பாக ஒன்றைச் செய்வதில் ஆனந்தம் இருக்கிறது. ஆகவே, பிள்ளைகளைத் தொழிலில் ஈடுபடுத்தித் தொழில் செய்வதில் பிறக்கும் ஆனந்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு அறிவை வளர்ப்பதுதான் ஆதாரக் கல்வி முறை என்று அவர் கூறுகிறார். இன்னும் இது சம்பந்தமான பல விஷயங்களையும் மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார். பிரசுரம்: காந்தி ஆசிரமம், கீழ் நாக்கிலடி, சிதம்பரம். விலை: அணா 6.



ஒருவர்:— கண்டக்டர்! பஸ்ஸை நிறுத்தப்பா! யாரோ கீழே விழுந்துவிட்டாப்போல் இருக்கிறதே!

கண்டக்டர்:— பரவாயில்லை ஸார்! அவர் டிக்கட்டுக்குப் பணம் கொடுத்துவிட்டார்!

புவனாவின் கல்யாணம்

எஸ். ஆறுமுகம்

டைரியில் பிரித்து வைத்திருந்த திருமண அழைப்பைப் படித்து முடித்த சுந்தரேசனுக்கு ஆச்சர்யமும் அனுதாபமும் மாறி மாறி உண்டாயிற்று. விசுவநாதன் என்ற பெயருடன் ஒட்டியிருந்த பி. ஏ. என்ற இரண்டு எழுத்துக்கள் அவன் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தன. மணமகள் புவனா; அவளை மட்டுமே அவனுக்குத் தெரியும். அவர்கள் இருவரையும் ஜோடி சேர்க்க இருக்கும் விதியைப் பற்றிக் கொஞ்ச நேரமாகிலும் அவனால் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

பி. ஏ. படித்துவிட்டு, இருந்திருந்து இந்த ஊமைப் பெண்ணைத் தானா கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டும்? ஒருவேளை இத்தகைய சதிக்கு அவனுடைய வறுமை தான் காரணமாக இருக்குமோ? இதை நினைக்கவே சுந்தரேசனுக்கு மாப்பிள்ளையாக வரப்போகும் விசுவநாதன் பேரில் அளவுகடந்த இரக்கம் ஏற்பட்டது.

அவன் புவனாவை ஓரிரண்டு சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறான். விதிவசமாக ஊமை என்ற ஒரு குறையைத் தவிர மற்றப்படி அழகில் அவள் 'ஏ ஒன்!'

ஏதோ சொற்ப காலம் பரிச்சயம் ஏற்பட்ட தன்னை ஞாபகம் வைத்து அழைப்பு அனுப்பியுள்ள சுவாமிநாதய்யருக்காக வேண்டி அவர் பெண் கல்யாணத்திற்கு எப்படியும் போய்த்தான் ஆகவேண்டுமென்று முடிவு கட்டினான் சுந்தரேசன்.

“ஸார், இன்னொரு லெட்டர் உங்களுக்கு; முதலில் கொடுக்க மறந்துவிட்டேன்” என்று சொல்லிக்கொண்டே ஒரு கடிதத்தைக் கொடுத்துச் சென்றான் தபால்காரன்.

மதுரையில் நடக்கும் சுவாமிநாதய்யர் வீட்டுக் கல்யாணத்துக்கு அவசியம் போய்வர வேண்டுமென்று அம்மா எழுதியிருந்தாள். அந்தக் கடிதத்தைப் பார்த்த சுந்தரேசனுக்கு வியப்பு மேலிட்டது. அந்த வீட்டைப்பற்றி அம்மாவுக்கு எப்படித் தெரியும்? அவன் அவ்வளவு அக்கறையாகக் கல்யாணத்திற்குப் போகச் சொல்லும் காரணம் என்ன!

சுந்தரேசனுக்கு ஒன்றும் புரியவில்லை. சாதாரண விஷயங்களுக்கெல்லாம் மூளையைக் குழப்பிக்கொண்டு, காலத்தை விரயப் படுத்தக் கூடாதென்பது அவன் கருத்து. ஆகவே அவன் கல்யாணத்துக்குப் போவதென்று முடிவுசெய்தான்.

• • •

'போட்டோ ஆல்பத்'தில் காணப்பட்ட அந்தப் படத்தைச் சுந்தரேசன் எவ்வளவு நேரம்தான் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தானோ தெரியாது. நினைவின் சுழற்சியில் எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அவன் மனதில் அலைபாய்ந்தெழுந்தன.

“மீனா” என்ற இரண்டு எழுத்துக்கள் போட்டோவின் கீழ் இருந்தன. மீனா வேறு யாருமில்லை; புவனாவின் உடன் பிறந்த தங்கை. புவனாவின் முகூர்த்தப் பத்திரிகையைப் பார்த்ததிலிருந்து அவனுடைய இதய அந்தரங்கத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஆசை காட்டி நின்ற அந்த மீனாவின் எழில் பிம்பம் காட்சி யளித்தது. மீனாவின் நினைவு ரூபமே அவனைப் புவனாவைப் பற்றி அதிகம் நினைக்கத் தூண்டியது.

மதுரையிலிருந்து மாற்றலாகி அவன் தஞ்சாவூருக்கு வந்து ஒரு வருஷம் இருக்கலாம். அதற்குள் எத்தனையோ தடவை அந்த இரு சகோதரிகளைப் பற்றியும் அவன் நினைத்துப் பார்த்ததுண்டு. புவனா ஊமை என்ற விஷயம் மீனா சொல்லத்தான் சுந்தரேசனுக்குத் தெரியவந்தது. அது முதற்கொண்டு புவனா மீது அவனுக்கு ஒரு தனி அனுதாபம்.

முன் பாவாடை, தாவணி சகிதம் காட்சி யளித்து மனம் விட்டுப் பழகிப் பேசி வந்த மீனா இதற்குள் எப்படி எப்படி மாறிவிட்டிருப்பாளோ? என்று எண்ணினான்.

அப்போது அவன் மதுரை கலெக்டர் ஆபீஸில் 'கிளார்க்'காக வேலைக்கு வந்தான். வேலைக்குப் புதிதாகையால் அவனுக்கு ஆபீஸில் முதலில் பழக்கம் ஆனவர் சுவாமிநாதய்யர்தான். அத்துடன் அவர் தம் வீட்டின் முன்னிருந்த ஒரு அறையையும் அவனுக்கென்று ஒதுக்கிக் கொடுத்தார்.

ஒருநாள் “ஸார், 'காம்பவுண்ட் இண்டரெஸ்ட்' கணக்கு ஒன்று புரியவில்லை.



அப்பா உங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளச் சொன்னார்" என்று மீனு அறிமுகப்படுத்திக் கொண்டாள் முதன் முதலாக. அது முதல் பாடத்தில் சந்தேகங்கள் கேட்கும் வியாஜத்தில் மீனு அடிக்கடி சுந்தரேசன் அறைக்கு வரலானாள். சுந்தரேசனும் அவளுடன் சௌஜன்யமாகப் பழகிவந்தான்.

அன்று வீடு கலகலப்பாக இருந்தது. பிடில் நாதம் இங்கிதமாகக் காற்றில் இழைந்தது. என்ன விசேஷம் என்று சுந்தரேசனுக்கு விளங்கவில்லை. அப்பொழுது கையில் காப்பியுடன் மீனு உள்ளே நுழைந்தாள். அத்துடன் பக்ஷணங்களும் இருந்தன.

"ஸார், எடுத்துக் கொள்ளுங்கள். நாலைந்து மாதமாக அத்தை வீட்டில் இருந்த அக்காள் இன்று அம்மாஞ்சியுடன் ஊருக்கு வந்திருக்கிறாள். வேறொன்றுமில்லை."

பக்ஷணங்களைச் சுவைத்தவண்ணம், "உன் சொந்த அக்காளா, மீனு? எனக்குத் தெரியாதே!" என்றான் சுந்தரேசன். ஆனால் அப்படிச் சொன்ன பிற்பாடுதான் ஏன் அவ்விதம் கேட்டோமென்றிருந்தது அவனுக்கு.

சொல்லி வைத்தாற்போல அதே சமயம் கூஜாவில் தண்ணீர் பிடித்துச் சென்றாள் புவனா. ஒருமுறை அவளை அப்படியே விழுங்கி விடுபவன் போலப் பார்த்து நின்ற சுந்தரேசனைக் கண்டதும் மீனு என்ன நினைத்தாளோ?

"ஸார், அவள்தான் புவனா; என் அக்காள். ஆனால் பாவம்......"

"என்ன மீனு?" என்று கவலையுடன் கேட்டான் சுந்தரேசன்.

"இவ்வளவு அழகைக் கொடுத்திருக்கும் பகவான் அவள் வாக்கையும் போக்கடித்து விட்டான்..." என்று நிறுத்தினாள். அவள் குரல் கம்மியது.

சுந்தரேசன் அதற்குமேல் பேசவில்லை. புவனாவின் வருங்கால வாழ்க்கை அவன் உள்ளத்திலே அனுதாபத்தை உண்டுபண்ணியது.

அடுத்த நாள் எதிர்பாராதவிதமாகச் சுந்தரேசனைத் தஞ்சாவூருக்கு மாற்றி விட்டார்கள். சுவாமிநாதய்யரிடம் விடை பெற்றுச் செல்லுகையில் கண்கலங்க நின்ற மீனுவும் புவனாவும் அவன் கண்களை விட்டு அகலவில்லை.

• • •

சுபயோக சுப தினத்தில் புவனா மிஸஸ் விசுவநாதனாக மாறும் வைபவத்தைக் காண்பதற்காக ஆஜரானான் சுந்தரேசன். கல்யாண வீட்டில் மாப்பிள்ளைகளுக்கு நடப்பதைக் காட்டிலும் ஒரு படி மேலாகத் தனக்கு ராஜோபசாரம் நடப்பதைக் கண்டு ஆச்சர்யப்பட்டுப் போனான் சுந்தரேசன்.

புது மாப்பிள்ளை விசுவநாதன் ரொம்பவும் குஷாலாகச் சுந்தரேசனுடன் அரட்டையடித்துக் கொண்டிருந்தான். ஆனாலும் சுந்தரேசனுக்கு விசுவநாதன் ஒரு புதிராகவே தோற்றமளித்தான். தான் கை பிடித்த மனைவி ஊமை

என்பதறிந்தும் அதைப்பற்றி லவலேசமும் விசுவநாதன் குறைப்பட்டவனாகத் தெரியவில்லை. அல்லது தெரிந்து கொண்டுதான் 'அதுவே தன் தலையெழுத்து' என்று மனதைச் சமாதானம் செய்து கொண்டு விட்டானோ என்றெல்லாம் எண்ணினான்.

புவனா வாய் திறந்து பேச முடியாது. அதற்கு வட்டியும் முதலுமாக அவள் விழிகள் பேசுமே! குறுநகையை ஒளித்து வைக்கும் சிமிழ் உதடுகள் ஆயிரம் இன்பக் கதைகள் பேசுமே! சுந்தரேசன் இம்மாதிரி அந்தப் புது தம்பதிகளைப் பற்றி என்ன வெல்லாமோ நினைத்தான்.

அன்று, 'லீவ்' முடிந்து சுந்தரேசன் ஊருக்குப் புறப்படுவதற்காகப் பெட்டி படுக்கைகளைக் கட்டிக் கொண்டிருந்தான். அப்போது எதிர்த்த அறையில் பாட்டுச் சத்தம் தெளிவாகக் கேட்டது. மீனாவின் குரல் அல்ல என்பதை அனுமானித்த அவன் கூர்ந்து கவனித்தான். ஒரு கணம் அவனுக்குப் பூமியும் ஆகாயமும் ஒன்றாகச் சுழல்வது போலத் தோன்றியது. யார் பாடுவது? புவனா வல்லவா? அப்படியென்றால் அவள் ஊமை யில்லையா? மீனா முன்பு சொன்னது பொய்யா? அல்லது ஆலவாய்ப் பெருமான் இப்போதுதான் அவள் பெற்றோரது பிரார்த்தனைக்கு மனமிரங்கி அருள் சுரந்திருக்கிறாரோ?

மீண்டும் ஒருமுறை நோக்கினான். மீனா தன்னையே வெறித்துப் பார்த்துவிட்டு நகர்ந்து விட்டதையும் கண்டு கொண்டான். செப்பிடுவித்தை பார்ப்பது போலவே அவனுக்குப் பட்டது.

ஆச்சர்யத்தில் மூழ்கி உட்கார்ந்திருந்த சுந்தரேசனிடம் ஒரு வாண்டுப் பயல் ஓடிவந்து ஒரு கடிதத்தை நீட்டியதும் தான் அவனுக்குச் சுய உணர்வு வந்தது. அது மீனா எழுதிய கடிதம்:

அன்பரே,

முதலில் என்னை மன்னித்து விடுங்கள். எதிரும் புதிருமாக நின்று தங்களிடம் மன்னிப்பைப் பெறவேண்டிய நான் இப்படி கடிதம் மூலம் மன்னிப்புக் கோருவதைத் தவறாக எண்ண மாட்டீர்களே?

சிறிது நேரத்துக்கு முன்பு புவனா பாடியதைக் கேட்ட தங்கள் முகத்தில் ஏற்பட்ட கலவரத்தைக் கண்ட மாத்திரத்திலே அன்று நான் செய்த தவறை—சொன்ன பொய்யை உணர்ந்தேன். என்றோ விளையாட்டாகச் சொல்லப்போக அதை அப்படியே ஞாபகம் வைத்துக் கொள்வீர்களென்று நான் நினைக்கவேயில்லை. புவனா ஊமையல்ல. அன்று முதன் முதலில் அவளைக் கண்டபோது நீங்கள் பார்த்த பார்வையைக் கொண்டு எங்கே அக்காள் மீது காதல் கீதல் கொண்டுவிடுவீர்களோ என்று சந்தேகப்பட ஆரம்பித்தது என் மனம். அவள் நினைவில் அப்புறம் உங்கள் மனம் வீணாக அலைபாய நேரிடுமே என்ற அச்சம்! ஏன் தெரியுமா? அக்காள் எங்கள் அம்மாஞ்சிக்காகவே 'ரிசர்வ்' செய்யப்பட்டிருந்தாள். அதற்காகவே, அதுவும் உங்கள் சொந்த நலனை உத்தேசித்து அவ்விதம் ஒரு பொய்யைக் கற்பித்துக் கூற நேர்ந்தது. அவள் ஊமை என்று நான் சொன்னதற்குச் சரியாக அன்று அவளுக்கு அசாத்தியமான பல்வலி. வாயைத் திறக்கவே முடியவில்லை. என்னைப் பிடித்த நல்லகாலம், அடுத்த நாளே உங்களை மாற்றி விட்டார்கள். மறுதினம் நீங்கள் வீட்டில் இருந்திருந்தால் என் 'குட்டு' வெளிப்பட்டிருக்குமோ, என்னவோ?

கொடியும் குடையும்



விளையாட்டாகச் செய்த குற்றம்: நியாயத்தை நிர்ணயித்து என்னை மன்னிப்பது உங்கள் பொறுப்பு.

மறந்துவிட்டேன். எங்கள் அம்மாஞ்சி யார் தெரியுமா? அவர்தான் இந்த விசுவநாதன்.

இப்படிக்கு,

மீனா

மீனாவின் குறும்புத்தனத்தைக் கண்ட அவனுக்குச் சிரிப்பதைத் தவிர வேறு ஒன்றும் தோன்றவில்லை. ஆனால் அந்த க்ஷணம் மீனா ஒரு புதிர்போலக் காட்சியளித்தாள் சுந்தரேசனுக்கு. விதியின் ஆட்டங்களிலே மோகினி போலப் பல்வேறு உருவங்களில் தோன்றி மறையும் மீனாவை அவன் எப்படி மறப்பான்?

பயணத்துக்குத் தயாராகிக் கொண்டிருந்த சுந்தரேசனைக் கண்டு சுவாமிநாதய்யர் திகைப்படைந்தார்.

“மிஸ்டர் சுந்தரேசன், என்ன அதற்குள் ஊருக்குப் புறப்பட்டு விட்டீர்கள்? மீனா சொன்னாள்; ஓடோடி வந்தேன். முதலில் இன்றைக்கே இன்னும் ஒரு வார லீவுக்கு எழுதிப் போடுங்கள்.

“உங்களிடம் என்றைக்கோ சொல்லியிருக்க வேண்டிய விஷயம், இன்றுதான் நேரில் கூறச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அந்த நாளில்—அதாவது வாலிப வயதில்—எனக்கும் உங்கள் அம்மா சரசுவுக்கும் கல்யாணம் செய்து வைப்பது என்று நிச்சயித்திருந்தார்கள் எங்கள் பெற்றோர்கள். ஆனால் விதி எங்கள் வாழ்க்கைக்குக் குறுக்கிட்டது. திடீரென்று நல்ல பூஸ்திதியுடன் இருந்த என் தந்தைக்குப் பலவிதங்களில் நஷ்டமேற்பட்டது. உலகத்தில் பணம்தானே ஜீவநாடி? ஆகவே எங்கள் எண்ணம் கைகூடாமற் போய்விட்டது.

“உத்தியோகத்துக்கென்று வந்த உங்களைப் பற்றி விசாரித்தறிந்த நான் அப்போதே ஓர் இன்பக் கனவு கண்டேன். அதற்கு அனுசரணையாகவே மீனா உங்கள்மீது அந்யந்த அன்பு கொண்டிருக்கிறாள். எப்படியும் மீனாவை உங்கள் வசம் ஒப்புவித்து மனநிம்மதியடைய எண்ணி உங்கள் தாயாரிடம் சொன்னேன். அவளும் சம்மதித்து விட்டாள்......உங்கள் இருவர் ஜாதகங்களும் இம்மி குறையாமல் பொருந்தியிருக்கின்றன. மனம்போலத்தானே மாங்கல்யம்? என்னைக் கொண்டே உங்கள் அபிப்பிராயத்தைக் கேட்கச் சொல்லி விட்டாள் உங்கள் அம்மா. அன்று பூர்த்தி பெறாதிருந்த எங்கள் மனோரதம் உங்கள் விஷயத்திலாவது நிறைவேறவேணும்...சம்மதம் தெரிவியுங்கள். வருகிற வியாழன் ரொம்பவும் பேஷான நாள். அன்றைக்கே நிச்சயதார்த்தம் செய்து விடலாம்” என்றார் சுவாமிநாதய்யர்.

அவர் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஏதோ கனவில் நிகழ்வது போலவே தோன்றியது சுந்தரேசனுக்கு. அன்று மதுரைக் கல்யாணத்துக்கு அவசியம் போய் வரவேண்டுமென்று அம்மாவிடமிருந்து வந்திருந்த கடிதத்தின் தாத்பர்யமும் அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது. இவ்வளவு எளிதில்—இவ்வளவு சீக்கிரமாக மீனா தன்னுடையவளாக ஆகிவிடுவாள் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை.

அவன் அகக்கண் முன் மீனாவுடன் தான் நடத்தப்போகும் இன்ப வாழ்க்கையின் காட்சிகள் எழுந்தன. அந்த நினைவில் அவன் இலேசாகச் சிரித்தது, கல்யாணத்துக்குத் தன்னுடைய பூரண சம்மதத்தைத் தெரிவிப்பது போலிருந்தது.

வட்ட மேஜை

★ பொறுப்பை உணருங்கள்!

யுத்தத்துக்குப் பின் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை பிரிட்டிஷ் மக்கள் எவ்வகையில் வெற்றிகரமாகச் சமாளித்தனர் என்பதை விளக்கமாக 3-4-49 'கல்கி' தலையங்கத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள். நம் மக்கள் தற்சமயம் அறிந்துகொள்ள வேண்டிய முக்கிய படிப்பினைகளில் அது ஒன்றாகும். பொறுப்பை உணர்ந்து நடந்த பிரிட்டிஷ் மக்களின் அற்புத சாதனையையும், இந்திய மக்கள் பொறுப்பை உணராது இருப்பதனால் நாட்டில் நீடித்துவரும் பொருளாதார நெருக்கடியையும் படம் பிடித்துக் காட்டுவதுபோல் தங்கள் தலைமைக் கட்டுரையில் சித்தரித்திருப்பது உண்மையில் இந்திய மக்களின் தன்மான உணர்ச்சியைத் தூண்டிவிடக் கூடியதே.

பிரிட்டிஷ் மக்கள் வெற்றி பெற்றதற்கான காரணங்களைப் படிப்போர் மனதில் நன்கு பதியும் வகையில் அக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மற்றொரு முக்கியமான காரணமொன்றையும் குறிப்பிட்டிருக்க வேண்டுமென்று கருதுகிறேன். மற்ற நாடுகளைப்போல் அவ்வளவாகக் கள்ள மார்க்கெட் வேலைகள் பிரிட்டனில் இல்லாதிருந்ததால் தான் அங்கு பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படாமல் தடுக்க முடிந்தது. இந்த முக்கிய அம்சமும் நம் மக்களுக்கு அறிவுறுத்தப்பட வேண்டியது அவசியம். கள்ளமார்க்கெட் போன்ற கொடிய வழக்கங்கள் காரணமாக நம் நாடு இன்னும் பொருளாதார சுபிட்சம் அடையாமல் இருந்து வரும் தற்சமயம் பிரிட்டிஷ் மக்களின் இந்த உதாரணத்தை நாம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். பொறுப்பையும், கடமையையும் உணராதவரை சுதந்திரம் கிடைத்தும் பயனில்லை என்பதையே நமக்கு உணர்த்துகிறது. நெருக்கடியைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு நாட்டை வேட்டைக் காடாகப் பாவிக்கும் மனப்பான்மை நம் மக்களிடமிருந்து அறவே ஒழிந்தாலன்றி பொருளாதார சுதந்திரம் ஏற்படாது என்பதையும் பிரிட்டனின் உதாரணம் நமக்கு அறிவுறுத்துகிறது. இன்று நம் நாட்டில் உணவு—துணி பற்றாக்குறை இருப்பதற்கு உற்பத்திக் குறைவு பிரதான காரணமாக இருந்தபோதிலும், கள்ள மார்க்கெட் போன்ற சமூகத் துரோக பழக்கங்களும் பொறுப்பாகும். இன்றைய நெருக்கடிக்கு வர்த்தக சமூகத்தினரும் ஓரளவு பொறுப்பாளிகள் ஆவார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. எல்லோரும் வியாபாரிகளாக முடியாது. எப்படி ஆட்சிமுறை நடைபெற மக்கள் மந்திரிகளை நம்பிக்கொண்டிருக்கின்றனரோ, அம்மாதிரியே வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களைப் பெறுவதில் வியாபாரிகளிடம் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். இந்த நம்பிக்கைக்குக் களங்கமேற்படுத்தாது, வர்த்தக சமூகத்தினர் நடந்துகொள்ள பிரிட்டிஷ் மக்களின் உதாரணத்தைப் படிப்பினையாகக் கொள்ளவேண்டும்.

காஞ்சீபுரம்
4—4—49 ச. கி. வரதராஜன்

சட்ட சபையும் பிரதமர் தேர்தலும்

சட்டசபை அங்கத்தினர்கள் நிர்வாகத் திறமையும், நேர்மையும், ஒருவரிடம் இருக்கிறது என்று கண்டுகொண்டு தானே அவரைப் பிரதமராக நியமிக்கிறார்கள். பிறகு அவர் பதவிக்கு லாயக்கு இல்லை என்று தீர்மானம் செய்து அவரை நீக்க முற்படுகிறார்கள். நிர்வாகத் திறமை உள்ளவராக இருந்தவர் திடீரென்று நிர்வாகத் திறமையற்றவராக எப்படி மாறினார்? அப்படி நிர்வாகத்திறமையற்றவரைப் பிரதமராகத் தேர்ந்தெடுத்தது யாருடைய குற்றம்? தவிரவும், ஒருவர் பிரதமர் பதவிக்கு லாயக்குள்ளவரா, அவரிடம் நிர்வாகத் திறமை இருக்கிறதா என்று கண்டறிய முடியாத அங்கத்தினர்கள் மாகாண சட்டசபைத் தொகுதியிலேயே இடம்பெற லாயக்கற்றவர்கள் ஆகிறார்கள்.

வருஷத்திற்கு ஒரு தடவை மந்திரிசபை மாறுவதும், பிரதமர் பதவி மாறுவதும் விரும்பத்தக்கது அல்ல. மாகாண ஆக்க வேலைகளுக்குக் குந்தகமும், நிர்வாக ஊழலுக்கு இடமுமே ஏற்படும். ஒரு மந்திரி சபை, ஒருவருடைய தலைமையில் குறைந்த பட்சம் மூன்று வருஷமாவது மாறுதலின்றி நடக்க வேண்டும். அப்பொழுதுதான் மந்திரிசபை நன்றாக வேலை செய்கிறதா, திறமையுடன் இலாகாக்கள் கையாளப்படுகிறதா என்பதைத் தீர்மானிக்க முடியும். அது வரையில் ஒன்றும் திறமையைக் காணாவிடின் அந்த மந்திரி சபையை மாற்றுவதில் நியாயமும் இருக்கும்; பொது மக்களின் ஆதரவும் இருக்கும்.

வருஷந்தோறும் மந்திரி சபையை மாற்றுவதும், பிரதம மந்திரி தேர்தல் நடத்துவதையும் விடுத்து மூன்று வருஷத்திற்கு ஒருமுறை அல்லது ஐந்து வருஷத்திற்கு ஒருமுறை என்று ஏற்படுத்தினால் பொது ஜனங்களுக்கு நன்மையுண்டு. அரசாங்கக் காரியங்களும் துரிதமாக இயங்க ஏதுவாகும். சென்னைச் சட்டசபை அங்கத்தினர்களும் தங்களுடைய மனம்போன போக்கை மந்திரி சபை மாற்றத்தில் காட்டாது சென்னை மாகாணத்தின் கௌரவத்தைக் காப்பார்களாக.

தேனாம்பேட்டை
3—4—49 ஸ்ரீ. நாகராஜன்

○●○

பயனுள்ள செலவு

தங்கள் 13-3-49 'கல்கி' இதழில் ''மூன்று வருஷத்தில் நாலு விஷயங்கள்'' என்னும் தலைப்பின் கீழ் வெளியான அற்புதமான நான்கு அடிப்படைத் திட்டங்களையும் படித்தபோது எனக்கு உண்டான உவகைக்கு அளவேயில்லை. நான்கு திட்டங்களும் நாட்டின் நலனுக்கு உகந்த நிலையில் அமைந்திருக்கின்றன.

நம்நாடு ''அம்பாஸடர்''களுக்கு வீண் செலவு செய்கிறது என்று எண்ணியிருந்த எனக்குத் தாங்கள் புள்ளி விவரங்களோடு எழுதியவைகள் நான் நினைத்தவை தவறு என்பதை வற்புறுத்தின.



வந்த அதிதி:—இந்த ரேஷன் காலத்தில் நாங்கள் திடீரென்று இவ்வளவு பேர் விருந்தாளியாக வருவது உங்களுக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கும்.

வீட்டுக்கார அம்மாள்:— அதெல்லாம் ஒன்றுமில்லை. நாங்கள் இப்போது ஊருக்குக் கிளம்பிக் கொண்டிருப்பதுதான் உங்களுக்கு ஒரு வேளை கஷ்டமாயிருக்கலாம்.

நம் நாட்டு இராணுவச் செலவையும், அயல் நாட்டு இராணுவச் செலவையும் எடுத்துக் காட்டியிருந்தீர்கள். இது ஒன்றே நம் நாட்டுத் தலைவர்கள், மக்களது பொருளை எவ்விதம் பயன்படுத்துகின்றனர் என்பதை மிகத் தெளிவாகக் காட்டுகிறது.

அயல் நாட்டு மக்கள், உணவு நெருக்கடியான காலத்தில், உணவை எவ்விதம் பெருக்கிப் பஞ்சத்தை நீக்கினார்கள் என்று கூறும் பொழுது நம்நாட்டு மக்கள் ஏன் அவ்விதம் செய்யக்கூடாது என்று ஒவ்வொருவர் உள்ளத்திலும் தோன்றும். சுருங்கக்கூறின் மேற்படி தலையங்கம் மக்களிடையே நாட்டுப் பற்றை உண்டாக்கி நல்வாழ்வு வாழச்செய்யும் என்பதில் ஐயமில்லை.

சிவகங்கை
19—3—49 ரா. நவமணி

○●○

★ 'ஸ்டேஜு'கள் தொல்லை!

கவர்ன்மெண்டு பஸ்ஸில் ஏறி, ஆபீஸ் செல்லும் ஏழைக் குமாஸ்தாக்களின் துயரத்தைத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

தியாகராஜ நகரிலிருந்து பஸ்கள் பாரிஸ் கார்னர் போய்ச் சேருவதற்குள் 5 அல்லது 6 ஸ்டேஜுகள் கடக்கவேண்டும். ஒவ்வொரு ஸ்டேஜிலும் 3 நிமிஷங்களுக்குக் குறையாமல் பஸ்ஸைக் கண்டக்டர்கள் நிறுத்திவிடுகிறார்கள். அவர்கள் நிறுத்துவதற்காகச் சொல்லும் காரணம் இதுதான்:—

டிரான்ஸ்போர்ட்டு இலாக்கா, ஒவ்வொரு ஸ்டேஜிலும் கண்டக்டர்களுக்காகக் கொடுத்திருக்கும் அட்டவணையில், அந்தந்த ஸ்டேஜுகளுக்குள் விற்ற டிக்கட்டுகளின் நம்பரை எழுதிய பிறகுதான் புறப்பட வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறதாம்.

இந்த உத்தரவு அனாவசியம் என்று பெரும்பாலோர் கருதுகின்றனர். கண்டக்டர்கள் சரிவர டிக்கெட்டு கொடுக்கிறார்களா, இல்லையா என்பதைக் கவனிக்க இன்ஸ்பெக்டர்கள் இருக்கவே இருக்கிறார்கள்.

பிரைவேட் கம்பெனிகள் பஸ்களை நடத்திய போது, இந்த மாதிரியான 'ஸ்டேஜ்களும்' பஸ்களை நிறுத்திப் பிரயாணிகளுக்குத் தொந்தரவு கொடுத்ததும் இல்லை. சரியான நேரத்தில் ஆபீஸ் போய்ச் சேர்ந்தோம்.

சீக்கிரமாகப் போவதற்கும், பொது ஜனங்களுக்குச் சௌகரியம் செய்து கொடுப்பதற்காகவும் பஸ்கள் சர்க்கார் நிர்வாகத்தின் கீழ் வந்தன. ஆனால் [illegible], தாமதமும், அதிகக் கட்டணமும் இரண்டும் சேர்ந்து பொது ஜனங்களுக்குத் துன்பத்தையே கொடுக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

பஸ்களை, ஆபீஸ் நேரத்திலாவது ஒவ்வொரு ஸ்டேஜிலும், அதிக நேரம் நிறுத்தாமல் போய்க் கொண்டிருக்கும்படி செய்தால், ஏழைக் குமாஸ்தாக்கள் கவர்ன்மெண்டாருக்கு நன்றி செலுத்துவதுடன் சரியான நேரத்திற்கு ஆபீஸும் போய்ச் சேருவார்கள்.

மாம்பலம்
5—4—49 பி. வி. கணேசன்

○●○

மாணவர்களும் பரீட்சைகளும்

நான் இவ்வருடம் இண்டர்மீடியட் பரீட்சை எழுதும் மாணவன். இண்டர்மீடியட் கேள்வித்தாள்கள் "அவுட்"டாகி விட்டதால் எங்கள் பரீட்சைகளைத் தேதி குறிப்பிடாமல் தள்ளி வைத்து விட்டார்கள்.

ஏற்கனவே ஆங்கிலப் பரீட்சைகள் நடந்து விட்டன. ஆங்கிலப் பரீட்சைக்காக இரவும் பகலும் விழித்துப் படித்துச் சிரமப்பட்டு எழுதியும் கிடைத்த பலன் மறு பரீட்சை!

கல்லூரிப் படிப்புக்கு மிகவும் பணச்செலவு ஆகிறது. ஹாஸ்டலில் இருக்கும் மாணவர்கள் இன்னும் சுமார் ஒரு மாதம் தங்கிப் படிக்க நேரிடும்போலிருக்கிறது. அந்த ஒரு மாதத்திற்கும் பெற்றோர்கள் பணம் அனுப்பியாக வேண்டும்.

யாரோ ஒரு சில "சமூக விரோதிகள்" கேள்வித்தாள்களை வெளியாக்கி விடுவதால் ஒன்றுமறியாத ஆயிரக் கணக்கான மாணவர்கள் கஷ்டப்படவேண்டியிருக்கிறது.

"பரீட்சை சனியன்கள்" ஒழியவேண்டும் என்ற கொள்கை பரவிவரும் இக்காலத்தில் கேள்வித் தாள்களை "அவுட்" பண்ணிப் பரீட்சை சிரமங்களை மேலும் மேலும் அதிகப்படுத்துவது அறிவுடைமை யாகாது.

விருதுநகர்
29—3—49 வி. பி. எஸ். பாண்டியன்

○●○

நிதி மந்திரி கவனிப்பாரா!

புதிய பட்ஜெட்டில் துண்டு விழும் தொகைக்கு அன்றாடத் தேவையான உணவுப் பொருள்களுக்கும் விவசாய விளை பொருள்களுக்கும் விற்பனை வரி விதித்திருக்கிறார்கள். ஆனால் நம்நாட்டில் சிலகாலமாகத் 'தில்லுமுல்லு' செய்துவரும் ஒரு கூட்டம் இருக்-

கிறது. அவர்கள் பத்திரம் எழுதும் டாகுமெண்ட் ரைட்டர்கள். உயர்வான நிலைமையில், பக்ஷபாதமின்றிக் கொடுப்பவருக்கும் வாங்குபவருக்கும் பொதுவாக இருந்து முடித்துக் கொடுக்க வேண்டியவர்கள். நாங்கள் கேட்கும் தொகை கொடுக்காவிட்டால், கேவலமாகச் சிலர் நடந்து கொள்கிறார்கள். அரசாங்கத்திற்குக் கிடைக்கவேண்டிய ஸ்டாம்பு கட்டணத்தைக்கூடக் குறைத்து ஒன்றுக்குப் பாதியாக மறைத்து எழுதுகிறார்கள். இவர்களில் சிலர் அனாதையான விதவைகளையும் பாமர மக்களையும் சதா ஏமாற்றிக் கோர்ட்டு வழக்குகளுக்குக் கொண்டு போகிறார்கள். எந்தக் கிராமத்தை எடுத்தாலும் இந்தப் பேர்வழிகள் இல்லாமல் இருக்கமாட்டார்கள். இவர்களின் அநீதிக்குச் சில சோம்பேறிகள் வேறு தரகராகவும் சாட்சிகளாகவும் கூடவே சுற்றி வருவார்கள்.

இந்த வர்க்கத்தாருக்கு வரும் லைசென்ஸ் தொகை இவ்வளவு என்று விதித்தால், அரசாங்கத்தின் வருமானமும்பெருகும், கோர்ட்டு வழக்குகளும் குறையும். ஏழைகளின் இம்சை நீங்கும். ஸ்டாம்புக் கட்டணம் ரிஜிஸ்டிரேஷன் கட்டணம் முதலிய கட்டணங்கள் ஒழுங்கான முறையில் நம் அரசாங்கத்திற்குக் கிடைக்கும். சட்டத்திற்கு விரோதமாக நடப்பவர்களின் லைசென்ஸ் பறி முதலாக வழி ஏற்படும்.

தென்காசி
12—3—49 எஸ். ராமசாமி

○●○

வாழைப் பழத்துக்குக் 'கௌரவம்!'

சில மாதங்களுக்கு முன் "கல்கி"யில் பழங்களில் சிறந்தது மாம்பழம் என்று ஒரு கட்டுரையில் வெளியானதை மறுத்து வாழைப்பழம்தான் சிறந்தது என்பதை விளக்கி 'வட்ட மேஜை'யில் ஒரு கடிதம் வெளி வந்தது. அக்கடிதம் பரிசும் பெற்றது. நான் அதை வெகுவாக ஆமோதித்துச் சந்தோஷப் பட்டேன். "கல்கி" வாசகர்கள் அனைவரும் அவ்விதமே சந்தோஷப்பட்டிருப்பார்கள். இந்த விஷயம் நம் சென்னை மாகாண நிதி மந்திரி அவர்களின் காதுக்கு எட்டிவிட்டது போலும்! உடனே அவர் "ஆஹா! இப்படி ஒரு அருமையான பழத்தைக் கவனிக்காமல் இருந்துவிட்டோமே!" என்று நினைத்து ஞாபகமாகப் புது வருஷ வரவுசெலவுத் திட்டத்தில் வாழைப் பழத்துக்கு ரொம்ப 'கௌரவம்' கொடுத்து விட்டார். (விற்பனை வரி விதிக்கும் பொருள்களில் வாழைப் பழமும் இடம் பெற்றிருக்கிறது!)

பரம ஏழை முதல் மகாராஜாக்கள் வரையில் சகலரும் உண்பதும், அதிகமாய் ஏழை எளியவர்களுக்கு உணவாக உபயோகப்படுவதுமான வாழைப்பழத்துக்கு வரி விதிப்பது நியாயமல்ல. 'அப்படித்தான் வரி விதிப்பேன்: இஷ்டமில்லாவிட்டால் வாழைப் பழத்தை வாங்கிச் சாப்பிட வேண்டாம்' என்று நிதி மந்திரி அவர்கள் ஒருவேளை சொல்லக்கூடும். அப்படிச் சொன்னால், நாலு வாழைப்பழத்தை வாங்கிச் சாப்பிட்டு விட்டு குளிர்ந்த தண்ணீரை இரண்டு கை அள்ளிக் குடித்து ஒருவேளை பசியைத் தணித்துக்கொள்ளும் ஏழை எளியவர்களின் 'வாழ்த்துதல்' அவருக்குக் கிடைக்கும்!

மட்டக்களப்பு
14—3—49 சு. மு. சொக்கலிங்கம்

ஆபாசப் பழக்கம்

தமிழர்கள் அனைவரும் ஆண்டவன் மீது அளவற்ற பக்தியுள்ளவர்கள். அவர்களிடையே உண்டான அளவற்ற பக்தியினால் தானே வானளாவும் கோயில்கள் இன்று நிகழ்கின்றன.

தமிழ் நாட்டில் உள்ள மக்கள் அந்தக் கோவில்களில் எத்தனையோ விசேஷங்கள் கொண்டாடுகிறார்கள். ஆனால் அவைகளில் சில நிகழ்ச்சிகள் ஆபாசமாகவும் ஒழுங்கீனமாகவும் நடைபெறுகின்றன.

கோயில்களில் நாசர்கள் எனும் வர்க்கத்தாரால் நிகழும் தொல்லைகள் அனந்தம்! ஏதோ ஒரு தோல் பையைத் தோளில் மாட்டிக் கொண்டு நீரைக் கொணர்ந்து சந்நிதியிலே ஒரு முழ உயரத்திற்கு நிரப்பிவிடுகின்றனர். இன்னும் அவர்கள் பழத்தையும் கடலையையும் பிசைந்து கவளம் எடுப்பதும், அவர்கள் வாயில் போட்டதைப் பிறர் வாங்கி உண்ணுவதும் ஆகிய காணத்தகாத இழிவான செயல்கள் இன்றும் நடந்து வருகின்றன.



மூஞ்சூறு:—சுவாமி, கொஞ்சம் இந்தக் கணக்கைக் கேளுங்கள்! கோடி விட்டுக் கோமுசுவரய்யரின் போன வருஷத்து வேண்டுதல் பாக்கி தேங்காய் நூற்றெட்டும் இன்னும் வரவில்லை. அப்புறம் பரமேசுவர முதலியார் உடைத்த தேங்காயில் பாதி அழுகல்!......

பிள்ளையார்:—ஓய், நிறுத்தும்! தேங்காய் விலை இப்போது யானை விலை, குதிரை விலையாக இருக்கிறது! விற்பனை வரி வேறே போட்டு விட்டார்கள். ஏதோ இந்தமட்டாகிலும் அழுகல் தேங்காயாவது வருகிறதே என்று சந்தோஷப்படும்...... (கோயில் மணி அடிக்கிறது!)

மேற்கண்ட சம்பவங்கள் நடக்கும் பொழுது அவர்கள் செய்யும் ஆர்ப்பாட்டங்கள் நம்மைச் சற்று சாந்தமாக இருந்து பிரார்த்தனை செய்யக்கூட விடுவதில்லை. அவர்களால் பல்லாயிரக்கணக்கான மக்கள் படும்பாடு சொல்லி முடியாது. இவைகளை எல்லாம் பார்க்கும் பொழுது மிஸ். மேயோ எழுதியது கூட நாம் நாளுக்கு நாள் உண்மையெனத் தோன்றுகிறது.

இன்னும் எத்தனையோ ஆபாசங்கள் நடைபெறுகின்றன. சர்க்கார் சினிமாவில் மட்டும் ஹிந்து தெய்வங்களை ஆபாசமாகக் காட்டுவதைத் தடுத்தால் போதாது. இங்கு ஹிந்துக் கோவில்களிலுள்ள இந்த ஒழுங்கீனங்கள் அனைத்தும் அவசியம் ஒழிய வேண்டும். இல்லையேல் தமிழ் நாட்டிற்கே பெரும் இழுக்கு ஏற்படும். இந்த விஷயத்தில் சர்க்கார் தீவிர முயற்சி எடுக்க வேண்டும்.

பெரியநாயக்கன்
பாளையம், 19-3-49 வெ. ஜெயராமன்

○●○

விஞ்ஞானமும் தமிழும்

பெரும்பாலும் கல்லூரிகளில் தற்போது விஞ்ஞானம் ஆங்கிலத்தில்தான் போதிக்கப்படுகிறது. கல்லூரிகளிலும் ஆங்கிலம் நீக்கப்பட வேண்டுமானால், அப் பாடங்களையும் வேறு பாஷையில் போதிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. விஞ்ஞான சம்பந்தமான சொற்களின் பொருள் சரியாகப் புலப்படும்படியாகவும், சுலபமாகவும் மொழி பெயர்க்கப்பட வேண்டும். மேலும் ஒரே வார்த்தைக்கும் பல்வேறான மொழி பெயர்ப்புக்கள் இருக்கக் கூடாது. அதனால் மிகவும் தொந்தரவு உண்டாகும். உதாரணமாகப் பௌதிக நூலில், convex mirror என்னும் ஆங்கிலப் பதத்திற்கு, ஒரு புத்தகத்தில் 'குவிதள முகுரம்' என்றும், மற்றொரு புத்தகத்தில் 'குவிந்த தர்ப்பணம்' என்றும் மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது. இவ்வகையான பல்வேறுபட்ட மொழிபெயர்ப்புக்களை உடைய புத்தகங்களைப் பல்வேறு பள்ளிகளில் வைப்பதினால், பொதுப் பரீட்சையின்போது கேள்வித் தாளில் தமிழ்ப் பதத்தை ஒட்டி ஆங்கிலப் பதத்தையும் போடவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே, இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன், ஆங்கிலப் பதங்களுக்குத் தகுந்த மொழிபெயர்ப்புக்களைத் தொகுக்க வேண்டும். அப் பதங்களையே புத்தகம் எழுதுவோர் உபயோகிக்க வேண்டும்.

பிரதம மந்திரி நேருஜீ கூறி விரும்பியதுபோல், சில ஆங்கிலப் பதங்களை அப்படியே தமிழில் வைத்துக் கொள்வது நலம்.

காரைக்குடி
8—3—49 ம. ரா. நாகராஜன்

○●○

அரிசி விநியோகம்!

அருப்புக்கோட்டையில் இவ்வாரத்தில் காக்கிநாடாவிலிருந்து வந்த நாற்றமெடுத்த அரிசி ரேஷனில் கொடுக்கப்படுகிறது. இந்த அரிசியைச் சாப்பிடுவதால் பொது ஜனங்களுக்கு வயிற்றுக் கழிவும் வயிற்றோட்டமும் ஏற்படுகிறது. மகா மட்டரகமான அரிசி போடுவது பற்றிப் பொது ஜனங்கள் வருந்துகிறார்கள். அரிசி, உணவு மந்திரிக்கும், ராமநாதபுரம் ஜில்லா எம். எல். ஏ.க்களுக்கும் அருப்புக்கோட்டைத் தொகுதி சட்டசபை மெம்பரும் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவருமான ஸ்ரீ காமராஜுக்கும் மற்றும் பல தேசிய பத்திரிகைகளுக்கும் மாதிரிக்காக அனுப்பப் பட்டிருக்கிறது. அருப்புக்கோட்டைக்கு அரிசி தேவையில்லை என்றும், ரேஷனில் நெல் சப்ளை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், பொதுஜனத் தலைவர்கள் கையெழுத்திட்ட மகஜரும் கடிதங்களும் உணவு இலாக்கா அதிகாரிகளுக்கு அனுப்பப் பட்டிருக்கின்றன.

அருப்புக் கோட்டையில் ரேஷனில் போடும் அரிசியின் மாதிரி இத்துடன் அனுப்பியிருக்கிறேன். ரூபாய்க்கு 1 படி 6 ஆழாக்கு தான் போடப்படுகிறது. காக்கிநாடாவிலிருந்து அபிராமத்திற்கும் அபிராமத்திலிருந்து அருப்புக் கோட்டைக்கும் அனுப்ப வண்டி வாடகைகள் அளவுக்கு மீறிப் போவதால் ரூபாய்க்கு 1 படி 6 ஆழாக்குதான் கிடைக்கிறது. இவ்வளவு மட்டரகமான அரிசியை இம்மாதிரி கிராக்கி விலைக்குப் போடுவதால் ஜனங்கள் சர்க்காரைக் குறைகூற ஏதுவாகிறது. அருப்புக்கோட்டையில் பயிரான நெல் ஸ்டாக்குகள் இருந்தும், அதைப் போடாமல் அபிராமத்திலிருந்து கொண்டு வந்து இந்த நாற்றமெடுத்த அரிசியைப் போடுகிறார்கள். எங்கள் ஊருக்கு நெல் போடும்படி ஏற்பாடுகள் செய்யவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அருப்புக்கோட்டை,
29—3—49 ஏ. எஸ். மணி

[இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அரிசிக்கு மாதிரி அனுப்பி வைத்திருக்கிறார்கள். பூச்சிக் கூடு கட்டி உளுத்துப் போன அரிசியைப் பார்க்கவும் அருவருப்பாயிருக்கிறது. — ஆசிரியர்.

○●○


எங்கு செல்கிறோம்?

மாணவர்கள் மனம் ஒரே குழப்பத்தில் இருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. நன்றாகப் படித்துப் பரீட்சை எழுதி முடிப்போம் என்ற எண்ணமே வரவில்லை. காரணம் ஒரு வேளை பரீட்சையை ஒத்திப்போடலாம் என்பதே. இது சென்னைக்கு மாத்திரம் புதிதல்ல. இந்தியா முழுவதிலும் இம்மாதிரி பரீட்சைப் பேப்பர்கள் 'அவுட்'டாவது சகஜமாகி விட்டது. இதற்கு அடிப்படையான காரணம் என்ன? 40 ஆண்டுகளாக நடந்து வரும் பரீட்சைகளின் வினாத் தாள்கள் திடீரென்று மூன்று ஆண்டுகளாக வெளியாகக் காரணம் என்ன? பரீட்சை வினாக்களைக் கொடுக்கும் உபாத்தியாயர்கள் கேள்விகளை வெளியிடுகிறார்களா? அல்லது பரீட்சை எழுதும் மாணவர்கள் கலாசாலையில் படிக்கும் தருணத்தில் படிக்காமல் இருந்துவிட்டுப் பணத்தைக் கொடுத்தாவது 'பேப்பர்'களை வாங்கிப் படித்து 'பாஸ்' செய்ய முயற்சிக்கிறார்களா? அப்படியானால் பணத்திற்காகப் பேப்பர்களை மாணவர்களிடம் கொடுப்பது யார்? இது எந்த நிலைமையைக் காட்டுகிறது? இந்திய சமுதாயம் சத்தியம், நியாயம், கடமை என்ற ஒழுங்கான வழிகளிலிருந்து விலகிப்போவதைத்தான் காரணமாக நாம் கூறவேண்டியிருக்கிறது. மகாத்மா காந்தி அவதரித்து, உபதேசம் செய்த நம் நாடு எத்திசையை, எந்தப் பள்ளத்தை நோக்கிப் போகிறது என்று நம்மால் நிச்சயிக்க முடியவில்லை.

மேட்டுப்பாளையம், சென்னை
29—3—49 கண்ணன்

★ வட்ட மேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ "பொறுப்பை உணருங்கள்" என்ற கடிதம் எழுதிய காஞ்சீபுரம் ச. கி. வரதராஜுலுக்கும், "ஸ்டேஜ்-கள் தொல்லை" என்ற கடிதம் எழுதிய மாம்பலம் பி. வி. கணேசனுக்கும் ரூ. 12-8-0 விதம் பகிர்ந்து அளிக்கப்பட்டது.





இந்த புதிய சூபர்—குஷன்—புதிய மாடல் கார்களில்—எந்த மாடல் காரின் உபயோகத்துக்கும் திருப்திகரமான முறையில் சேவை செய்கிறது.

பெரியது அல்லாமல் மிருதுவானது. அதிக காற்றை உட்கொள்ளும் சக்தி வாய்ந்தது—மேலும் 24 பவுண்டு காற்று அழுத்தத்திலேயே ஓடுவது

சூபர் - குஷன் உங்கள் காரில் பொருத்தப் பட்டால் அதன் பலன்கள் :

- எவ்வித ரஸ்தாவிலும் மிருதுவான ஓட்டம்
- இறுகப் பிடிப்பு — மேலும் பத்திரம்
- உங்கள் வண்டியின் தேய்மானமும் குறைவு
- சப்தமும் பழுதுச் செலவும் மிகக் குறைவு
- அதிக மைலேஜுடன் சிக்கனமும்கூட
- வெடிப்புகளைத் தவிர்க்க அதிக எதிர்ப்பு

The new

Super Cushion

by GOODYEAR

உலக முழுவதும் ஏராளமான ஜனங்கள் வேறெந்த டயரையும்விட குட்இயர் டயர்களையே அதிகம் உபயோகிக்கின்றனர்.




Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

ஸ்ரீ
கல்கி



KALKI ஏப்ரல் 17, 1949 4 அணா


REGD. No. M. 4392



நாளுக்கு நாள் உங்கள் சருமம் அதிக அழகைப் பெறுகிறது

ரெக்ஸோனாவிலிருக்கும் கேடில்தான் உங்கள் சருமத்தை அதிக ஆரோக்கியமுடையதாகவும், மாசற்றதாகவும், மழுமழுப்பாகவும் செய்கிறது.

தினமும் குறைந்த பக்ஷம் இரு முறையாவது ரெக்ஸோனா உபயோகிக்க ஆரம்பியுங்கள். அதன் கேடில் அடங்கிய நுரையை மெதுவாக சருமத்தில் தேய்த்து கழுவுங்கள். ரெக்ஸோனாவிலிருக்கும் கேடில் உங்கள் சருமத்திற்கு புது ஆரோக்கியத்தை அளிக்கும். மேலும் சருமத்தை சுத்தம் செய்து மழுமழுப்பளித்து என்றும் திகழும் புதிய எழிலையும் தரும்.



ரெக்ஸோனா

கேடில் கலந்த சோப் இது ஒன்றே

R.P. 47-172 TM